
www.padippakam.com

தசரா அறக்கட்டளை

# கணையாழி

விலை. ரூ.10 டிசம்பர் 1999 மாத இதழ்



படிப்பகம்

www.padippakam.com




9, First Lane, Vijaya Raghava Road, T. Nagar, Chennai - 600 017.
Phone : (91) 44 - 8283298, 8263635 Fax : (91) 44 - 8250875 Tlx : (81) 41 - 8856 JAIN IN

படிப்பகம்

www.padippakam.com


# கணையாழி

9,முதல் தெரு, விஜயராகவா சாலை,
தியாகராய நகர், சென்னை-17.
தொலைபேசி: 828 3298, 826 3635,
தொலைநகல்: (91)41-825 0875,
டெலக்ஸ்: (81) 41-8856 JAIN IN

✱ ✱

கௌரவ ஆசிரியர்
கி. கஸ்தூரி ரங்கன்

நிர்வாக ஆசிரியர்
அருள்மொழிநங்கை சுவாமிநாதன்

ஆசிரியர்
மய்திலி ராஜேந்திரன்

உதவி ஆசிரியர்
யுகபாரதி

ஆலோசகர்கள்
இந்திரா பார்த்தசாரதி
சுஜாதா
டிராட்ஸ்கி மருது
க.கணேசன்
கா.அலாவுதீன்
ரெ.பாலகிருஷ்ணன்
வெ.இறையன்பு
சு.போசு
பாரதிபாலன்

பதிப்பாளர்
தமன்பிரகாஷ்

சந்தா, ஏஜென்சி தொடர்புகள்
மற்றும் கதை, கவிதை, கட்டுரை,
கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி:
கணையாழி
18, பி.பி.சி. ஹோம்,
18, செவாலியர் சிவாஜி சாலை,
தி.நகர், சென்னை-600 017
தொலைபேசி: 432 0013

வடிவமைப்பு:
சிந்து ஒளி அச்சு
தொலைபேசி: 858 8078

இன்டர்நெட் முகவரி:
http://www.pesadv.com/kanaiyazhi

அட்டையில்:
ந. பிச்சமூர்த்தி


டிசம்பர் -1999

## இந்த இதழில்




| | | |
|---|---|---|
| விவாதம் தொடர | -கார்த்திகேசு சிவதம்பி | 3 |
| போப்பாண்டவரின் மறு வருகை | -இந்திரா பார்த்தசாரதி | 6 |
| எனக்குப் பிடித்த கதை | -வல்லிக்கண்ணன் | 9 |
| ரசிகன் | -அம்ஷன்குமார் | 15 |
| பிச்சமூர்த்தியும் புதுக்கவிதையும் | -ஆர்.ராஜகோபாலன் | 18 |
| காலத்தின் குரல் | - தி.க.சி | 17 |
| பிராயச்சித்தம் | -பகவதி சரண் வர்மா | 27 |
| நான் அறிந்த ந.பிச்சமூர்த்தி | -எஸ்.வைதீஸ்வரன் | 32 |
| நினைக்கப்படும் | -மரன் | 36 |
| ந.பிச்சமூர்த்தி சில நினைவுகள் | - பி.வி.சுப்பிரமணியன் | 38 |

சம்பா நரேந்தர் குறுநாவல் போட்டிபரிசு பெறும் படைப்பு

| | | |
|---|---|---|
| சீமை அம்பத்தாறு தேசமும் | - என்.ஸ்ரீராம் | 65 |
| முக்குளித்தான்-ந.பிச்சமூர்த்தி | - தஞ்சை ப்ரகாஷ் | 68 |
| விச்சு அண்ணா | - உஷாதீபன் | 70 |

### கவிதைகள்

◆ த.கார்த்திபன் ◆ ரிஷி ◆ பழமலய் ◆ ஏ.எஸ்.எம்.அனு ◆ நா.விச்வநாதன்

### நூல் மதிப்புரை

◆ வசந்தன் ◆ சு.பொ. அகத்தியலிங்கம் ◆ சுப்ரபாரதி மணியன்

### ஓவியம்

◆ ஆதிமூலம் ◆ ஜெ.அமுதன் ◆ புகழேந்தி ◆ விஸ்வம் ◆ சிந்து

www.padippakam.com



# இயற்கையின் சீற்றமும் இந்திய மனமும்

பண்டிகைகளைப் போலவே புயல்களும்
வருடா வருடம் வந்து
போய்க் கொண்டிருக்கின்றன
ஆனாலும் இந்த முறை
ஒரிசாவில் அடித்த புயல்
தேசத்தின் சீரழிவு
இயற்கையின் சீற்றம்.
ஆதிவாசி இயற்கைக்குப் பயந்தான்
இயற்கையோடு போராடி
வெற்றி பெற்றதாக மனிதர்கள்
நினைத்தபோது
இயற்கையின் சீற்றம்
மக்களை
மறுபடியும் ஆதிவாசியாக்கியிருக்கிறது.
ஏதும் அற்று ஒருவேளைச் சோற்றுக்கும்
வானம் பார்த்த வயிறாக
அண்ணாந்து பார்த்து சோற்றுப்
பொட்டலங்களுக்குக்
கையேந்திக் கதற வைத்துவிட்டது.
விஞ்ஞான யுகத்தின் விளிம்பில் நிற்கிற
நம்மை
இயற்கை கொஞ்சம்
சீண்டிப்பார்த்திருக்கிறது.
சாட்டிலைட்டுகள் வானிலை
ஆராய்ச்சிகள்
மக்கள் நம்பிக்கையை எப்போது
பெறப்போகின்றன?
ஆயிரக்கணக்கில் மக்கள்
பல்லாயிரக்கணக்கில் கால்நடைகள்
இலட்சக்கணக்கில் உயிரினங்கள்
நான்கே நாட்களில் சுவடழிந்தன.
அழகான புவனேஸ்வர்
எழில் கொஞ்சிய மரம் செடி கொடிகள்
மீண்டும் தலைஎடுக்க
எத்தனை ஆண்டுகள் தவம் கிடக்கணும்?
ஆயிரம் ஆண்டுப் பழமையாகியும்
கோயில்கள் தப்பித்திருக்கின்றன
நம்பிக்கைக்கு இன்னமும்கூட
இடமிருக்கிறதுதான்.
ஒரிசாவில்
வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பைவிட
நிருவாகச் சீர்கேட்டால் ஏற்பட்டது
அதிகம்.
நமது நிருவாகமுறை
விசித்திரமாகிவிட்டது.
கேட்டுப் பழக்கப்பட்டிருக்கிறார்களே
தவிர
செய்து பழக்கப்படவில்லை.
சொல்வதைக் கேட்டே
பழக்கப்பட்டிருக்கிறதே தவிர
சொந்தமாய்ச் செயற்படும்
பழக்கமில்லை.
சொந்த புத்திக்காரர்களையும்
ஆட்சியாளர்கள் நாளடைவில்
சொல் புத்திக்காரர்களாகப்
பழக்கிவிடுகிறார்கள்.
ஒரிசாவில் புயல் அடித்தாலும்
ஒவ்வொரு மாவட்டத்திலும்
வட்டத்திலும்
உணவுப் பொருள் இல்லாமலா
போயிருக்கும்
புயலில் தகவல் தொடர்புகள்
தடைபட்டுப் போயிருக்கும்
மேலிருந்து ஆணை கேட்க முடியாததால்
நிருவாகம் செயலற்றுப் போயிருக்கும்
சொந்த புத்திகொண்டு செயலாற்றும்
பழக்கம் இல்லாததால்
சொல் புத்திக்காக நிருவாகம் காத்துக்
கிடந்திருக்கும்
அதனால்தான்
மாவட்ட நிருவாகிகளே
தலைமறைவாகி யிருக்கிறார்கள்.
புயல் ஓய்ந்த கையோடு
அரசியல் வாதிகள் ஆகாயமார்க்கமாய்
வரப்போகிற தேர்தலுக்கு வாக்கு
சேகரித்திருக்கிறார்கள்.
செத்து மிதந்துவரும்
கால்நடைகளைக்கூட
எடுத்துப் புதைக்காமல் ஒரிசா மக்களும்
வேடிக்கை பார்க்கப்
பழக்கப்பட்டிருக்கிறார்கள்.
தொலைக்காட்சிகளிலிருந்து எதைக்
கற்றுக் கொண்டோமோ இல்லையோ
எதையும் வேடிக்கை பார்க்கக் கற்றுக்
கொண்டிருக்கிறோம்.
பாதிக்கப்பட்ட மக்களுக்கு
உணவு துணி என்று அனுப்பி
வைக்கிறார்கள்.
அழிவிலிருந்து நாட்டை மீட்க
மருத்துவர், பொறியாளர்களும்
தேவையல்லவா?
இயற்கைக்கு மனிதன் எவ்வளவு
சாதாரணம்
என்பதை
ஒரிசா மீண்டும் உணர்த்தியிருக்கிறது.
ஒரிசா
வரலாற்றுக் காலந்தொட்டு
மனிதர்களுக்கு
அவ்வப்போது இப்படி அறிவுறுத்தி
வந்திருக்கிறது.
அசோகச் சக்கரவர்த்திக்குக்
கலிங்கப்போர்தான் போதிமரமானது.
ஒரிசாவின் பழைய பெயர்
கலிங்கம்.
கலிங்கத்துப்பரணி தமிழ்ச்
சிற்றிலக்கியம்
ஆயிரம் யானையைக் கொன்றவனைப்
பாடுவது
பரணி இலக்கியம்.
அதே ஒரிசாவில்தான்
ஆஸ்திரேலியப் பாதிரியாரும்
அவருடைய குழந்தைகளும்
கட்டிவைத்து உயிரோடு
கொளுத்தப்பட்டார்கள்.
கொன்றவர்களை மன்னிக்கக்கூறி
கணவர்விட்ட பணியைத் தானும்
தொடர்வதாகப்
பாதிரியார் மனைவி தெரிவித்தார்.
எந்த உயிரையும் கொல்லக் கூடாதென்று
இரவுக்கு முன்னே உண்டு வாழ்ந்த
எண்ணாயிரம் சமண முனிவர்களைக்
கழுவிலேற்றிய நாடு இது.
ஆனாலும்
இங்கேதான் பக்தனைப் போல்வந்து
தன்னைக் கொன்றவனைத்
'தத்தா நமரே காண்' என்று
கொன்றவனைக் காத்து செத்துப்
போனார்
மிலாடுடையார் என்ற மெய்ப்பொருள்
நாயனார்.
பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்த
காந்தியைக்
கும்பிட்ட கைக்குள் துப்பாக்கி மறைத்து
சுட்டுக் கொன்ற கோட்சேயிடம் கூட
அன்பு காட்டச் சொன்னவர் மகாத்மா.
இன்றுகூட
ஸ்ரீபெரும்புதூரில் மாலை அணிவித்து
காலில் விழுந்து கும்பிடும் நிலையில்
வெடித்துச் சிதற வைத்தவர்களுக்கு
இறந்தவர் தன் கணவர் என்ற
நிலையிலும்
கருணை காட்டச் சொல்லி இருக்கிறார்
சோனியா காந்தி.
அவர் இந்தியரோ இத்தாலியரோ
ஆனால்
இது
இந்திய மனம்.
வாழ்க்கைப் பாதையில் விரக்தி
முட்களை விதைக்கும்
இயற்கையின் சீற்றத்திற்கு இடையில்
இன்னும்கூட
இந்த உலகில் நம்பிக்கை வைக்க
இடமளிக்கிறது இந்த மனம்.



படிப்பகம்

www.padippakam.com

# விவாதம்

தமிழவன்


விவாதம்

# தொடர----

கணையாழி நவம்பர் இதழில் பேரா.கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் விளக்கம், விவாதத்தைத் தொடரும் முகமாக வெளியிடப் பட்டுள்ளது. அவரது அந்த விளக்கத்தில் என்னைக் கவர்ந்த முதல் விஷயம் எவ்வளவு நாகரிகமாக விவாதம் செய்யவேண்டும் என்று அவர் கற்பிக்கிறார் என்பது. வேறு கருத்துக்கள் சொல்லப்பட்ட உடன், உணர்ச்சி வசப்பட்டு ஆக்ரோஷம் கொள்ளும் நம் சூழலில் பேரா. கா.சிவத்தம்பி சொல்லித்தரும் இந்தப்பாடம் விவாதத்தில் ஈடுபடுபவர்கள் கண்டிப்பாகக் கற்றுக் கொள்ளத்தக்கது.

முதலில், பேரர்சிரியர் கூறுவது போல் மார்க்சிய எழுத்தாளர் குழுமம் ஒன்றின் பார்வையில் நெகிழ்ச்சி வேண்டும் என்ற கருத்துக்கு வருவோம். மார்க்சியம் என்பது புரட்சி சார்ந்த தத்துவம். அந்தத் தத்துவம் எப்போது, எப்படி இறுகியது? அதுவும் தமிழ்ச்சூழலில். கேரளச் சூழலில் இலக்கியத்தில் இறுகாத மார்க்சீயம், த்மிழில் ஏன் இறுகியது? அதாவது, இது தமிழ்ப் பண்பாடு மார்க்சீயத்துக்கு கொடுத்த 'கொடையா'? அல்லது சிலர் சொல்வது போல் மார்க்சீய இலக்கியக் கோட்பாடே இறுகலானதா? இந்த ஒவ்வொரு வரியும் பலப்பல பிரச்சனைகளை உள்ளடக்கியது.

எனக்குத் தமிழ்ப் பண்பாட்டுக்கும் மார்க்சீயத்துக்கும் உள்ள உறவு பற்றிய ஆய்வு முக்கியமானதாகப்படுகிறது. தமிழ்ப் பண்பாடு பிற கலாச்சாரப் பார்வைகளை எதிர்கொள்ளும் பண்பு எத்தகையது? நவீன யுகத்தைத் தமிழ்க் கலாசாரம் எப்படி எதிர்நோக்கியது? ஒன்று, கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூல் தத்துவமயப் படுத்தியது போல், மேற்கத்திய முறையில் அப்படியே புல்டோசர் போட்டு தமிழை அதன் சுய அடையாளங்களைப் பற்றிக் கவலைப் படாமல் 'சீர்திருத்துவது'. இரண்டாவது ஜோதி ராமலிங்கம் தனது சிந்தனையாலும் செயலாலும் கண்டுபிடித்த தமிழ் சோசலிசத்தைப் போன்ற சுயமரபின் மலர்ச்சியைக் கண்டுபிடிப்பது. மூன்றாவது ஒன்றும் இருக்கிறது. எந்த மலர்ச்சியையும் இனங்காணத் தெரியாத மக்குத்தனமான பழமை பேணல். இந்த மூன்றாம் பாதை சுயவிமர்சனமற்ற பூஜாரித்தனம். இந்த மூன்றாம் பாதைதான் கடந்த ஐம்பது வருட தமிழ்க் கலாச்சாரப் பார்வையாக வந்துவிட்டது. கால்டுவெல்லின் மேற்குமயப்படுத்தலும்





படிப்பகம்

www.padippakam.com

சுயவிமர்சனமற்ற பூஜாரித்தனமும் இணைந்த ஒரு போலியான (எந்திரங்களின் தீனிக்கான) மரபு தமிழில் வந்ததற்குப் பலியான பல் இயக்கங்களில் ஒன்றுதான் முற்போக்கு இயக்கம் என்று கூற முடியுமா? அதனால்தான் டெல்லியில் இருந்துவரும் முற்போக்கு எழுத்தாளர் கார்ஸியா மார்க்யொஸ், சோசலிச எழுத்தாளர் என்றும், தமிழகத்திலுள்ள முற்போக்கு எழுத்தாளர் கார்ஸியா மார்க்யொஸ் பிற்போக்கு எழுத்தாளர் என்றும் கூறவேண்டிய நிர்ப்பந்தம்.

தமிழ்ச்சூழலில் நமக்குப் பயம் அதிகம். சத்தற்ற மரபுப் பக்தி அதிகம். ஆனால் இந்த மனநோய் அவஸ்தைகள் இன்றும் உலகை வியக்க வைக்கும் ஆசான்களான மார்க்ஸையும் லெனினையும் குருவாகக் கொண்ட முற்போக்கு எழுத்தாளர்களுக்கு ஏன் வந்தது? இன்னொரு காரணமும் இருக்கலாம். இயக்கத்தைத் தனது வலையில் போட்டுள்ள ஓரிரு தலைவர்களுக்குப் புதிய கேள்விகள் பிரச்சனையைத் தரலாம். தனது தலைமை பறிபோகலாம். ஒரு கூட்டத்தைப் பயன்படுத்தி எந்தப் புதுக்கேள்வியும் இயக்கத்துக்குள் வராமல் தடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு. இப்படி ஏதேனும் பிரச்சனை தமிழகத்தில் நடந்ததா என்ற கேள்வி வேண்டியிருக்கிறது. இன்றைய மதவாதம் பரவும் இந்தியச் சூழலில் தெளிவாகத் தொடர்ந்து இயங்கும் இரண்டு கம்யூனிஸ்ட் இயக்கங்களின் தமிழகக் கிளைகளான எழுத்தாளர் குழுமங்கள் தங்களை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டிய தருணம் இது.

சிவத்தம்பி இப்படி ஏன் தெளிவாகச் சொல்லவில்லை என்றால் இப்படி நேரடியாகச் சொல்வதை அவர் 'விரோத உணர்வு' என்று கருதுகிறாரோ என்னவோ? அப்படி அவர் நினைக்கமாட்டார். நட்புணர்வுடன் சொன்னாலும் சரி விரோத உணர்வுடன் சொன்னாலும் சரி, சொல்வது சரியா, தவறா என்று பார்ப்பது தானே சரியாக இருக்கும். அப்படியான பார்வை, எழுத்தாளர் குழுமங்களில் கடந்த பல ஆண்டுகளாய் கோலோச்சியதா? புதியதாய் வந்த எழுத்தாளர்களை இழந்தது தானே மிச்சம். இன்றுவரை மார்க்சிய எழுத்தாளர் குழுமங்கள் தமிழுக்குத் தந்த எழுத்தாளர்கள் எத்தனை பேர்? கார்ஸிய மார்க்யொஸ் போன்ற சோசலிச எதார்த்தவாத எழுத்தாளருடன் ஒப்பிடும்போது எத்தனை தமிழ் மார்க்சிய எழுத்தாளர்கள் தேறுவார்கள்? அனைத்திந்திய அளவில் எத்தனை முற்போக்குத் தமிழ் எழுத்தாளர்கள் தேறுவார்கள்? இப்படியெல்லாம் எத்தனை பேர் யோசித்திருக்கிறார்கள்? 'எழுத்தாளர்களின்' வேலை இதைத் தவிர வேறு என்ன? எங்கே நாம் கோட்டைவிட்டோம்? இங்கு கோட்டை விட்டதுக்கும், ஒரு மதவாதக் கட்சிக்கு அரசியலில் கோட்டை விட்டதுக்கும் தொடர்பு உண்டா? இப்படியெல்லாம் நிறைய நிறையக் கேள்விகள்.

அடுத்த பிரச்சனைக்கு வருகிறேன். 'பண்பாடு நிலை நின்ற நோக்கு' பற்றி நானும் சிவத்தம்பியும் ஒத்த கருத்துத் தெரிவித்துள்ளோம். அதன் தொடர்ச்சியா எழுப்பப்பட்ட முக்கியமான கேவிதான், ''பண்பாட்டுக்கும் உபத்தி உறவுகளுக்குமான உறவு எத்கையது. சப்பைக்கட்டுக் கட்டாம பதில் சொல்ல வேண்டும்'' என்பது இளமையில் மார்க்சிய விமர்சன கற்க எனக்கு மார்க்கத்தரிசிகளா அமைந்த அறிஞர்கள் சிலரி ஒருவரான சிவத்தம்பி இந்த முகியமான கேள்வியை என் கட்டுரையிலிருந்து எடுத்து முன் வைப்பது அவரது இதுகால வரையிலான தத்துவத் தேடலைக் காட்டுகிறது அவரது நேர்மையையும் காட்டுகிறது. இக்கேள்வியைத் தனிப்பட்ட முறையில் சிவத்தம்பியிடம் நான் கேட்கவில்லை. அக்கறை உள்ள அத்தனை பேரிடமும் கேட்கிறேன். அத்தோடு இன்றைய மார்க்சியப் பார்வைக்கும் தென்கிழக்காசியச் சமூகங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கும் உள்ள உறவு பற்றிய கேள்வியாகவும் இந்த வாசகத்தை நான் அமைத்துள்ளேன்.

**'பண்பாடு நிலை நின்ற நோக்கு' பற்றி நானும் சிவத்தம்பியும் ஒத்த கருத்துத் தெரிவித்துள்ளோம்.**

அதாவது பண்பாட்டுக்கும் உற்பத்தி உறவுக்கும் உள்ள தொடர்பு நேரடியானதல்ல. ஒன்று இன்னொன்றை நேரடியாகத் தீர்மானிக்காது. இது இன்று மார்க்சியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனை சிவத்தம்பி ''ஒரு மேலாண்மை உற்பத்தி முறைமைக்குள் பல (பழைய) உற்பத்தி முறைமைகள் நிற்கலாம்'' என்று கூறி ஏற்றுக் கொள்கிறார். இதன் தொடர்ச்சியாக மார்க்ஸ் கூறியது ஒன்று(கீழ்த்தளம்), இன்னொன்று (மேற்தளம்). இது கடைசிக் கட்டமாகத்தான் தீர்மானிக்கப்படுகிறது. அந்தக் கடைசிக் கட்டம் வராமலும் போகலாம் என அல்துஸ்ஸர் விளக்கி மார்க்ஸைச் சுட்டுகிறார். ஆக பண்பாட்டுக்கும் உற்பத்தி உறவுக்கும் உள்ள உறவு மங்கலாக்கப்படுகிறது. இந்த மங்கிய இடத்தில் எல்லாப் பிரச்சனைப்பாடுகளும் நடக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

தென்கிழக்காசியச் சமூகங்களின் மதத்துக்கும் அரசியலுக்கும் உள்ள சிக்கல், இன அடையாளத்துக்கும் தேசத்துக்கும் உள்ள பிரச்சனை, சாதிக்கும் சமூகத்துக்கும் உள்ள சிக்கல் போன்ற பல பண்பாடு சார்ந்த சமூக அரசியல் பிரச்சனைகளை இனி பழைய முறையில் விளக்கமுடியாது. இங்கு இலக்கியம் முதன்மைத்தன்மை கொள்கிறது என்பது என் அபிப்ராயம். நம் முற்போக்கு எழுத்தாளர்களின் ஒரு படைப்புக்கூட இங்கு தாக்குப்பிடிக்க முடியாதபோது கார்ஸிய மார்க்யொஸ் ஏன் எல்லோரின் கவனத்தைக் கவர்கிறார் என்பதற்குப் பதில் இந்த ''மங்கிய இடத்தை'' நம் தமிழ் மார்க்சியர்கள் விளக்கும் முறையில் தான் உள்ளது.

இனி மூன்றாவதாக ஒரு முக்கிய சிந்தனை. அதாவது 'பண்பாடு' இப்போது ஒரு காலத்தில் பொருளாதாரம் இருந்த இடத்துக்கு வந்து விட்டது. பண்பாடு மிகக் கூடிய பெரிய விஷயம். அதற்குள் இலக்கியம் உள்ளது, பொருளாதாரம் உள்ளது; மதம்,இன அடையாளம் எல்லாம் உள்ளன. இதில் ஒன்று இன்னொன்றை விலக்கமுடியாது; தீர்மானிக்க முடியாது. இலக்கியத்தை ஒரு 'பிரதி'(Text) -பிரதி என்பது ஊடுபாவு -என்றும், சொல்லாடல்(Disowse) என்றும் விளக்கிப் பார்த்து ஓய்ந்து விட்டார்கள். ஆக பிரச்சனைகள் மேலும் மேலும் ஆழம் கொண்டு போகின்றன. சிவத்தம்பி சொல்லும் வார்த்தையைப் பயன்படுத்துவதானால் விடயிநோக்கு(Olzectivity) என்பது பிரச்சனைக்குரியதாக உண்மையிலேயே ஆகிறது. கட்டியெழுப்பல் உருவாக்கம் என்று சிவத்தம்பி கூறும் சிந்தனைமுறை பரிசீலிக்கத் தக்கதாகிறது. இதன் தொடர்ச்சியாக ''அறியப்பட்டது ஒரு தாக்கமே'' என்ற சிந்தனையும் தோன்றுவது பரிசீலிக்கத்தக்கவை தாம் என்பது என் வாதம். அதாவது 'மங்கல் பிரதேசம்' என்பதை மூன்றாம் உலக அறிதல்முறையாகக் (Epcotemology) கொண்டால் ஒருவிதக் கிழக்கத்தியவாதச் சிந்தனையை வந்தடைகிறோம். முக்கியமாகக் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியது மேற்கத்திய முறை விடயிநோக்கு. இந்த இடத்தில் சிவத்தம்பி மாறுபடுகிறார். ''சப்பைக்கட்டுக் கட்டாமல் பதில் சொல்ல வேண்டும்'' என்ற அடாவடித் தமிழ் நடையின் முனை இங்கே பண்பாட்டுக்கும் உற்பத்தி உறவுக்கும் உள்ள தொடர்பு ''மங்கல்'' என்பதைச் சுட்டுவது தான்.

''இந்த நிலையில் என்னால் நண்பர் தமிழவனின் வினாவுக்கு உடனடியாகப் பதில் சொல்ல முடியாது'' என சிவத்தம்பி சொல்வதை நான் இப்படிப் புரிந்து கொள்கிறேன். அதாவது உற்பத்தி முறைக்கும் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பு ஒரு மங்கல்பிரதேசம். அதாவது விடயிநோக்கினைக் கொண்டுள்ள அறிஞர்களால் பதில் சொல்ல முடியாத பிராந்தியம் இது. என் பதில்: விடயிநோக்கு என்ற அறிவொளிக் காலக்கண்ணாடியால் பார்க்க முடியாத பிரதேசம் இது. பதில் சொல்ல முடியாத நிலை இது. சொல்ல முடியாதென்பதும் ஒரு சொல்லுதல்தான்.

எனவேதான் உற்பத்தி உறவுக்கும் பண்பாட்டுக்கும் (இலக்கியம் போன்றன) உள்ள உறவை புதிய முறையில் அறிய ஏதாவது ஒரு வகையில் பின்நவீனத்துவ அறிதல் வேண்டும். இந்த இடத்தில் பிரடெரிக் ஜேம்சனின் பின்முதலாளித்துவம் (Late Capitalism) பற்றிய வியாக்கியானம் ஒருவித இரட்டைமை(Double) மாதிரிச் சிந்தனை (ஒரே நேரத்தில் இருமாறுபட்ட முறைகள் பிரசன்னமாவது)யை முன் வைப்பதுடன் ஒப்பிட்டு இலக்கியவாதியான என் 'மங்கல்பிரதேசம்' என்ற விளக்கத்தையும் கருத முடியலாம். இங்கு இலக்கியவாதிகள் சொல்லும் சமூகத்துக்கும் இலக்கியத்துக்கும் உள்ள தொடர்பு நேரடியானதல்ல என்ற வாதத்தையும் பொருத்திப் பார்க்கலாம். ஓரளவு கான்ட் போன்றவர்களை ஏற்றுத்தான் ஆகவேண்டும் போலுள்ளது. கான்டை ஏற்கவேண்டும் என்று கூறுவதற்கு பயப்பட இன்னும் சோவியத் யூனியனா இருக்கிறது? சோவியத் யூனியன் மறைந்த பிறகு தத்துவமும் மாறுபடும் அல்லவா?

இப்படியெல்லாம் யோசித்துப் பார்க்க வழிவைத்த விமர்சகர் சிவத்தம்பியின் பிரம்மாண்டமான தமிழ்ச்சிந்தனை மரபுக்கு நன்றி கூறுவதுதான் என் இந்த அவருடனான எதிர்வினை. பிறரும் இவ்விவாதத்தில் கலந்து கொள்வார்கள் என்பது என் நம்பிக்கை.

## விரைவில்...

**மலேசியச் சிறப்பிதழ்**

**கலை- இலக்கிய- பண்பாட்டு வேர்களின் பதிவுகளாக- மலரவிருக்கிறது. மலேசியப் படைப்பாளிகளின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.**





படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# போப்பாண்டவரின் மறு வருகை

போப் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு, 'நம் புண்ணிய பூமியாம் பாரதத் திரு நாட்டில்'. ஒரு பெரிய விவாதப் புயல், இது எந்த அளவுக்குச் சேதம் விளைவிக்கப் போகின்றது என்ற அச்சத்தை உண்டு பண்ணும் வண்ணம் வீசிக் கொண்டிருந்தது.

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த சம்பவங்களுக்கு, இன்று போப் மன்னிப்புக் கோர வேண்டுமென்று ஒரு கோஷம்; மதமாற்றம் நிகழாது என்று போப் உத்திரவாதம் அளிக்க வேண்டுமென்று இன்னொரு கோஷம்; மத சம்பந்தமான மாநாட்டுக்கு வருகை தரும் போப்புக்கு, அரசாங்கம் எதற்காக வரவேற்பு அளிக்க வேண்டுமென்ற கேள்வி!

ஹிந்து மதத்தைக் கட்டிக் காக்கப் போவதாகக் கங்கணம் கட்டிக் கொண்டு, தங்களைச் சுயமாகவே அவ்வாறு நியமித்துக் கொண்ட மதக் காவலர்கள் எழுப்பிய குரல்கள் இவை!

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியச் சமுதாயம் எப்படி இருந்தது? ஜாதிப் பிரிவுகளாய் சிதறுண்டிருந்த சமூகம் அது. கல்வி வாய்ப்பு ஒரு சிலருக்குத்தான் என்பதை மேல் வரிச் சட்டமாகக் கொண்டிருந்த சமூகம் அது. பெரும்பான்மையோர், சமூகத்தின் விளிம்போரத்தில் இருந்து, வறுமையினால் அவதியுற்ற சமூகம் அது.

வியாபாரிகளோடு, கிறித்தவ வேத குருக்களும் வந்தார்கள் என்பது உண்மைதான். வணிகம், மதம் ஆகிய இரண்டுமே இந்நாட்டில் கால்கொள்ள வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள்; அதுவும் உண்மைதான்.

ஆனால், அவை இரண்டுமே கால் கொண்டு, பரவுவதற்கான சூழ்நிலை இந்த இந்தியச் சமுதாயத்தில் இருந்தது என்பதுதான் முக்கியமான விஷயம். அதை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதில் என்ன தவறு இருக்கமுடியும்?

யூத மதத்திலோ, அல்லது ஹிந்து மதத்திலோ இருப்பதுபோல், ஒருவன் பிறப்பினால்தான் அந்த மதத்தைச் சார்ந்தவனாக இருக்க முடியுமென்ற நிலை, வேதப் புத்தகத்தை (பைபிள், திருகுர்ரான்) ஆதாரமாகக் கொண்ட இம்மதங்களில், (Scriptuary religious) இல்லையே!

இக்காலத்திய அரசியல் கொள்கைகளைப் போல, பெருவாரியான மக்கள் இம்மதங்களைத் தழுவும்படியாகச் செய்யவேண்டுமென்பதுதானே, அக்காலத்தில் இம்மதத் தலைவர்களுடைய கோட்பாடாக இருந்தது? மதம் மாறுவதற்குத் தயாராகப் பலர் இருந்தால், அவர்களை அவ்வாறு ஏற்றுக் கொள்வதைத் தவறு என்று எப்படிச் சொல்ல முடியும்?

பிறப்பினால் துக்கப்பட்டு, தங்கள் அடிப்படை உரிமைகளைக்கூட இழந்து நிற்கும் ஒரு சமூகம், அவ்வுரிமைகளைப்பெற முடியுமென்ற நம்பிக்கையினால், மதத்தைத் தழுவுவதில் தவறேதுமில்லை. இதுதான் நம் வரலாற்றில் நிகழ்ந்திருக்கிறது.

*11ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் கிறித்தவ மதம் வந்திருந்தால், நந்தனும் கிறித்தவனாக மாறியிருக்கக் கூடும்!*

போப் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்பதைப் போன்ற அபத்தம் வேறு இருக்கமுடியாது. நம் வரலாற்றைப் பார்த்தால் ஒவ்வொரு மதத் தலைவரும் மன்னிப்புக் கேட்க வேண்டிய சம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன. எண்ணாயிரம் சமணர்கள் கழுவிலேற்றப்பட்டிருக்கிறார்களே, இதற்கு யார் மன்னிப்புக் கேட்கவேண்டும்? இடை நூற்றாண்டு களில் சைவ—வைணவச் சண்டைகள் நிறைய நிகழ்ந் திருக்கின்றனவே? இதற்கு யார், யாரிடம் மன்னிப்புக் கேட்பது?

வரலாற்று அடிப்படையில் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று வந்தால், வின்ஸ்டன் சர்ச்சில், இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்தபோது சொன்னது நினைவுக்கு வருகிறது.

'Never in the field of human endeavour was to much

**இந்திரா பார்த்தசாரதி**



படிப்பகம்

www.padippakam.com

owed so many to so few'. —அதாவது, ''மனித சமுதாயத்தினர் பரஸ்பரம் ஒருவொருக்கொருவர் இந்த அளவுக்கு உதவி இருப்பதன் காரணமாக யாரும் யாருக்கும் கடன்பட்டிருக்கவில்லை?"

அதுபோல், 'மதத்தின் பேரில், வரலாற்றில் பல அக்கிரமங்கள் நடந்து இருக்கின்றன என்பதால், எந்த மதத்தினரும் இன்னொரு மதத்தினரிடமிருந்து மன்னிப்புக் கோரும் நிலையில் இல்லை' என்று சொல்லலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில், இப்பொழுது பத்திரிகை களில் எழுதப்படுகின்ற சொற்கள், 'Fundamentalism', 'Secularism' ஆகியவற்றைச் சற்று ஆராயலாமென்று தோன்றுகிறது.

'Fundementalism' அதாவது, 'அடிப்படை வாதம்' என்ற சொல்லை இப்பொழுது இஸ்லாம் மதத்துடன் இணைத்து அமெரிக்கா, பிற நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. இதில் காணும் irony என்ன வென்றால், இச்சொல் விளைவதற்கான மதக்கனம் அமெரிக்காதான்!

முதல் உலகப் போருக்குப்பின் (1914-18) அமெரிக்காவில் 'ப்ராடஸ்டன்ட் பிரிவைச் சேர்ந்த கிறித்தவர்கள், அடிப்படைக் கிறித்தவ நெறிகள் என்று பைபிளில் சொல்லப்பட்டிருப்பனவற்றை (அதீத நிகழ்வுகள், உலகத் தோற்றம் அதாவது, டார்வின் கொள்கைகளை மறுக்க வேண்டிய அவசியம் — தேவனின் மறுவருகை போன்றவை) கேள்விக்குரிய னவாக ஆக்காமல், அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். இது 'Fundamentalism' (அடிப்படைவாதம்) என்று குறிக்கப் பட்டது. மதசம்பந்தமான இந்த அடிப்படைவாதம் அரசியலையும் ஆட்கொண்டது. ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவாக, அமெரிக்கா விலும் பரவத் தொடங்கிய சமூக சமதர்மக் கருத்துகள், விஞ்ஞானக் கண்ணோட்டம் ஆகியவற்றுக்கு எதிரான அர்சியல் அடிப்படைவாதம். ஆனால் இந்த அடிப்படை வாதத்தினர் சிறுபான்மையோராக இருந்தனர் என்பதுதான் அமெரிக்கா செய்த அதிர்ஷ்டம்.

அடிப்படை வாதம் தோன்றுவதற்கான காரணம், பாதுகாப்பின்மை உணர்வுதான். கறுப்பர்களுக்குச் சமஉரிமை வழங்கிவிட்டால், அவர்கள் வெள்ளை இனத்தை ஆளத்தொடங்கி விடுவார்களோ என்ற அச்சந்தான் அமெரிக்காவில் இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஏற்பட்ட அடிப்படை வாதத்துக்கான காரணம். மேற்கத்திய நாடுகளும் அமெரிக் காவும், ஈரான், பாகிஸ்தான், ஆப்பிரிக்க இஸ்லாமிய நாடுகள், வளைகுடா நாடுகள் ஆகியவற்றில் பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கையே, இஸ்லாமிய அடிப்படை வாதத்துக்குக் காரணம். பெரும்பான்மையான மக்கள், அடிப்படை வாழ்க்கை வசதிகளையோ, அல்லது மனித உரிமைகளையோ பெற்றிராத இந்நாடுகளில் சர்வாதிகார ஆட்சிமுறைமையைத் தான் ஆதரித்து வருகின்றன மேலைய நாடுகள். இச்சூழ்நிலையில் மதந் தான் தங்களுக்குப் பாதுகாப்பாகவும், அடையாளமா கவும் இருக்கும் என்று இந்நாட்டு மக்கள் நினைப்பதில் தவறு எதுவுமில்லை.

இஸ்லாமிய அடிப்படை வாழ்வு குறித்து இந்தியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுக்கிறது என்றால் அதன் பொருள், இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு எதிராக, இந்துத்துவ அடிப்படை வாதம் அமைய வேண்டுமென்பதுதான். மூன்றாம் உலக நாடுகளில் மேலைய நாடுகள் இவ்வகையான பிரித்தாளும் சூழ்ச்சியைத்தான் அனுசரித்து வருகின்றன.

இந்துத்துவ வாதிகளும், அமெரிக்காவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைத்துக் கொண் டிருப்பதுதான் இன்றைய அரசியல். மத நுழைவு காரணமாக ஏற்படும் வன்முறையால் எந்தப் பிரச்னையையும் தீர்த்து வைக்க இயலாது. ஐரோப்பாவில் ஏற்பட்ட சிலுவைப் போர்களோ, அல்லது இஸ்லாமிய—கிறித்தவப் போர்களோ அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணவில்லை 'அகண்ட பாரத்' என்று அறை கூவும் இந்துத்துவ நண்பர்கள், 1947 ல் பிரிவினை (Partition) ஏற்படாமலிருந்திருந்தால் இப்பொழுது அக்ண்ட இந்தியாவில் 35 கோடி இஸ்லாமிய நண்பர்கள் இருப்பார்கள் என்பது பற்றியும் யோசிக்க வேண்டும். ஒரு நாட்டில் 26% இருக்கும் மக்களை சிறுபான்மையினர் என்று அழைப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. இந்தியா, பல கலாச்சாரங்கள் என்ற வண்ண இழைகளால் நெய்யப்பட்ட ஓர் அற்புதமான ஆடை என்பதை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

அடிப்படை வாதமும், Secularism என்பதும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட சொற்களல்ல. Secularism என்றால், ஆன்மிகமல்லாமல், உலக நடைமுறைக்கு ஏற்ற செய்கைகளை மேற்கொள்ளுதல் என்று அர்த்தம். அதாவது, சமூக நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான தர்மம் (கல்வி, நல்லொழுக்கம், மனிதாபிமானம் போன்றவை) சமயத்தைச் சார்ந்திப் பேசப்பட வேண்டுமென்ற அவசியமில்லை. ஆகவே தான் ஆட்சிமுறையில் சமயச் சார்பு இருக்கக்கூடாது என்கிறார்கள். கல்வித்திட்டத்திலும் சமயச் சார்பு ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. மனித நாகரிகத்தின் தொடக்க காலத்தில், எது நிகழ்ந்தாலும், 'யாரால் இது நிகழ்கிறது?' என்ற கேள்வி கேட்கப்பட்டது. அப்பொழுது தோன்றியதுதான் சமயம். விஞ்ஞான வளர்ச்சிக்குப் பிறகு, இப்பொழுது கேட்கப்படும் கேள்வி, 'எதனால்?'

இதுதான் Secularism. இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்ல. நமக்குத் தேவை 'இகமா, பரமா என்ற கொள்கை உறுதிதான்.



படிப்பகம்


www.padippakam.com

# கிழவியும் வைகுந்த வாசலும்

கவிதை

நா.விச்வநாதன்

சீரங்கத்துக் கிழவி
வைகுந்தம் போவதை
எதிர்பார்த்து
புலம்பிக் கொண்டிருக்கும்
தினம் தினம்-
உட்கார்ந்து புலம்புவதற்குத்
தோதாய் திண்ணை,
ஒரு சொம்பு ஜலம்,
அட்டைகிழிந்த
ராமாயணம்,
எதிர் கிளையில்
உற்றுச் சிரிக்கும்
அணில் குஞ்சு,
இன்னும் சிலவும்
துணையாய்- அல்லது
வேடிக்கை பார்ப்பதற்காய்-
நன்றாயிருந்த நரும்மாச்சாரி
ஒரு அதிகாலை
நெஞ்சைப் பிடித்துக்கொண்டு
நடுக்கூடத்தில் நீண்டபின்
பாட்டிக்கு பூமியில்
புலம்பலும் பெருமாளும் தவிர
ஒன்றுமில்லாது போயிற்று-
சகஸ்ரநாம முனகல்
திருச்சுற்றுச் சுவரைக்கூட
தீண்டாது திரும்புவதறியாது
தொடருவாள் கிழவி-
சன்னதி நிறைய
கூடுகின்ற பளபளப்புக்
கூட்டத்தின் பரபரப்பில்
திருக்கதவு திறக்கும்
பாட்டிக்குத் தெரியாமலே
அடிக்கடி-



# காத்திருப்பு

ஏ.எஸ்.எம்.அனு

தினந்தோறும்
இரவு முழுவதும்
தலைதூக்கி எட்டிப்பார்த்து
நிலவு தேடி ஏங்கும்.
சுவரேறி முற்றத்தின் வழியே...
வீட்டிற்குள் உறங்கும் உன்னை.



படிப்பகம்

www.padippakam.com

# பதினெட்டாம் பெருக்கு

சிறுகதை

ந.பிச்சமூர்த்தி

## வல்லிக்கண்ணன்

இந்த நூற்றாண்டில் எனக்குப் பிடித்த கதை

தமிழ் சிறுகதை முன்னோடிகளில் முக்கியமானவர்களில் ஒருவர் ந.பிச்சமூர்த்தி. 'மணிக்கொடி' சிறுகதைப் பத்திரிகையில் நல்ல சிறுகதைகள் எழுதிய அவர் தொடர்ந்து பல இதழ்களிலும் அருமையான கதைகளை படைத்தளித்தார். அவருடைய 'பதினெட்டாம் பெருக்கு' 1942-இல் 'கலாமோகினி' எனும் மறுமலர்ச்சி இலக்கிய இதழில் பிரசுரம் பெற்றது. பின்னர் ந.பி.யின் சிறுகதைகள் சில 'பதினெட்டாம் பெருக்கு' என்ற தலைப்புடன் ஒரு தொகுதியாக வெளிவந்தன.

சாதாரண மனிதனுக்கு தனிமை அபாயகரமானது என்று உணர்த்துகிறது இந்தக் கதை. மனைவியைப் பிரிந்து தனிமையில் இருக்கும் ஒருவன் சூழ்நிலை சந்தர்ப்பங்களினால் ஒரு சபலத்துக்கு ஆளாகிறான். காம உணர்வு அவனை உந்துகிறது. பண்பாடு மற்றும் மரபு ரீதியில் உள்ளார்ந்த ஒழுக்க உணர்வு அவனுள் உறுத்தல் ஏற்படுத்துகிறது. அவனுக்கு ஏற்பட்ட மனஉளைச்சலையும் உணர்வுப் போராட்டங்களையும் 'பதினெட்டாம் பெருக்கு' உயிர்ப்புடன் சித்திரிக்கிறது.

ந.பி. ஒரு கவிஞர். அவரது கவி உள்ளமும் கற்பனை நோக்கும் கதை நெடுக உவமைகளிலும் வர்ணனைகளிலும் தனித்திறமையுடன் ஒளிர்வதைக் காணலாம்.

இக்கரையில் படிக்கட்டுகளே தெரியவில்லை. அக்கரையில் நாணல்களின் வளைந்த நுனிகளெல்லாம் ஆற்றுநீரில் விழுந்து விழுந்து எழுந்து கொண்டிருந்தன. கரைபுரண்டு போகும் பெருக்கில் நொங்கும் நுரையும், சீமைப்பிலா இலைகளும், காய்ந்த மலர்மாலைகளும் மிதந்து சென்றன. காவிரியின் பதினெட்டாம் பெருக்கு.

தமிழ் மக்கள் கவியுள்ளம் படைத்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் காவிரியை சூல் கொண்ட பெண்ணென்று யாருக்குச் சொல்லத் தெரியும்? காவிரிப் பெருக்கு மோட்டிலும் முடைசலிலும், படுகையிலும் பண்ணையிலும் பாய்ந்து மண்ணைக் கனகமாக்கி மகிழ்ச்சி விளைவிக்கவில்லையா? ஆற்றுப் பெருக்கின் அசைவு சூல்கொண்ட பெண்ணைப் போல் இல்லையா?

தெருக்கோடி வீட்டு மாடியிலிருந்து வடக்கே பார்த்தால் இந்த ஆனந்த மயமான காட்சி தென்படும். கிழக்கே பார்த்தால் ஆற்றங்கரைக்கு வந்துசேரும் ரஸ்தா, பாம்பின் நாக்கைப் போல நீண்டு தென்புறத்தில் மறைவது தெரியும். ஆற்றுப் பெருக்கைப் போலவே இத்தெரு எப்பொழுதும் நிறைந்திருக்கும். விசேஷ நாளென்றால் சாயும் கூட்டத்தைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.


அன்று பதினெட்டாம் பெருக்கு. தெருவில் ஒரே கூட்டம். காதோலை கருகமணி விற்பவர்களும், போவோர் வருவோர் முகத்தில் பூ வேண்டுமா என்று இடிக்கும் பெண்களும், கறிகாய்க் கடைக்குப் போவோரும் வருவோரும் தெருவில் நிறைந்திருந்தனர்.

தனிமை என்பதை எல்லோரும் பிரமாதப் படுத்துகிறார்கள். ஆனால் தனிமையை ரசிக்க எல்லோராலும் முடியாது. தனிமையில் வசிக்க ஒருசிலரால் கூட முடியாது. சொல்லப்போனால், சாதாரண மனிதனுக்கு தனிமை அபாயகரமானது- உடல், உள்ளம் எல்லாவற்றிற்கும். கடிவாளமும் வண்டியோட்டியும் இல்லாத குதிரை 'டாக் கார்ட்'டை இழுத்துப் போவதென்றால் எப்படி



படிப்பகம்

www.padippakam.com



இருக்கும்? நாலு பேர் நடுவிலிருந்தால் தான் சாதாரண மனிதன் நேரும் கூறுமாய் இருப்பான். தனிமையில் மனது சலிப்பதைக் கவனித்திருக் கிறீர்களா? ஒரு நொடி பச்சைக்குதிரை தாண்டி அண்ட சராசரங்களுக்கு அப்பால் போய் நிற்கும். மறு நொடியில், பாய்ச்சிய நங்கூரம் போல் மனக்கடலின் அடிமட்டத்தில் போய் நிலைகொள்ளும். ஒருதரம் தன்னலமற்ற தூயவெளியில் நடைபோட்டுப் பழகும். மறுதரம், விலங்கினப் போக்கிலே, வாலை கொண்டைமீது போட்டு நாலுகால் பாய்ச்சலில் போகும் காளை போல் கட்டற்று ஓடும். பிராணசக்தி நிலைகொள்ளாது பாதரசம் போல் சிதறித் தொல்லை கொடுக்கும். தனிமையைக் கையாளத் தெரிந்தவன் யோகி, ஞானி.

அவன் யோகியுமல்ல; ஞானியுமல்ல. ரொம்பச் சாதாரண மனிதன். வேதாந்திகள் சொல்வது போல் அஞ்ஞான ஜந்து. ஆண்களுக்குள்ள அவ்வளவு குற்றம் குறைகளும் நிறைந்தவன்.

பதினெட்டாம் பெருக்கன்று அவனுக்கு விடு முறை. வீட்டில் யாருமே இல்லை. அவன் மனைவி தாயார் வீட்டுக்குப் போய் இரண்டு மூன்று மாதமாகியிருந்தது. காலையில், கிளப்பில் காபி சாப்பிட்டுவிட்டு தெருத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். நேரம் வெண்ணாந்தையைப் போல் நகர்ந்தது. கடகடவென்று ஓரிரு பையன்கள் சப்ப ரத்தை இழுத்துச் செல்லும் ஓசை அவனுக்கு வேதனை தந்தது. அங்கிருந்து கிளம்பி வாசல் கதவைத் தாளிட்டுக் கொண்டு மாடிக்குப் போய் உலாவினான். ஒருபுறம் காவிரிப் பெருக்கு. பெருக்கோடு அவன் மனமும் சென்றது.

'கடைசியில் கடலில் போய்க் கலந்தாக வேண் டும். ஏனோ? ஒன்று மற்றொன்றில் கலப்பது தான் விதியா? அல்லது அதுதான் இன்பத்தின் ரகசியமா? இருக்கலாம். காவிரி கடலை மணக்கப் போகிறாள். அதனால்தான் அவ்வளவு ஒய்யாரமாய் நுரை மலர்களையும் கரையோர நாணல்களும் மரங்களும் தரும் வண்ண மலர்களையும் தாங்கிச் செல்கிறாள். ஆனால் கடலில் கலக்கும் நாள் என்றோ?' என்று நினைத்தான்.

மற்றொரு புறம் ஜனப் பெருக்கு. ஆறு கடலோடு கலக்க தன்னையுமறியாமல் விரைந்தோடுகிறது. ஜனப் பெருக்கு கண்கண்ட தேவியான காவிரியை வணங்கி வந்தனம் செலுத்த அறிந்தே ஓடுகிறது. ஆனால் அவனிடம் மட்டும் ஜனப்பெருக்கைப் பற்றி வேறு ஏதேதோ சிந்தனைகள் எழுந்துகொண் டிருந்தன.

'வேண்டுமானால் கூட்டத்தில் கலந்துகொண்டு நசுக்கப்படலாமேயொழிய கூட்டத்தை ரசிக்க முடி யுமா? ஒன்றையுமே கண் குளிரப் பார்க்க முடிவ தில்லை. சமுத்திரம் போன்ற கூட்டத்தில் தனிமுகங் களே கவனத்தை வசீகரிப்பதில்லை. வெகு அழகிக ள்கூட கூட்டத்தில் தனிச்சிறப்பை இழந்து சாம்பலில் கிடக்கும் நெருப்புப் போல் மங்கிவிடுகிறார்கள். ஆமாம். தனிமை செத்து அகண்டம் தோன்று மிடமல்லவா ஒரு கூட்டம்? மனைவி இருந்தால் இந்த மந்தையில் அவளும் ஒன்றாயிருப்பாள்.'



படிப்பகம்

www.padippakam.com

இப்படி காவிரிப் பெருக்கும் ஜனப் பெருக்குமாகச் சேர்ந்து அவனைத் தாக்கவே ஏக்கமும் தனிமையும் உள்ளத்தில் ஆடின. சோர்வு மிகுந்து, செய லற்று, சவுக்கத்தை விரித்துப் படுத்துக் கொண்டான். நீலநிற ஆகாயத்தில், வழிதவறிய கொக்கைப்போல் தனிமையாய் ஒரு மேகம் சென்று கொண்டிருந்தது. 'அட, உனக்கும் இந்தக் கதிதானா?' ஒருக்களித்துப் படுத்துக் கொண்டான். கண்ணுக்கெதிரே சுவர். சுவரில் பல இடங்களில் சுண்ணாம்பு சரிவர அடிக்கப்படாத காரணத்தால் விசித்திரமான மிருகங் கள் போலும், மரங்கள் போலும், அலை போலும் தென்பட்டது.



சிறிது நேரம் இப்படியே அதில் நெஞ்சு ஈடுபடக் கழிந்தது. ஒரு அணில் திடுதிடுவென்று எங்கிருந்தோ ஓடிவந்து சுவரோரமாய்ப் பதுங்கி நின்றது. அதன் கண்களில் திருட்டுத்தனமும் இன்பவெறியும் கலந்தி ருந்தன. அதே சமயத்தில் ஓட்டின் மேலிருந்து ஒரு அணில் கத்திக் கொண்டிருந்தது. அதனுடைய குரலில் எதையோ பறிகொடுத்த உணர்ச்சி தளும்பிற்று. எழுந்திருந்து கூரையைப் பார்த்தான்.

ஒரு அணில் வாலை உயர்த்தி திசைக்கொரு முறை திரும்பித் திரும்பி உட்கார்ந்து கத்திக் கொண்டிருந்தது. திடீரென்று கத்துவதை நிறுத்திவிட்டு மின்னல்போல் பாய்ந்து சுவரண்டை வந்தது. பதுங்கியிருந்த அணிலைக் கண்டதும் விரட் டிற்று. பிறகு அது ஓட இது ஓட முடிவில் ஒன்றை மற்றொன்று முன்னங்கைகளால் பற்றிக்கொண்டது. காதலின் லீலை! திருட்டுக் கண்கள் இன்பத்தில் மூடின- ஒரு இமைப்பொழுது! அதற்குள் சுவரின் அடிப்புறத்து சாரத்துளை வழியாக வேறு அணில் ஒன்று மெள்ள வந்து எட்டிப் பார்த்தது. காதல் நாடகம் கண்ணில் பட்டது தான் தாமதம். ஒரே மின்வெட்டு! ஆண் அணில் மீது இது விழுந்து ஒரு நொடி இரண்டுமாய்க் கட்டிப்புரண்டன. பெண் அணில் ஒதுக்குப்புறமாய் நின்று வெற்றி யாருக்கு என்று கேட்பது போல் முன் காலைத் தூக்கி நின்றது. அடுத்த நொடிக்குள் புதிதாய் வந்த அணில் ஓடிவிட்டது. ஆனால் அங்கிருந்த ஆண் அணிலின் உடலினின்று ஐந்து ஆறு சொட்டு ரத்தம் மட்டும் தரையில் விழுந்தது. இருந்தாலும் ஆண் அணில் இதையெல் லாம் பொருட்படுத்தவில்லை. பெண் அணிலிடம் வெகு சொகுசாய் நகர்ந்து சென்றது.

அவனுடைய விருத்திகள் எங்கோ சென்று திளைக்கத் தொடங்கின.

'அம்மா... அம்மா!' என்று தெருக்கதவைத் தட்டும் சத்தம் வந்து மோதிற்று.

மாடி கைப்பிடிச் சுவரண்டை வந்து நின்று 'யார் அங்கே?' என்றான்.

'நான் தான்.' யௌவனத்தின் தேன் ததும்பும் குரல்.

'நான் தானென்றால்?'

வாசலை விட்டிறங்கி மாடியைப் பார்த்துக்கொண்டு ஒருத்தி நின்றாள். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. கீழே இறங்கி வந்து கதவைத் திறந்தான்.

ஓர் இளம் பெண். மாநிறம். அராபிக்



படிப்பகம்

www.padippakam.com

**ஓர் இளம்பெண். மாநிறம். அராபிக் குதிரை போன்ற மேனியும் மினுக்கும், வளர்ச்சியும், பார்வைக்கு ராணி போன்ற அழகும், கம்பீரமும் பெற்றிருந்தும், அவளுடைய ஆடை ஏழ்மையைப் பறையடித்தது.**

குதிரை போன்ற மேனியும் மினுக்கும், வளர்ச்சியும், பார்வைக்கு ராணி போன்ற அழகும், கம்பீரமும் பெற்றிருந்தும், அவளுடைய ஆடை ஏழ்மையைப் பறையடித்தது.

அவளை ஊன்றிப் பார்த்தான். எப்பொழுதோ பார்த்த முகம். ஆனால் எங்கே என்று மட்டும் விளங் கவில்லை.

'நீ யார்?'

'தெரியவில்லையா? போன வருஷம் மார்கழி மாதம் இங்கே பறங்கிப்பூ போடவில்லை? அம்மா எங்கே?'

அவனுக்கு ஞாபகம் வந்துவிட்டது. அப்பொழுது சிறியவளாய் இருந்தாள். இப்பொழுது நல்ல யௌவனம்; முற்றிலும் மாறிப் போய்விட்டாள். பின்னொரு தரம் அவளைப் பார்த்தான். ஆம்! அவளே! யௌவனத்தின் லாகிரிப் பெருக்கு அவன் உள்ளத்தின் வேரை அறுத்துச் சென்றது.

'அம்மா இல்லையா?'

எண்ணக் குழப்பமிருந்தாலும் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டாமோ?

'இல்லை. ஊருக்குப் போயிருக்கிறாள்.'

'ஏன்?'

'முழுகவில்லை... ஆமாம், நீ எங்கே வந்தாய்?'

'சும்மாத் தான்.'

'சும்மா இருக்குமா?'

'இல்லை. பதினெட்டாம் பெருக்கு. அம்மாவிடம் அரிசி வாங்கலாம் என்று வந்தேன்... ஆனால் அம்மா இல்லையா?'

'இல்லாதபோனால் என்ன மோசம்?'

அந்த வார்த்தைகளைக் கேட்டு அவள் நெகிழ்ச்சி யடைந்து போனாள். தலையெடுத்து அவன் முகத் தைப் பார்த்தாள். அவனும் பார்த்தான். ஒரு கண் ணிமைப் பொழுது திகைப்பற்ற மௌனம். பின்னர் அவன் வீட்டிற்குள் சென்று ஒரு படி அரிசியும் நான்கணா காசும் கொண்டுவந்து கொடுத்தான். அதை முந்தாணியில் வாங்கிக் கொண்டு ஒரு வினாடி பேச்சில்லாமல் தரையை நோக்கி நின்றாள். அவன் கூடத்துச் சுவரை பொருளில்லாமல் வெறித்துப் பார்த்தான். ஒரு பெரிய எட்டுக்கால் பூச்சி அசையாமல் நின்று கொண்டிருந்தது. கொஞ்ச தூரத்திற்கப்பால் இதையே பார்த்துக்கொண்டு வேறொரு சின்ன எட்டுக் கால் பூச்சி நின்று கொண்டிருந்தது.

'நான் வரட்டுமா?' என்றாள்.

பேச்சு அவன் காதில் சரியாய்த்தான் விழ வில்லையோ, அல்லது பதில் அவனையும் அறியாமல் வந்துவிட்டதோ என்னவோ!

'எப்பொழுது?' என்று கேட்டு விட்டான்.

'ஐந்து நாழிகைக்கு' என்று சொல்லி வீட்டைவிட்டு வெளியே வந்து கூட்டத்தோடு கூட்டமாகி விட்டாள்.

அவள் போன அடியோடு இவனுக்கொரு பயங்கரமான வியப்பு ஏற்பட்டது.

இச்சையின் காட்டில் அலையும் வேங்கையைக் கண்டான். சேற்றில் புதைந்து இன்புறும் மீனைக் கண்டான். 'தூ' என்று இச்சம்பவத்தையே ஒதுக்கி நேராகி விடுவேனென்று திடசங்கற்பம் செய்து கொண்டு திண்ணையில் உட்கார்ந்தான்.

பெண்கள் குளித்துவிட்டுக் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். அவர்களுடைய ஈரத்துணி கள் உடம்பில் ஒட்டிக்கொண்டு, நடக்கும் பொழுது ஒருவித ஓசையை உண்டாக்கிற்று. மருதாணியிட்ட அவர்களுடைய கைகளும் கால்களும் பளிச்சென்று தென்பட்டன. பலர் முகத்தில் மஞ்சளும் கழுத்தில் சந் தனமும் பூசியிருந்தது. மைனாக்குருவிகள் போல் கல கலவென்று பயமற்ற குரலில் பேசிச்சிரித்துச்சென்றனர்.

இக்காட்சிகளை எல்லாம் அவன் அறிவு வெகு கவனத்துடன் படம் பிடித்துக் கொண்டிருந்தது- அவ ளைப் பற்றிய எண்ணமே வரக்கூடாதென்ற கவ லையில். ஆனால் அக்காட்சிகள் யாதொரு இன்பத் தையும் தரவில்லை; பெரிய தோப்பினிடை தென்றல் போய் ஒடுங்குவதைப் போல் கிளர்ச்சியற்று மாய்ந் தன. புஷ்பத் தோட்டத்தைவிட்டு பூக்கடைக்குப் போகும் ரோஜாவை மொய்த்துச்செல்லும் தேனீயைப் போல ஒருமுகப்பட்ட அவன் நெஞ்சு அவளையே பற்றி நின்றது. அவன் அறிவு எவ்வளவு ஏற்க மறுத்த போதிலும் கூட அவளுடைய ஞாபகத்தில் ஒரு இன்பம் இருக்கத்தான் செய்தது.

நடுப்பகல் வரையில் இந்த இன்பக் கிளர்ச்சி ஓயவில்லை. துன்பத்தைவிட இதைப் போன்ற இன்ப வாதனைகளைத் தாங்க முடியாது. அதிலும் அவன்



படிப்பகம்

www.padippakam.com

அறிவு வேறு குறுக்கிட்டு ஆட்சேபித்து நிலைமையை மோசமாக்கிக் கொண்டே வந்தால் கேட்பானேன்? நல்ல வேளையாக நடுப்பகலுக்கு அப்புறம் மனதிற்குக் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது- சீட்டுக் கச்சேரியின் புண்யத்தால்.

அவன் சீட்டாட்டத்தில் தலைதெரியாமல் ஈடுபட்டான். இருந்தாலும் அவன் ஆட்டம் சரியாகவே இல்லை. காணாத் துருப்பாட்டத்தில் ஐந்தாறு தடவைக்கு மேல்பட்டே முக்கியமான சமயங்களில் துருப்பைக் கேட்க மறந்து போகவே அவனுடைய ஆட்டம் நண்பர்களுக்கு வியப்பைத் தந்தது.

மாலையாகி விட்டது. குளத்தினின்று குளித்து எழும் அழகியைப் போன்ற ஓர் உருவம் அவன் உள்ளத்தில் எழுந்தது. சீட்டாட்டத்தில் நிலை கொள்ளவில்லை. அவள் வருவாளா என்ற கவலை குடைந்தது.

சீட்டாட்டத்தைக் கலைத்து விட்டு காவிரிக்குச் சென்றான். இரவு கூடியிருந்தது. துறையெங்கும் சாதமும் இலைகளும் இறைந்து கிடந்தன. இருளில் கத்தியின் மின்னல் போல் ஆற்றில் நீர் பாய்ந்து கொண்டிருந்தது. இருபுறத்துக் கரையோரத்திலும் மரங்களிடையில் மின்மினிகள் மூழ்கி எழுந்தன. நட்சத்திரங்கள் பதிந்த வானம் முஸ்லிம் ராணியின் ஜரிகை உடையைப் போல் மின்னிற்று.

ஆமாம். காவிரி கூட காதலைத் தேடித்தான் இருளில் செல்லுகிறாள். கடலைப் போய் அடைவாளோ அல்லது வழியிலேயே சோர்ந்து போவாளோ!...

இப்படியே ஓர் அடுக்கு எண்ணங்கள் தோன்றி இன்பக் கிளர்ச்சியை உண்டு பண்ணவே, இயற்கையின் தூண்டுதலுக்கு உட்படுவதில் பிசகில்லை என்ற தீர்மானத்தின் மீது அங்கிருந்து கிளம்பி சாப்பாடு முதலியவைகளை முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான். வாசல் கதவை தாளிட்டுக் கொண்டு முற்றத்தின் ஓரத்தில் மெத்தையை விரித்துப் படுத்தான். இன்பக் கனவுகள் குவிந்தன. இரண்டொரு நிமிஷத்திற்கு மேலாயிற்று.



'டக்'கென்று வாசலில் சத்தம் கேட்டது.

'அவள் வந்துவிட்டாள்' போலிருக்கிறதென்று குதூகலத்துடன் கதவைத் திறந்து பார்த்தான். யாரும் இல்லை. அவன் ஆவலே ஒலியுருவாகி அவனை ஏமாற்றிவிட்டது. திரும்பத் தாளிட்டுக் கொண்டு வந்து படுத்தான். மறுபடி தெளிவான சத்தம் எழுந்தது. ரேழிக்கு வந்தபொழுதே விஷயம் விளங்கிவிட்டது. கதவின் தாழ் சரியாகப் பதியாமலிருந்து இப்பால் பதிந்த பொழுது பிறந்த ஓசை அது. இருந்தாலும் கதவைத் திறந்து பார்க்காமலிருக்க முடியவில்லை.

படுக்கையில் ரொம்ப சஞ்சலத்துடன் வந்து படுத்தான்.

'ஒரு ஆசை எவ்வளவு பித்தாக்கி விட்டது! காட்டாற்று வெள்ளம் போல் எப்படி என்னைப் புரட்டி சேற்றிலும் முள்ளிலும் இழுத்துப் போட்டுவிட்டது! நான் விலங்கா? இனி செய்வதென்ன? அவள் அரைமணியில் வந்துவிடக்கூடும்... தனியே அவளை சந்திக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டால், பிறகு என்னாகுமோ, யார் கண்டது?' என்று யோசித்துக் கொண்டே வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே கிளம்பினான்.

முதலடி எடுத்து வைத்த நிமிஷத்தில் ஒரு பெண் குரல் 'ஐயா' என்றது. அந்த வார்த்தையைக் கேட்டு நடுங்கிப் போனான். 'நேர்நெறியைக் கடைப்பிடிப்பதென்றால் அதற்குக்கூட



படிப்பகம்

www.padippakam.com

**முதலடி எடுத்து வைத்த நிமிஷத்தில் ஒரு பெண்குரல் 'ஐயா' என்றது. அந்த வார்த்தையைக் கேட்டு நடுங்கிப் போனான்.**

விதி இடம் தராது போலிருக்கிறது. வந்தது வரட்டும்; இங்கேயே இருந்து இன்பத்தை நுகர்ந்தே தீர்த்து விடுகிறேன்' என்று எண்ணமிட்டுக் கொண்டே குரல் வந்த திசையை நோக்கினான்.

எங்கோ மூன்றாவது வீட்டில் அந்தக் குரல்! தன்னை அழைக்கவில்லை! 'அட சை! இவ்வளவா மனசு பயந்து கிடக்கிறது?' என்று முணுமுணுத்துக் கொண்டே ரயிலடியை நோக்கிப் புறப்பட்டான். ரஸ்தாவில் மரங்களின் நிழல் அசையும் பொழுதும், பத்துப் பன்னிரண்டு அடிக்கொரு தரமும், அவள் பின்னால் திடீரென்று முளைத்துவிட்டது போன்ற பிரமை உண்டாகும். பிரமை என்று தெரிந்தாலும் திரும்பிப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை.

இப்படியே ஐயனார் கோவிலண்டை வந்தான். அங்கு ஐயனார் வாகனங்கள்- கல் யானையும், மண் குதிரையும்- இரவில் ரோந்து சுற்றுவதற்குத் தயாராக எப்போதுமே நின்று கொண்டிருக்கின்றன. வழக்கமாக கோவிலுக்கும் இந்தக் கல்யானை முதலிய்வைகளுக்கும் இடையே தான் இவன் செல்வது வழக்கம். அன்று யானை, குதிரையின் பின்பக்கமாகச் சென்றான். ஏனென்றால் பின்புறமாக யானை, குதிரைகளின் நிழல் நீண்டு தெருவை ஓரளவு இருட்டாக்கியிருந்தது. இருளில் செல்வதிலும் தெரிந்தவர்களைப் பார்க்காதது போல் செல்வதிலும் அவனுக்கு ஏனோ நாட்டம் சென்றது. அதன் பயனாக அவனுக்குக் கொஞ்சம் வேதனை குறையத்தான் செய்தது. அந்த இருளின் பகுதியில் போய்க் கொண்டிருந்த பொழுது 'சாமி' என்றது ஒரு தேன்குரல்.

அவள் குரல்! அவன் கலங்கிப் போனான். உடலெல்லாம் ஒருதரம் சிலிர்த்தது. மார்கழி மாதத்து நிலவின் புகைப்புலத்தில், காற்றிலசையும் சவுக்கைத் தோப்பினின்று எழும் ஓசை விவரிக்க முடியாத கிளர்ச்சியை உண்டாக்குகிறதல்லவா? அவ்வளவு கிளர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று. திடீரென்று ரயிலடிக்குப் போகும் யோசனையைக் கைவிட்டு வீடு திரும்பினான்.

வீட்டு வாசலண்டை வந்த பொழுது இன்னது செய்வதென்று தெரியவில்லை. நாலுகால் பாய்ச்சலில் போகும் விருத்தியைத் தடுத்து பெறப்படும் வெற்றியின் தொல்லையைவிட, தடுக்காமல் கிடைக்கும் இன்பமே மேலல்லவா என்று தத்வப் பார் ஒன்று அவனுள்ளத்தில் ஒலித்து நின்றது. அவன் வீட்டுக் கதவைத் திறக்காமல் சிந்தனையிலாழ்ந்து வெறும் வெளியை நோக்கிக் கொண்டிருந்தான்.

அதற்குள் அவள் வந்துவிட்டாள். ஆனால் காலையில் தென்பட்ட அராபிக் குதிரை போன்ற தோற்றத்தைக் காணோம். ஒடுங்கிப் பயந்து இருளுடன் இருளாக முயலும் ஒரு நிழல் போல் தென்பட்டாள். அவள் பதுங்கிய மாதிரி அவன் உள்ளத்தைப் பிளந்தது. பழைய விருத்திகள் இருந்த இடம் தெரியவில்லை.

மறுநொடிக்குள் வீட்டிற்குள் போய் வந்து ஒரு ரூபாயை அவள் கையில் கொடுத்துவிட்டான். அவள் திகைப்பு சொல்லத் தரமல்ல. அவன் மட்டும் திரும்பிப் பாராமல் கதவைத் தாளிட்டுக் கொண்டு மேல் மாடிக்குப் போய்விட்டான்...



அவள் மௌனமாய்த் திரும்பினாள். அவளுக்குப் பின்னால் நீண்டு விழுந்த அவளுடைய நிழல் தெருவில் அசைந்து கொண்டிருந்தது. கண்ணுக்கு மறையுமட்டும் அவள் உருவத்தையும் நிழலையும் மாடியிலிருந்து பார்த்து நின்றான். பிறகு குறுக்கும் நெடுக்குமாக உலாவ ஆரம்பித்தான்...

காவிரி மட்டும் யாதொரு சிந்தனையுமின்றி நுரைமலர் குலுங்க, காதலைத் தேடி கடல் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ■



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# ரசிகன்

அம்ஷன்குமார்

"சோஷலிசம் அமெரிக்காவில் பிறந்திருந்தால் அது வெற்றி அடைந்திருக்கும்.'' என்றார் பெர்டோல்ட் பிரக்ட். அமெரிக்கர்களின் விற்பனைத்திறனை இதைவிடவும் அழகாக வேறு எவரும் பாராட்டவில்லை.

அமெரிக்காவில் பிறந்திராவிட்டில் சினிமா என்னவாகியிருக்கும்? நட்சத்திரம் என்னும் கவர்ச்சிப் பண்டத்தை உருவாக்கியது, சினிமாவை பூதாகாரமாக்கி பிற சாதனங்களைப் பின்னுக்குத் தள்ளியது, உலகெங்கிலும் தயாரிக்கப்படும் படங்களின் மீது தனது வல்லமையைத் திணித்தது என்றெல்லாம் அமெரிக்க சினிமா குறித்த குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் சினிமா என்கிற சாதனத்தின் மீது அமெரிக்கா கொண்டுள்ள தொழில் ரீதியான, விஞ்ஞான பூர்வமான அக்கறை ஈடு இணையற்றது. சினிமா கலைச்சாதனம் என்று மட்டுமே பரப்பப்பட்டிருந்தால் காலரிகளில் அடைபட்டிருக்கும் நவீன ஓவியம் போல் குறிப்பிட்ட எண்ணிக்கையில் சில கொட்டகைகளுடன் அது தன்னை சுருக்கிக் கொண்டிருக்கும். கோடிக்கணக்கானவர்களுக்கு வாழ்வளிக்கும் தொழிலாக அது வளர்ந்திருக்காது.

சினிமாவிற்காக விஞ்ஞானத்தை வளர்க்க அது பெருந்தொகையையும் ஏராளமான உழைப்பையும் செலவிட்டிருக்கிறது. கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் இன்று வியப்பூட்டுகிறதென்றால் அதற்குக் காரணம் அமெரிக்க சினிமா.

சினிமா வளர்ச்சி சாத்தியமாவதற்கு மிக முக்கியமான காரணம் பெரும் ஜனக்கூட்டத்தின் ஆதரவு. மேற்கில் இவர்கள் அரங்கப் பார்வையாளர்கள் (ஆடியன்ஸ்) என்று அழைக்கப்படுகின்றனர். பார்வையாளர்கள்- நிகழ்த்துபவர்கள் என்ற பாகுபாடு நாடகம் தோன்றிய காலத்தில் ஏற்பட்டது. நாடகத்திற்கு முந்தைய நிகழ்வான சடங்குகளில் இப்பாகுபாடு கிடையாது. சடங்கு எல்லோருக்குமானது. பங்கேற்புக்குரியது. முதலில் சந்தைகளிலும் படிப்படியாக திறந்த வெளிகளிலும் (அப்பொழுது பார்வையாளர்கள் கண்டுகளிப்பவர்கள்......... என்று அழைக்கப்பட்டனர்.) கூடாரங்களிலும் நாடகம் நிகழ்த்தப்பட்டது. பார்வையாளர்களுக்காகவே அழகியலை அரிஸ்டாடில் நிறுவினார்.

பார்வையாளர்களை நாம் ரசிகர்கள் என்று அழைக்கிறோம். நாட்டிய சாஸ்திரம் எட்டுவகை ரசங்களை முன் வைக்கிறது. ரசங்களைப் பயின்று அவற்றினூடாக கலையை ரசிப்பவன் ரசிகன். ரசம் சமஸ்கிருதச் சொல். அதற்கு இணையான தமிழ்ச்சொல் சுவை.

'நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று'



தொல்காப்பியமும் சுவைகளை எட்டாகக் குறுக்குகிறது. ஆனால் சுவைஞர்களும் ரசிகர்களும் மேல் தட்டு வர்க்கத்தினரைச் சேர்ந்தவர்கள். கிரேக்க நாடகங்களைப் போலவே சமஸ்கிருத நாடகங்களிலும் சாமான்யர்கள் கண்டு கொள்ளப்படுவதில்லை.

தொழிற்புரட்சிக்குப் பின்னர் தோன்றிய மாபெரும் நிகழ்வுகளில் ஒன்றான சினிமாவுக்கு மேற்கில் அதன் தோற்றுவாயிலிருந்தே அறிஞர்களும் கலைஞர்களும் புரவலர்களாயினர். ஜனநாயக விழிப்புணர்வுக்குப்பின் எல்லோருக்கும் கல்வி புகட்டுவது என்னும் நடைமுறையின் தொடர்ச்சியாக மக்கள் சினிமாவின்பால் நெறிப்படுத்தலுக்கு உள்ளாயினர்.

இந்தியாவில் ஜனநாயகத்தைப் போலவே சினிமாவும் தறுதலையாக அலையவிடப்பட்டதால் ரசிகர்களுக்கு பொறுப்பான முறையில் சினிமா அறிமுகம் செய்யப்படவில்லை. சினிமாவை போஷிக்கத் துவங்கியவர்கள் கல்வி அறிவு அற்றவர்களும் கல்வி அறிவு குறைந்தவர்களுமே. அதுவரை அவர்களுக்கென்று இருந்த பொழுது போக்கு நாட்டுப்புற கிராமியக் கலைகளும் மேடை நாடகங்களும்தான்.

கிராமியக் கலைகளுக்கு இலக்கண நூல்கள் இல்லையென்றாலும்



படிப்பகம்

www.padippakam.com

அவற்றின் கட்டுமானங்களினால் பொதுமக்கள் தாமாகவே ரசனை அறிவு பெற்றிருந்தனர். சினிமா விற்குத் தேவையான கூடுதலான விஞ்ஞான அறிவு அவர்களை வந்தடையாததால் சினிமாவை அவர்கள் ஒரு கதையாடலாகவே பாவிக்கத் தொடங்கினர். எனவே அவர்களது ஆதரவினால் ஜீவிக்கத் தொடங்கிய சினிமா அவர்கள் அறிந்த கதையாடலின் பாதிப் பினைப் பதிலுக்குப் பெற்றதும் இயற்கையானதுதான்.

அரசாங்கமோ அரசியலோ தங் களுடைய அக்கறைகளை முன் னிறுத்தவில்லை என்பதை உணரத் தலைப்பட்டபொழுது அவர்கள் கவனத்தை அப்பொழுது ஈர்க்கத் தொடங்கியிருந்த சினிமா பிரப லங்கள் அவர்களுக்கு நெருக் கமாகத் தென்படலாயினர். தான் புகழ்பெற வேண்டும் என்று ஒவ்வொரு மனிதனும் நினைப் பதைப் போலவே தனக்கென ஒரு தலைவனைத் தேடி அலைவதும் மனிதனின் அடிப்படை இயல்பு களில் ஒன்றாகவே இருக்கிறது. ஜே.எம்.சிங் எழுதிய....... இத்த கைய இயல்பினைக் கருவாகக் கொண்டுள்ள நாடகமாகும்.

ஒரு குறிப்பிட்ட சினிமா பிர பலத்தின் ரசிகர்கள் என்று கூறிக் கொண்டு மன்றங்கள் அமைத்து டிக்கெட்டுகளை பட வெளியீட் டன்றே மொத்தமாக வாங்குவது, தியேட்டரை ஜோடிப்பது போன்ற வேலைகளுடன் அன்னதானம் செய்வது, இரவுப் பள்ளி அமைப் பது, ரத்ததானம் செய்வது போன்ற பல சினிமாவுக்கு சம்பந்தமற்ற பொதுக்காரியங்களை இந்த ரசி கர்கள் செய்து வருகின்றனர். சினி மாவின் பெயரால் இத்தகைய பணி கள் உலகில் வேறு எங்கும் ரசி கர்களால் செய்யப்படுவதில்லை. ரசிகர்கள் என்று தாங்கள் பெற்றுக் கொண்ட அடையாளத்தைச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்கிற செயல்பாடுகள் அல்லவா இவை?


# சம்ப்பா நரேந்தர் நினைவு குறுநாவல் போட்டி

**வாசகப் படைப்பாளிகளே...**

**நீங்கள் ஆவலோடும் அக்கறையோடும் பங்கேற்கும் குறுநாவல் போட்டி**

★ மாதம் ஒரு குறுநாவல்

★ பிரசுரமாகும் குறுநாவலுக்கு ரூ.1000/- பரிசு

★ கணையாழியில் பதினைந்து பக்கத்திற்கு மிகாமல் இருத்தல் அவசியம்.

★ போட்டிக்கு அனுப்பப்படும் குறுநாவல் திரும்ப அனுப்ப இயலாது.

★ பிரசுரமாகவிருக்கும் குறுநாவலின் தலைப்பும், ஆசிரியரின் பெயரும் முந்தைய இதழில் அறிவிக்கப்படும்.

"சம்ப்பா நரேந்தர் நினைவு குறுநாவல் போட்டி" என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

★ ஒவ்வொரு மாதமும் பதினைந்தாம் தேதிக்குள் குறுநாவல் அனுப்பப்பட வேண்டும்.




படிப்பகம்

www.padippakam.com

க வி தை

# கனவுகள்

த.கார்த்திபன்

மனதின் சாளரங்கள்
வழியே
காற்றாய் நினைவுகள்
வந்து எழுதிப்போகும் கவிதை

பிடித்த பட்டாம்பூச்சியின்
சிறகுகளில்
வர்ணங்களாய் எத்தனை
கவிதைகள் வெளிப்போயிருக்கும்

மீனுக்காகத் தூண்டிலிட்டு
கரைகளில் காத்திருக்கையில்
நதியின் கனவுகள்
நசுங்கிப்போகும் பல

கடற்கரை கிறக்கத்தில்
ப்ரியமானவர்களின்
உரையாடலில்
அலைகளின் கனவுகள்
என்னவாகிப் போயிருக்கும்

வேடனின் அம்புக்கு
சிக்குவதற்கு முன்பு
மாமரத்தில் அமர்ந்திருந்த
பச்சைக்கிளியின் கனவுகள்
இந்நேரம் பறந்திருக்குமா?

சிலருக்கு வாழ்க்கையின்
கனவுகளின் ரசனை
சிறகுகள் போல...

எனினும்
மனிதர்களுக்கு அங்கேதான்
சிறகுகள் ஆரம்பித்தாலும்
சிலுவையில் அறைகின்ற
பொழுதுகளில்
மீதமிருப்பவையும் அவைதான்!

# ஒடுக்கம்

ரிஷி

சுருண்டு கொள்ளத் தொடங்கி விடும்
சிறகுகள் அடங்கி வருவது போல்
உள்ளலைகள் அடியாழப் புயற்சுழலில்
மருளும் திசைகள் பாழ் உருள் வழியில்
வெள்ளப் பெருக்கு அள்ளக் குறையாது
அன்பின் இருப்பு அதே நிறையாக
அப்பனைப் பாடிய வாய் ஆண்டியைப் பரவாது
ஓடியும் ஓடாக் காலம்
போட்டு டைக்கும் தோண்டிச் சில்லுகளில்
அண்டங் கண்டு வேண்டி முடமாகி
யிருந்து வரும் நான தன்
பராமரிப் பாளனும் பார்வை யாளனும் தானான
அருங்காட்சி யகமாய்.





படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# பிச்சமூர்த்தியும் புதுக்கவிதையும்



நாம் எதை ஆரம்பம் என்கிறோமோ
அது அநேகமாக முடிவாயிருக்கிறது.
முடிவை நோக்கிப் போவது என்பது ஆரம்பிக்கத்தான்.
ஆக, நாம் ஆரம்பிப்பது முடிவிலிருந்துதான்.

டி.எஸ். எலியட்

ந. பிச்சமூர்த்தியின் கவிதைகளின் தொடக்கம் புதுக்கவிதையின் காலக்குறியாகும். பண்பாட்டுக் கூறுகளில் அழகியல் திறன்களில், தத்துவப் பார்வையில் என அழகியல் பாவனைகளை சார்ந்திருந்தாலும் அது மற்றைய பிரிவுகளிலும் பரவியிருக்கிறது.

1934 முதல் 1976 வரையிலான 42 ஆண்டுகளான படைப்பில் முக்கியமாகத் தெரிந்துகொள்ளக்கூடியவை இவற்றில் எவை? எவை?

"நீ தந்த நீர் இது.. நீ தந்த சீர் இது
நீ தந்த ஒளியும் இஃதே
நீ தந்த சீரும் நீ தந்த திருவும்
நினைக்கே நிவேதனம் கதிரவா"

(பொங்கல் வழிபாடு—ப.62)

பாரதியின் பெரும்பாலான கவிதைகளையும், இசைப்பாடல்களையும். தவிர்த்து அவரின் முடிவான வசனக் கவிதைகளின் தாக்கம் இங்கே தெளிவுறத் தெரிகிறது. வால்ட் விட்மனின் கவிதைகளும் பாரதியாரின் 'காட்சியும்' தனக்கு முன்னோடிகளாக இருந்தனவென்று ந.பி. 'குயிலின் சுருதி' முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து பல கவிதைகளைக் கூர்ந்து நோக்கும் போது இவரை பாரதியின் வசனக்கவிதையின் வழித்தோன்றல் எனக் குறிப்பிடலாம் என எண்ணத் தோன்றுகிறது.

"ஒளியை வணங்குவமே - தோழர்காள்
இருளில் மகிழுவமே
ஒளி வந்து வளர்க்கும்
இருள் வந்து காக்கும்"

(இருளும் ஒளியும்—ப.29)

யாப்புக்கிணங்க கவிதைகள் புனைய முடியும் என்று கு.ப.ராவைப் போல் ந.பி. முயற்சித்தாலும் (குயிலின் சுருதி, 1970) பெரும்பாலான அவருடைய கவிதைகள் வசனக்கவிதைகளாகவே அமைந்துள்ளன. இந்த அளவில் 1934 இல் இதை பாரதியின் சோதனை முயற்சியின் விரிவாகக் கொள்ளவேண்டும். ந.பி.க்கு கிடைத்த அரிய வாய்ப்பாக சக கவிஞர்களிடையே நடந்த விவாதங்களையும், சிறுபத்திரிகைகளையும் குறிப்பிடலாம். சோதனைகளை விவாதிக்கவும் வெளியே கொணரவும் இவை பயன்பட்டன. இருந்தும் வசனக் கவிதைகளின் தாக்கமாக கருப்பொருள், பரிதி, நிலா, மழை, தீ, ஆகாயம் என இயற்கைச் சக்திகளை சுற்றியே வருகின்றன. இதற்குப் பொருத்தமாக மொழி பேச்சு வழக்கிலிருந்து விலகி, ஒரு தீவிரத்தன்மை அடைந்து இறுகுகிறது. எனினும் பயன்பாட்டில் இலகுவாகவும், செறிவுடனும் வெளிவருகிறது. மெல்லிய ஓசை நயத்துடன் வரிகள் நீண்டு செல்கின்றன. அநேகமாக சமஸ்கிருதச் சொற்கள் தவிர்க்கப்பட்டு தமிழ்ச் சொற்களே தடங்கலின்றி வந்து விழுகின்றன

ஆர்.ராஜகோபாலன்



படிப்பகம்

www.padippakam.com

"கண்ணில் விழுந்த மண்ணைக்
கண்ணுக்கே விட்டு விடு
கைவைக்க வேண்டாம்கேள்
வைத்தால்
கண்கள் சிவந்து விடும்
தோழர்கள் பார்ப்பார்கள்"

*(மணல்—ப.120)*

வரிகள் நீண்டும் குறுகியும் சுதந்திரமாக வளைய வருகின்றன. படிமங்கள் அதிகமாக பயன்படுகின்றன. வாழ்வின் முரண், இயற்கையையும் மனிதனையும் ஒப்பிடல் என அறிவுப் பூர்வமாக கவிதை எடுத்தாளப் படுகிறது.

"ரவியான பொன்பருந்து
விடுதலையாய் வட்டமிட்டான்
ஒளியான பொன் பசுக்கள்
குதித்து வந்து மூச்சு விட்ட
கதிரான கன்றுகளும்
வால் தூக்கித் துள்ளி வந்த
போதையாம். ஒளி இன்றும்
பாரெங்கும் பொங்கியது"

(இருளும் ஒளியும் ப.27)

நவீனக் கவிதை பழைய கவிதைகளிலிருந்து வேறுபடுவதாகக் கூறுப்படுகிறது. எப்படி என்று கேட்போமானால் புரிவதற்குக் கடினம், வாசகர்களைப் பற்றிய கவலைப்படாத தன்மை, இது தவிர மரபு பற்றிய ஒரு ஏளனப் பார்வை. ஆனால், இவை அனைத்தும் ஒவ்வொரு சோதனை முயற்சியையும் எதிர்கொள்ளும் கேள்விகளாகும்.

ந.பி.யின் கவிதைகளை பாரதியின் வசனக் கவிதைகளின் பின்னோடியாகக் காணும்போது, நெடுங்கால தமிழ்க் கவிதைகளின் தொடர்ச்சியாகவே புதுக் கவிதையை அறியமுடிகிறது. திறன் அளவில் செய்யப்படும் சோதனைகள் மாறுபட்டிருந்தும் தமிழ்க் கவிதைகளுக்கு புதியவையில்லை எனத் தோன்றுகிறது. இருந்தும் தமிழ்க் கவிதை மொழி வாயிலாகவும் பண்பாட்டு வாயிலாகவும் பல இறுக்கங்களைச் சந்தித்துள்ளது. கடந்த முன்னூறு ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலமொழியும் மேற்கத்திய கலாச்சாரமும் தமிழை இறுக்குகின்றன. முக்கியமாக ந.பி. காலனிய் காலத்திலும், தேசியக் காலத்திலும் எழுதி வந்திருக்கிறார். ஆங்கில மொழி அமைப்பின் தாக்கமும், கலாசாரக் குறுக்கீடுகளும் சார்ந்தே கவிதைகளை அவர் யாக்க முடிந்தது எனலாம்.

"பங்கீட்டுக் கடை என்ன
சல்லடையா?
முறமா?
நெல் மிஷினா
பலகைக் காரியா"

*(பெட்டிக்கடை நாராயணன் ப.89)*

## பேராசிரியர் சிவத்தம்பி எழுதுகிறார்

**பேரா.சிவத்தம்பி எழுதும் கலை- கலாசாரம்- சமூக அரசியல்- பண்பாட்டு வேர்- குறித்த விமர்சனக் கட்டுரைகள். அடுத்த இதழிலிருந்து...**

ந.பி.யின் கவிதைகளில் காணக்கிடைக்கின்ற ஏனைய அம்சங்கள் கடுமையான விமர்சனப் பார்வைகளுக்கு ஆட்பட்டிருந்தாலும், புதுக்கவிதைப் பள்ளிக்குச் செல்வோர்க்கு ஒரு வழித்துணையாய் அவரைக் கொள்வது சரியான மதிப்பீடாகும் எனத் தோன்றுகிறது.

"மண்ணொட்டு எனக்கில்லை
பாட்டிலொரு பழமையில்லை
வான்நோக்கி மிதித்தேற
என்குரலாம் விண்மணியும்
உலகெங்கும் ஊடுருவப்
புது இசைகள் பொழிந்து வரும்"

*(மாகவிகள் ப—68)*

ந.பி. கும்பகோணத்தில் 1900ஆம் ஆண்டு பிறந்து 1924 ஆம் ஆண்டு முதல் 1938 வரை வழக்கறிஞராக தொழில் செய்து பின் 1938 முதல் 1954 வரை கோயில் நிர்வாக அதிகாரியாக தமிழ்நாட்டில் முக்கியமான கோயில்களில் பணி ஆற்றி ஓய்வு பெற்று சென்னைக்கு வந்து 1976 வரை வாழ்ந்தார்.

1932-இல் முதல் சிறுகதை, 1934-இல் முதல் கவிதை என ஆரம்பித்து கடைசிவரை எழுதி வந்தார். பல பத்திரிகைகளுடனும், எழுத்தாளர்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டவர். 'காட்டுவாத்து', 'வழித்துணை'(1964), 'குயிலின் சுருதி' என்ற மூன்று தொகுதிகளும், அவருடைய கவிதைகள். பெரும் பாலானவை அவருடைய சக எழுத்தாளரும் பதிப் பாளருமான சி.சு. செல்லப்பாவின் நீண்ட முன்னுரையுடனும் 'பிச்சமூர்த்தி கவிதைகள்' (1985) எனவும் வெளிவந்திருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## நவீனக் கவிதை பழைய கவிதை களிலிருந்து வேறுபடுவதாகக் கூறப்படுகிறது. எப்படி என்று கேட்போமேயானால் புரிவது கடினம்.

மேலோட்டமான வாசிப்பிலேயே ஒரு முக்கிய மான அம்சம் அவருடைய கவிதைகளில் தூக்கலாக வந்திருப்பது தெரிகிறது. சைவ சித்தாந்தத்தின் அடிப் படையிலான ஒரு தத்துவப்பார்வை. அத்வைதம், கைவல்யம், ஈசன், சிவன், பித்தன் போன்ற சொல் பல இடங்களில் பரவிக்கிடக்கின்றன. ஆசார, ஒழுக்க, குறுகிய புற அனுபவங்களுடனேயான குடும்பப் பின்னணி உளவியல் பார்வையில் குறைந்து ந.பி.யின் உலகத்தைக் கொணருகிறது. இந்த அளவில் தத்துவப் பார்வையில் ஒரு சிக்கலும் அடங்கியிருப்பதாகப் படுகிறது. மாயாவாதத்திற்குக் கொடுக்கப்படும் முக்கியத்தன்மை இயல்பான வாழ்விற்கு எதிரான நிலையைக் கொள்கிறது.


"உண்ணும் சோறும்
பருகும் நீரும்
தின்னும் வெற்றிலையும்
எல்லாம் கண்ணினே"

என்கிற வைணவக் கோட்பாட்டிற்கு மாறாக நடப்பு வாழ்வியலைப் புறந்தள்ளியே கைவல்யப் பதவி அடைய வேண்டும் என்கிற அழுத்தம் ஆழமான பார்வையாய் உருக்கொள்கிறது. 'வேட்கை' (ப.60) என்னும் கவிதை இதைச் சுட்டுகிறது.

"வெய்யிலின் செதில்கள் போல மான் புள்ளி
காணுது வேலியில் சட்டைபோல கொக்குகள் தோனுது
நயில் நடைபோடுது வாலாட்டிக்குருவி
தோலையை உருக்குது கருங்குயில் விணை
விலையற்ற ஒளியும் பருவத்தின் இனிப்பும்
வெளிகொள்ள உள்ளத்தைத் தட்டும் மலர்களும்
வெற்றுரை ஆயின ஆன்மாவுக்கெதிரே
இரும்பான தண்டும் வஜ்ரம் போல் உடலும்
பற்றற்ற கண்ணும் பொருந்திய யோகி
விரும்புதல் அமுதொளி அடைவதை அன்றோ"

'மோனமது' (ப-61) கவிதையும் இதையே குறிக்கும்:

"இமைப் பொழுதில்
மண் இன்பம்
மங்கிவிடும்
மனப்பான்மை
மாய்த்துவிடும்
பனித்துளியாம்
பேதை உயிர்
புகை போல
வானேறும்
இன்னும்
மண்ணுடன் உறவுண்டேனும்
முடிவதில் காணமாட்டோம்
......
வாழ்விற்கு மேலாமொன்று
வானத்தில் ஓடக்காண்பீர்



(கவிதைக் கருடன் —ப.103-04)



படிப்பகம்

www.padippakam.com

'சாகா மருந்து' (ப—94) கவிதையில் ஒருவன் இறந்து போகிறான்.

"மேகத்திலோர் வர்ணம் நீரிலோர் குமிழி
காற்றிலோர் அசைப்பு - கனவிலோர் சிரிப்பு
வாழ்விதுவேயாகில் வாழவும் நாம் வேண்டாம்..."

மற்றொருவன் கனவு காண்கிறான்:

'கனவு கண்டு எழுந்திருந்தும்
கனவு வலை அறுகவில்லை"

சிவன் கனவில் அழைக்கிறார். ஆயிரம் இதழ்களுடைய ஓர் அரளியைக் காண்பிக்கிறார்.

"இம்மலரின் மையத்திலே
தேன் ஒன்று ஊற்றெடுக்கும்
ஓர் அளவு உண்டாலும்
உயிருக்கொன்றும் ஆபத்தில்லை?"

என்று சொல்லி மறைகிறார். ஆயிரம் இதழ் அரளியைத் தேடும் படலம் தொடங்குகிறது.

ஒவ்வொருவரும் காட்டிலும் மலையிலும் தேடுகின்றனர். தெளிவுடனே ஒருவர் மட்டும் வெளியிலே இல்லை என்றார்.

"சென்னி உச்சி நறுமலரில் ஒழுகும்காண்
அமுதமென்றார்..."

முடிவில் உண்மையும் போலியும் உலகில் அருகருகில் ஏன் என வினவுகிறார்.

"புலன்களை வேசி யென்றும்
உயிரினைப் பகல்கனவென்றும்
மலங்களின் மகனென்றும்
உதட்டினால் வீரம் பேசி
நெய்யோடு பழவகையும்
தின்று மிக ஏப்பம் விட்டு
பையாகப் பொன்னும் பொருளும்
சிவன் பெயரைச் சொல்லிச் சேர்த்து..."

(பிரார்த்தனை— ப.15)

இக்கவிதையில் இயல்பான வாழ்வு மறுதலிக்கப் படுகிறது. 'உயிர்மகள்' (ப.46)

வித்தியாசமான நீண்ட கவிதை 'அகலிகையின் கதை'. அகலிகை கோதமனிடம்

"வெளி உலகின் தூண்டுதல்கள்
புகவொணாத் துறவைத் தந்தீர்
புலன்களின் இன்பமின்னை
நெறி என்னும் இரும்பில் கொண்டீர்
உயிர்க் கனல் உண்மை உமது
சித்தத்தில் உதிக்கவில்லை"

என்று கூறுகிறாள். சிலையாகி ராமன் கால்பட்டு உயிர் பெறும்போது இராமனும் கோதமனிடம் சொல்கிறான்.

"சஞ்சலப்பட்டுப் புலனை
பகைவனாய் பாவித்திட்டாய்

உலகமோர் மாயை அன்று
வெறுக்க ஓர் வேம்பு அன்று"

கோதமனும் முடிவில் அகலிகையிடம்

"உயிரே மணிவிளக்கே
வேள்வியைப் புதுக்கும் எழிலே
மனத்துடன் புலனைச் சேர்த்து
சமித்தாக வேள்வி இட்டேன்
உயிரிலே புதிய தேனை
வடிக்கவே கூட வாராய்"

மற்றைய கவிதைகளிடமிருந்து விலகி நின்று உலக வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு நியாயப்படுத்துகிறது.

இன்பமும் துன்பமும் இணைந்து வரும்போது எப்படி எதிர்கொள்வது என்பதைச் சொல்ல வருகிறது. 'எமனுக்கு அழைப்பா'(ப.22) என்னும் கவிதை.

வெப்பம் தாளாமல் வருணனை வேண்ட ஈரம் பிறக்கிறது. ஆனால் அதனுடன் கூட எறும்புகளும், ஈசல்களும் அவற்றைத் தின்ன பாச்சைகளும், பல்லிகளும் கூடவே வருகின்றன.

"ஈரத்திற்கிங் கேங்கினால்
எமனுக்கு அழைப்பா?
இன்பத்தை நாடினால்
துன்பத்தின் அழைப்பா?"

'பொற்றாமரை'(ப.23) கவிதையும் தாமரையும், குளத்தையும், வண்டொலியையும் அடையமுடியாமல் தேடலில் முடிகிறது.

இந்த வரிசையில், 'ஒளியின் அழைப்பு'(ப.11) வித்தியாசமான கவிதை.

பெரும் மரம் விரிந்து வளர்ந்து கீழே வளரும் கமுகுக்கு இடமில்லாமல் செய்கிறது. ஒளி வெள்ளம், காற்று அனைத்தையும் பறிகொடுத்து கமுகு சோனியாய் நிற்கிறது. இருந்தும் போராட்டத்தில் ரவியின் ஒளியைத் தேடி கமுகு உடலை நெளித்து, நீட்டி வளைந்து வளருகிறது. கமுகுடன் தன்னை ஒப்பிட்டுக் கொள்ளும் கவிஞர் நோயையும் ஏழ்மையையும் மீறி உலகம் பொய், சாவு மெய் என்னும் சாஸ்திரியப் புலம்பல் கேளாமல்,

"விழியை உயர்த்து
ஆழ்வின் இருள் என்ன செய்யும்
அமுதத்தை நம்பு ஒளியை நாடு"

என முடிக்கிறார்.

'இருளும் ஒளியும்': உலகின் ஆதிகாலம்: முதல் இரவு (ப.24).



படிப்பகம்

www.padippakam.com

இன்னொரு எதிரெதிர் தன்மைகளை விளக்கும் கவிதை. இதில் தொன்மைக் கதை பயன்படுத்தப் படுகிறது. ஒளியை இருள் விழுங்க இந்திரன் மீட்டுக் கொணர்கிறான். இருந்தும் இருள் மீண்டும் தொடர்கிறது.

'மாகவிகள்' (ப.65) கவிதையில் கரிச்சான், குயில், மணிப்புறா, மைனா தங்கள் தவிர்க்க முடியாத நிலைகளிலிருந்தே பாடுகின்றன. வானம்பாடி மட்டும் வானமேறிச் சுதந்திரமாய்ப் பாடுகிறது. கவிஞரின் உள்ளக்கிடக்கையான அறிவுதாண்டிய நிலையை மேம்படுத்திச் சொல்லும் கவிதை.

'மழை அரசி'(ப.72) பரிதியிடம் சென்று, மலையிடம் போய் மலை வேடரிடம் அகப்பட்டு அலைகளால் மீட்கப்பட்டு வரும் மழை பற்றிய கவிதை.

சமூகச் சிந்தனையுடன் கூடிய கவிதையாக 'மார்கழிப் பெருமை'( ப.21) 1938இல் எழுதிய கவிதை. மார்கழியில் குளிருக்கு இதமான உடைகளுடன் கனவான்கள். கருக்கலில் கடவுளைக் கூவும் பஜனை. வேடிக்கைப் பார்க்க கம்பளியுடன் குழந்தைகள் இருந்தும் — இன்னொரு பக்கத்தில்,

"தெருவெங்கும் எச்சில் இலைகளின் இளிப்பு!
மார்கழிப் பெருமையில் தோட்டிக்குத் தேவாரமுண்டா?
தெருக்கூட்டிக்குப் கம்பளி உண்டா?
மார்கழிக் குளிரில் ஓர் குழந்தை கிடக்குது

அன்னையை நினைத்துக் குழந்தை அலறுது
ஈனத் தொழில் செய்யும் தோட்டிச்சி ஒருத்தி
கூடையைக் கைவிட்டு குழந்தையைத் தூக்குகிறாள்.

இக்கவிதை மாறுபட்ட மதிப்பீடுகளைக் கொண்டு ஸ்டீபன் ஸ்பெண்டரின், 'சேரியில் ஒரு தொடக்கப்பள்ளி வகுப்பறை' கவிதையை நினைவூட்டுகிறது.



'பூக்காரி' (ப.105) (1943-44) யுத்தத்தைப் பற்றிய கவிதை. யுத்தக் கொடுமைகளை மறுதலிக்கும் கவிதை

"உலகெங்கும் கூடாரம்
ஊரெங்கும் விஷப்புகை
வானெங்கும் எஃகிறகு
தெருவெங்கும் பிணமலை"

மழைக்காலத்தில் வாசம் வீசும் பூக்களை வாங்குவார் இல்லாதது போல யுத்த காலத்தில் அன்பையும் அஹிம்சையையும் கொள்வாரிலர்.

'வியட்நாம்' (ப.175) பற்றிய கவிதையும் யுத்தத்தை பொருளில்லாதொன்றாய்த் தருகிறது.

'பெட்டிக்கடை நாராயணன்' (ப.86) (1943-44) பங்கீட்டு நியாய விலைக்கடையின் அநியாயத்தைச் சுட்டும் கவிதை.

"மண்ணில் பிறந்திருக்க
நெல் ஒப்பும் போது
களிமண்ணில் கலந்திருக்க
அரிசி மறுப்பதில்லை"

"முட்டை பிரிக்கு முன்னர்
முன்னூறு பேர் இருந்தால்
புண்ணியம் செய்யத்தான்
பொழுது எங்கே?
பங்கீடு வாழ்க
பாழ் வயிறும் வாழ்க"

என கவிதை முடிகிறது.

1969இல் எழுதப்பெற்ற, 'தேசியப்பறவை' (ப.170) நாட்டின் நலன்களைச் சுரண்டும் போக்கினைச் சாடும் கவிதை.

'பம்பரம்'(ப.166) வன்முறைக்குக் குறியீடாய் அழுத்தமாய் வெளிப்பட்டிருக்கும் கவிதை.

"பம்பரமும் மன்றங்களாய்
எல்லை, மொழி தகராறாய்
எவ்வளவோ விஷயங்களாய்
எங்கும் வளர்ந்திருக்கு
நானும் வளர்ந்து விட்டேன்
கைநகமும் வளர்ந்திருக்கு
ஆனாலும் அழுகின்றேன்"

(ப.167)

'ஆத்தூரான் முட்டை'(ப.101) வேலை வெட்டி இல்லாது சுற்றித் திரியும் ஒருவனை நோக்கில் குடும்ப பாரம் தாளாமல் அவதியுறும் கவிஞனின் குரலாய் ஒலிக்கிறது.

'சுமைதாங்கி' (ப.112) எனும் கவிதையும் வாழ்வைத் தாங்க முடியாத சுமையாகக் காணும் கவிதை



படிப்பகம்

www.padippakam.com

வாழ்வின் அவலங்களுக்கு எந்தவிதத் தத்துவப் போர்வையும் போர்த்தாமல் இயல்பான நேரடியான வாழ்வைத் தேடச்சொல்லும் கவிதை, 'காட்டு வாத்து' (ப. 128)

"மனுக்கால வெள்ளம் போச்சு
மார்க்ஸ் கால வெள்ளம் போகும்

இயற்கையின் ஓயாத்தானம்
உயிர்களின் ஒழியா உழைப்பு
செயற்கையின் சிலுப்பலிடையே
மலையாக நிலைத்து நிற்கும்"

கவிஞர் அவலங்களுக்கெல்லாம் விடிவாக பலகாலம் கடந்து விட்டுப் போகும் பறவை வாழ்வைத் தேடச் சொல்கிறார்.

"காட்டு வாத்தாகி
சிறகை விரி"

என்று, இதுவும் ஒரு தத்துவமாகப் போகும்படி.

சாவு பற்றிய சில கவிதைகளும் உண்டு. சாவை அவச் சொல்லாய்க் கொணரும் சாகுருவி பிடிபட்டும் சாவு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

"சாகுருவி செத்துப் போயும்
சாவு நித்தியம் வாழ்ந்தது"

(சாகுருவி ப.30)

"காலமும் அது செய்யும் கோலமுமாக"

'மாயை' (ப.63)

'வழித்துணை' (ப.139) என்னும் நீண்ட கவிதையில் குமரபுரத்திலொரு தச்சன் கைக்கோலைச் செய்ய காட்டிற்கு வந்தவன். அதைச் செய்ய பலகாலம் எடுத்துக் கொள்கிறான்.

ஆண்டுகள் பலவாச்சு, காடு மேடாச்சு, மேடு காடாச்சு. மன்னர் பரம்பரை மாறுகிறது. இதற்கெல்லாம் சாட்சியான குயவன் எதிரே புதுப்பிரம்மப் பட்டம் கட்டிய புதியவன் வருகிறான். கவிதை முடியும் போதில்,

"தச்சன் சிரித்தான்
இழைப்புளி சீவிய
மரச்சுருள் ஒன்று
கால்மீது காற்றில்
உருண்டு சிரித்தது
புல்கள் சிரித்தன"

நீண்டு தொடர்கின்ற காலத்தைக் காட்ட வந்த கவிதை இது. நீண்ட காலத்தைக் கணக்கிலெடுக்கும் போதில் நிகழ்கால மதிப்புக்கள் மாறிப்போகும்.

இக்கவிதையில் இயல்பான கவிதைகளாய், 'காதல்' (ப.126), 'ராதை'(ப.133) இவைகளைச் சொல்லலாம்.

காதலி காதலனை வீட்டிற்கு அழைக்கிறாள். தயாராய் இருக்கும்போது, வராமல் எதிர்பாராமல எண்ணாத நாளொன்றில் வந்தார் அவர்.

"வீடெங்கிலும் குப்பைக்கூளம்
எங்கிலும் கந்தல் துணிகள்
முகமெங்கும் வேர்வை,
கை எங்கும் சமையல்
மனமெங்கும் 'இல்ல நெடி'
சிறு புகைச்சல்
ஒட்டடை
வேளை பார்த்தா
நாதர் வந்தார்
அசடானேன்.
கேட்பதல்ல காதல்
தருவதுதான் சிறந்தது
தரையில் அமர்ந்தார்
என்னைக் காணேன்"

எதிர்பாராமல் நடக்கும் நிகழ்வே வாழ்வின் சுவையைக் கூட்டும் என்னும் புதிரை இயல்பாய் சொல்லும் கவிதை 'ராதை'(ப.133).

இது போன்று பொதுவாக பெரும்பாலான கவிதைகளில் முடிவுகள் கவிஞரின் வலிந்து புகுத்திய முடிவுகளாகவே உள்ளன. தத்துவப் போர்வையுடன் வெற்றுக் கோஷங்களாகவே முடிகின்றன.

"என்றும் போகி என்றும் பண்டிகை" (போகி—ப.176), "மேல் பார்வை என்றால் உள்ளே குடையலாமா" (மேல் பார்வை—ப.159)

அனுபவ ஓட்டத்தை, கவிதையில் எழும் பிரச்சினைகளை இவை மழுங்க அடிக்கின்றன. பல சிறிய கவிதைகளில் இந்தப் போக்கினைக்காண முடிகிறது.

இன்னொன்று— இன்னும் கொஞ்சம் ஆராய்ந்தால் பாரதியின் தேசியக் கவிதைகளில் காணப்படும் ஒரு அம்சம் முக்கியமாகத் தென்படுகிறது. ந.பி.யின் கவிதைகளில், அனுபவச் செறிவைத் தாண்டி அதனின்று பெறப்பட்ட வீரவாசகங்களாக பல கவிதைகள் காணப்படுகின்றன. வாசகர்களின் எதிர்விளைவையும் சுவையையும் இவை குறைக்கக் கூடும்.

சிறிய கவிதைகளைவிட நீண்ட கவிதைகள் இயல்பாகவும் செறிவாகவும் தோற்றம் கொள்கின்றன.

முடிவாக ந. பிச்சமூர்த்தி புதுக்கவிதை என்னும் சோதனை கவிதைக்கு பாரதியின் வசனக் கவிதையின் எதிரொலியாய்த் தென்படுகிறார். இவரின் எதிரொலிகள் சிவராமு, வைதீஸ்வரன், பசுவய்யா, ஞானக் கூத்தன் போன்றோர் கவிதைகளில் காணக் கிடைக்கின்றன என்னும்போது தொடர்ச்சியான ஒரு கவிதை இயக்கத்தின் மையமாக ந. பிச்சமூர்த்தியைக் கருத இடமிருக்கிறது எனலாம்.



படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# காலத்தின் குரல் – 12

## தி.க.சி

“ஆச்சரியம்தான். தமிழ்ச் சூழலில் சில சலனங்கள் ஏற்படுகின்றன. இவை காலப் போக்கில் வளரலாம். மாற்றங்களை முன்கூட்டி அறிந்து கொண்டால், அவற்றைத் திட்டமிட்டு விரைவு படுத்தவும் முடியும். தென்றல், காற்றாகவேனும் மாறலாம். அப்போது புது யுகத்தின் வாசல், கண்களுக்குத் தென்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை”

இவை பிரபல எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் சொற்கள்.

¹‘தமிழ்ச் சூழலில் சில சலனங்கள். இலக்கியம் மற்றும் பத்திரிகைத் துறைகளில் வரவேற்கத்தக்க, ஆரோக்கியமான மாற்றங்கள்’ எனும் தலைப்பில் சு.ரா.வின் கட்டுரை; காண்க: ‘இந்தியா டுடே,’ நவம்பர் 10. 1999)

ஆம்! வரவேற்கத்தக்க, ஆரோக்கியமான மாற்றங்கள், தமிழ் இலக்கியம் மற்றும் இதழியல் துறைகளில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன!

1989 - 1999 (பத்தாண்டு) காலகட்டத்தை நுட்பமாக ஆராய்வோருக்கு, இந்த உண்மை புலனாகும்.

கடந்த பத்தாண்டுக் காலத்தில் தமிழ் வாசகர்கள், பத்திரிகைகள், பதிப்பாளர்களிடையே, தரமான இலக்கியங்களையும் படைப்பாளிகளையும் இனங் கண்டு பாராட்டும் போக்கு அதிகரித்து வருகிறது.

இலக்கிய மதிப்பு வாய்ந்த நூல்களை வாங்கிப் படித்தல், அவற்றின் தரம் குறித்துக் கலந்துரையாடுதல், ஆழ்ந்து சர்ச்சைகள் செய்தல், நூல் வெளியீட்டு விழாக்களில் நூற்றுக்கணக்கில் கலந்து கொள்ளுதல், மாவட்டம் தோறும் முக்கிய நகரங்களில் கருத்தரங் குகள் நடத்துதல், இவற்றில் தமிழ் மக்கள் — குறிப்பாக இளம் தலைமுறையினர் — மிகுந்த ஆர்வம் காட்டு கின்றனர் என்பது மிக மகிழ்ச்சிக்குரியது.

இத்தகைய ஆர்வமும் அக்கறையும், புலம் பெயர்ந்து உலகெலாம் வாழும் தமிழர்களிடமும் காணப்படுகிறது என்பது, குறிப்பிடத்தக்கது.

“சிந்திக்க விரும்பும் வாசகர்களின் எண்ணிக்கை, தமிழகத்தில் கூடுகிறது. சகல ஊடகங்களும் பொதுவாக மனித சிந்தனையைப் பின்னகர்த்தும், மேம்போக்கான பொழுதுபோக்குகளை முன்னிறுத்தும் வெளியீட்டுக் கொள்கையைத்தான் அனுசரித்து வருகின்றன. இதையும் மீறி வாசகர்கள் சிந்திக்க விரும்புகிறார்கள் என்றால், அந்த மாற்றம், மிக முக்கியமானது. அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி, இன்னும் அதிக வாசகர்களின் மதிப்பை ஊடகங்கள் பெறமுடியும். லொட்டு லொசுக்கு விஷயங்கள் வெளி வந்தால்தான், வாசகர்கள் விரும்பிப் படிப்பார்கள் என்பதெல்லாம் பொய்த்துக் கொண்டு வருகிற காலம்” என்று சு.ரா. கூறுகிறார்.

அவரது கூற்றிலுள்ள உண்மையைத் தமிழகத்திலுள்ள “ஜனரஞ்சகப் பத்திரிகைகள்” (வணிக ஏடுகள்), கடந்த பத்தாண்டுக் காலத்தில் படிப்படியாக — மெல்ல மெல்ல உணர்ந்து வருகின்றன. அண்மையில் அவை வெளியிட்டுள்ள “தீபாவளி மலர்களே” இதற்கு அத்தாட்சி! “சிறப்பிதழ்களே” சான்று!...

சுந்தர ராமசாமியின் பேட்டியைக் ‘குமுதம்’ ஆறு பக்கங்கள் (தீபாவளிச் சிறப்பிதழில்) வெளியிடுகிறது! “‘ஞானபீடப் பரிசு’, தமிழர்களுக்கு ஏன் கிடைக்க வில்லை?” என்னும் கேள்வியை எழுப்பி, திகசி. மற்றும் பிரபஞ்சனின் விடைகளை இரண்டு பக்கம் வெளியிடுகிறது! இவையெல்லாம், தமிழ்ச் சூழலில் நிகழ்ந்துவரும் சில முக்கிய சலனங்களின் அடையாளம் என்று கருத இடமுண்டு.

இந்த மாற்றங்களுக்கு அடிப்படைக் காரணம், சு.ரா, தி.க.சி, பிரபஞ்சன் ஆகிய தனி நபர்கள் மட்டும் அல்ல என்பதை இங்கே வலியுறுத்திக் கூற வேண்டும்; இவர்களது இலக்கியக் கொள்கைகள், நடைமுறைகள், இவர்கள் சார்ந்து நிற்கும் இயக்கங்கள், இவர்களது எழுத்துக்களும் செயல்பாடுகளும் வாசகர்கள் (தமிழ் மக்கள்) மத்தியில் ஏற்படுத்திவரும் தாக்கங்கள், அவை நாளுக்கு நாள் பெற்றுவரும் செல்வாக்கு — இவையே முதன்மைக் காரணங்கள் ஆகும்.

என்னைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (த.மு.எ.ச.) ஆகியவற்றில், கடந்த 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து இயங்கிவருகிறேன்; இவை சார்ந்த இலக்கிய ஏடுகளான ‘தாமரை’, ‘செம்மலர்’, இவற்றில் எழுதிவருகிறேன்.

பாரதி, பாரதிதாசன், பட்டுக் கோட்டை, வ.ரா, ப. ஜீவனந்தம், புதுமைப் பித்தன் மரபைப் பேணி வளர்ப்பதில், மேற்காணும் இரு சங்கங்களின் ஆயிரக் கணக்கான அனுதாபிகளும் உறுப்பினர்களும் ஈடுபட்டுள்ளனர்; இவர்களின் தரமுள்ள படைப்புக்களுக்கு இடமளிக்க வேண்டிய சூழ்நிலை (அல்லது கட்டாயம்), இன்றைய வெகுஜன ஏடுகளுக்கு ஏற்பட்டு உள்ளது; ஏனெனில், கலையிலும் கருத்திலும், படைப்புத் திறனிலும், நேர்த்தியிலும், இவர்கள் புறக்கணிக்க முடியாதவர்கள் என்பதை “ஜனரஞ்சக



படிப்பகம்

www.padippakam.com

ஏடுகள்" அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளன.

''ஒரு பிரபல இதழ், அது வெளியிடும் விஷயங்களைப் பற்றி பரவலாக வாசகர்களிடம் அபிப்பிராயம் கேட்ட போது, அவர்கள் 'சகல விஷயங்கள் பற்றியும் கூர்மையான கட்டுரைகளை வெளியிடுங்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள்; பெண்களில் 80 சத விகிதத்தினர் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்" என்று சு.ரா. எழுதுகிறார்

ஆம்; அது உண்மைதான்; அந்தப் பிரபல இதழ் அண்மையில், நெல்லையில் தெருத்தெருவாக, ஒரு 'மார்க்கெட் சர்வே' (சந்தை ஆய்வு) நடத்தியது. வீடு வீடாக வாசகர்களை தமது பிரதிநிதிகள் வாயிலாக அணுகி, அந்த இதழின் வாசகர்கள் எதை விரும்புகிறார்கள், எதை விரும்பவில்லை, அதற்கு என்ன காரணம் என்பதை, வினாவிடை மூலம் பதிவு செய்தது. அப்போது 80 சதவிகிதம் பெண்கள், ''சகல விஷயங்களைப் பற்றியும் கூர்மையான கட்டுரைகளை வெளியிடுங்கள்'' என்று அழுத்தம் திருத்தமாகப் பேசியிருக்கிறார்கள். பாலியல் வக்கிரங்கள், வன்முறைகள்— இவை சார்ந்த விஷயங்களை வெறுக்கிறோம் என்று பொட்டில் அடித்தாற்போல் கூறியிருக்கிறார்கள். இதேபோல் மதவெறி, சாதி வெறி, இனவெறி, சுரண்டல், அடக்கு முறைகள் — இவற்றைத் தாங்கள் எதிர்ப்பதாகவும், மத நல்லிணக்கம், மக்களிடையே ஒற்றுமை, சமநீதி இவற்றைத் தாங்கள் விரும்புதாகவும், இளைஞர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

வாசகர்களின் பொதுக்கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டிய நிர்ப்பந்தம், வெகுஜன வார இதழ்களுக்கும், நாளேடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது ஏனெனில், 'சந்தைக் கலாச்சாரம்' என்பது, அவர்களின் கொள்கை வழியல்லவா?

வாசகர்களின் சிந்தனையில் இன்று மாற்றம் ஏற்பட்டுள்ளது; குறிப்பாக, மக்கள் தொகையில் சரிபாதியினராக உள்ள பெண்களின் சிந்தனையில் தீவிர மாற்றம் நிகழ்ந்து வருகிறது; அவர்களை ஓரளவேனும் திருப்தி செய்யாவிட்டால், தமது பத்திரிகையின் விற்பனை கணிசமாக வீழ்ந்துவிடும் என்பதை ''ஜனரஞ்சக ஏடுகள்'' கடந்த சில ஆண்டுகளில் உணர்ந்துள்ளன. எனவே, கலை இலக்கியத் துறையில், சிற்றிதழ்கள் மற்றும் நடுவாந்தர ஏடுகளின் 'தலை சிறந்த' படைப்பாளிகளுக்கு ஓரளவு இடமளிக்க அவை முன்வந்துள்ளன. அவற்றின் ஆசிரியர் குழுக்களில் பணியாற்றும் இளைஞர்களும், மக்களுடன் நெருங்கிப் பழகும் முக்கிய நிருபர்களும், தமது நிர்வாகத்திற்கு வாசகர்களின் "நாடித்துடிப்பை" நல்ல விதமாக உணர்த்தியிருப்பார்கள் எனத் தோன்றுகிறது. அதன் விளைவாகவும், சு.ரா. வர்ணிக்கும் "வரவேற்கத்தக்க, ஆரோக்கியமான மாற்றங்கள்'' நிகழ்ந்திருக்கக் கூடும்!

கடந்த பத்தாண்டுகளில், இத்தகைய "வரவேற்கத் தக்க, ஆரோக்கியமான" இதழ்களைப் பற்றி என்னும் போது, கோமல் சுவாமிநாதனின் 'சுபமங்களா'வின் அற்புதமான இலக்கியப் பணியை, என்னால் என்றுமே மறக்க இயலாது. சிற்றேடுகளுக்கும், "பொழுதுபோக்கு ஏடு"களுக்கும் இடையேயான நடுவாந்தர ஏடு 'சுபமங்களா!' தரமான, புதுமையான தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், கருத்துப் பரிமாற்றங்களுக்கும் மட்டுமின்றி. நாடகம், திரைப்படம் முதலிய கலைகளின் முன்னேற்றத்திற்கும், ஆக்கபூர்வமாகப் பணியாற்றிய அருமையான இலக்கிய இதழ், 'சுபமங்களா'. கோமலின் மறைவுடன், அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டது; இது, தமிழ்க்கலை இலக்கியத்துறைக்கு ஈடுசெய்ய இயலாத பேரிழப்பாகும்.

கோமல், ஒரு மக்கள் கலைஞர்; மக்கள் எழுத்தாளர்; உலகக் கலை இலக்கியச் சிகரங்களைத் தமிழன் எட்டிப் பிடிக்க வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் பணியாற்றிய சீரிய படைப்பாளி + பத்திரிகை ஆசிரியர்; அவர் சென்ற அளவுக்கு, இன்றைய "ஜனரஞ்சகப் பத்திரிகை" ஆசிரியர்கள் செல்வார்களா என்பது சந்தேகம்!

தமிழியம், பெண்ணியம், தலித்தியம், சுற்றுச் சூழல் இயம், மார்க்சியம் இவற்றில் ஆர்வமுள்ள அனைத்துப் படைப்பாளிகளையும், வாசகர்களையும், இயக்கங்களையும் ஓரணியில் திரட்ட முனைந்தது, 'சுபமங்களா'; அதன் மரபில், கி.பி. இரண்டாயிரத்தில், தமிழ் இலக்கியம் வளர வேண்டும் என்பது என் ஆசை.

'சுபமங்களா'வின் பாதையில், தமிழ் இலக்கியம் செழிக்க வேண்டும் என விழையும் தீவிர வாசகர்கள், இன்று குறைந்தது இரண்டு லட்சம் பேர் இருப்பர் என்பது என் மதிப்பீடு. இவர்களின் தொகை, எண்பது லட்சமாகப் பெருக வேண்டும் என்பது என் கனவு! 21 ஆம் நூற்றாண்டுப் பெருங்கனவு!...

தமிழ் மக்களின் சிந்தனையில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை. எந்தத் திசை வழியில் எத்தகைய தத்துவ அடிப்படையில், யாருடைய நல உரிமைகளுக்காக இந்த மாற்றங்கள் நிகழ வேண்டும்? இத்தகைய மாற்றங்களைக் கொண்டு வருவதில் நமது பத்திரிகைகள், ஊடகங்கள், கலை இலக்கிய வாதிகளின் எதிர்காலப் பங்களிப்பு என்னவாக இருக்கவேண்டும்?

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் என்னும் பாதையை நமது ஆட்சியாளர்கள் 100 கோடி இந்திய மக்கள் மீது திணிக்க முற்பட்டிருக்கும் இவ்வேளையில், சுதந்திரம், ஜனநாயகம், சமதர்மம், வள வாழ்வு இவற்றில் அக்கறை கொண்டோர் அனைவரும் ஆழ்ந்து சிந்தித்து விடைகாண வேண்டிய, 1999 டிசம்பர் மாதம் இது! புது யுகத்தின் வரவு, நல்வரவு ஆகுக!



படிப்பகம்

www.padippakam.com

# காக்கை பாடினி

கவிதை

**பழமலய்**

சார்ங்கதர பத்ததி என்றொரு தொகைநூல்.

அதில் விஜ்ஜகா பாடியுள்ளாள்:

''கருங்குவளை இதழ் போன்ற
கரிய நிறமுடைய என்னைத்

தண்டியாசிரியர் அறிந்திருக்கவில்லை.

'வெள்ளை நிறத்தவள் கலைமகள்' என்று
பிழைபடக் குறிப்பிடுவது அதனாற்றான்.''

விஜ்ஜகாவே எங்கள் வீடு வந்ததாக
அவள் வந்தாள்.
சுற்றுச்சுவர் வாயில் கதவில் இருந்து
பாடத் தொடங்கினாள்.


சோற்றுக்குப் பாடும் நேரமில்லை இது.
காதலர் அழைப்பாகவும் இல்லை.
என்னைப் பாடவும் என்ன இருக்கிறது.

தென்னை நிழலும் தென்றலும்
என் கவனிப்பும் ஊக்கம் தந்திருக்கலாம்.
கவனிப்பது, இல்லாதது கூடக்
கலைஞர்களுக்குப் பொருட்டோ-
இருக்கும் திசைகளிலும்
எதிர்வரும் காலத்திலும்
நம்பிக்கை வைப்பவர்கள் அவர்கள்.

தன்குரலை முதலில்
தான் மதிக்கிறாளோ-
என்னதான் தனக்கு அது வராதது என்று
இடைவிடாத பயிற்சியோ-
இந்தப் பயிற்சியே அரங்கேற்றந்தான்!

மாவின் கிளைக்குத் தாவினாள்.
''தனக்கு உரிய இடமும் அதுதான்'' என்று
தான் உறுதிப்படுத்துகிறாயா?

நீ அடைகாத்தவள்
பொறித்து வளர்த்தவள்.
''அ-ஆ'' என்று திறந்த வாயில்
இரையையும் இசையையும் ஊட்டியவள்!






படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை



பகவதிசரண் வர்மா (1903-1980), சிறு வயதிலேயே தந்தையை இழந்து, குடும்பப் பொறுப்பெனும் எதிர்நீச்சலோடு, பி.ஏ., எல்.எல்பி. படித்து, கான்பூரில் வழக்குரைஞர் பணி மேற்கொண்டவர். எட்டாம் வகுப்பிலேயே கவிதையுடன் துவங்கியது இலக்கிய வேட்கை. கவிதைகளில் தொடங்கிய இந்தப் பயணம் சிறுகதை, புதினங்கள், கட்டுரைகள், நாடகங்கள் என்று நீண்டது. புற வாழ்க்கைப் பணிகள் வானொலி ஊழியம், திரைப்படக் கதை-வசனகர்த்தா, புத்தக ஆசிரியர் - பதிப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் என்று பலவயப்பட்டன.

அவரது புதினங்களில், சித்ர லேகா (பின்னர் திரைப்படமாக்கப் பட்டது), கோணல்-மாணல் பாதை, கடைசி வாய்ப்பு, நமது விளையாட்டு - பொம்மைகள், கோடு போன்றவைகள் பேசப் பட்டவை. இவரது சிறுகதைத் தொகுப்புகள் நான்கு வெளியிடப்பட்டன. சாகித்ய அகாதமி விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

சுற்றியுள்ள சமூகத்தை இவர் நோக்கிய பார்வையின் ஆழத்தை, இவரது பேனா எவ்வளவு நுட்பத்துடன் பதிவு செய்ய வல்லது என்பதற்கு எள்ளலும், நகைச்சுவையும் இழைந்தோடும் இந்தக் கதை ஒரு நல்ல எடுத்துக் காட்டு.

# பிராயச்சித்தம்

பகவதி சரண் வர்மா

தமிழாக்கம் – வீ. விஜயராகவன்

வரிவரியான கோடுகளுடைய அந்தப் பூனைக்கு வீட்டில் யார் மீதாவது பாசம் என்று சொன்னால் ராமுவின் மனைவியிடம் என்று சொல்லலாம். அதேசமயம் அவளுக்கு அந்த வீட்டில் யார் மீதாவது அதீத வெறுப்பு என்றால், அது அந்தப் பூனை மீது எனலாம். ராமுவின் மனைவி தாய் வீட்டிலிருந்து முதன் முதலாக புகுந்த வீட்டிற்கு வந்து இரண்டு மாதங்களே ஆகின்றன, பதினான்கு வயதிலேயே கணவனின் அன்பு அரவணைப்பில், மாமியாரின் நேச மகளாக. வீட்டுப் பண்டக் கிடங்கின் சாவிக்கொத்து அவள் இடுப்பின் வெள்ளி அரவணைச் சங்கிலியில் அசைந்தாட, வேலையாட்களிடம் ராமுவின் வீட்டுக் காரியாய் அவளது அதிகாரம் ஓங்க ஆரம்பித்தது. மாமியாரின் மனம் பூஜை-பாராயணம் என்று திரும்பி விட்டது.

இருந்தும், ராமுவின் மனைவியால் தன் பதினான்கு வயதிற்குண்டான குழந்தைத்தனத்தை முழுவதும் களைய முடியவில்லை. அவ்வப்போது பண்டக்கிடங்கு திறந்தே கிடக்கும், அவளும்



படிப்பகம்

www.padippakam.com

குட்டித்தூக்கம் போட்டு விடுவாள். பூனை கொடுக்கும் தொல்லை தாங்க முடியாது. அவள் அயர்ந் திருக்கும் சமயம், செருவத்தில் இருக்கும் புத்துருக்கு நெய்யெல் லாம் பூனை வயிற்றில். பாலை நிரப்பி வைத்துவிட்டு, சமையல் காரியிடம் காரியமாகப் போய்த் திரும்புவதற்குள், பாலின் அளவு பாதியாய்க் குறைந்துவிடும். இது கூடப் பர்வாயில்லை. அவளுடைய உணவே கெடும்படியாக, பெரும் சோதனையாகத் தீவிரத் தொல்லை களும் வந்து சேர்ந்து கொண்டன. கிண்ணம் நிறையக் கூட்டு- அவள் அறையிலிருந்து திரும்புமுன் மறையும் மாயம். கடையிலிருந்து வாங்கி வைத்திருந்த பால்-ஏடு, அவள் வெற்றிலை மடித்துக் கொடுத்துவிட்டு வருவதற்குள், முழுவதும் சுத்தமாய் நக்கப்பட்டு, துடைத்து வைத்தாற்போல வெறும் வட்டு மட்டும். ராமுவின் மனைவி பொறுக்க முடியாமல் நிச்சயித்து விட்டாள், ஒன்று அந்த வீட்டில் அவள் இருக்க வேண்டும் இல்லை அந்தப் பூனை. இருவருமே பதுங்க ஆரம்பித்து விட்டனர், விழிப்புடன் தருணம் தேடி.

பூனை பிடிப்பதற்கு ஒரு கூண்டு செய்யப்பட்டது. அதில் பால், பால்-ஏடு மற்றும் அதற்குப் பிடித்த மான பண்டங்கள் வைக்கப் பட்டன. ஆனால் பூனை அந்தப் பக்கம் கண்ணைக் கூடத் திருப்ப வில்லை. தற்காப்பு உணர்வின் மிகையில் அதற்கு ராமுவின் மனைவியிடம் இருந்த பயமும் போய்விட்டது. பரந்த ஏற்பாடு களுக்குப் பின்னரும், அவளால் பூனையின் மேல் கை வைக்க முடியவில்லை. அது கொடுத்த தொல்லைகளின் விளைவாய் அவளுக்குக் கிடைத்தது மாமியா ரிடம் சூடான ஏச்சும், ராமுவிற்குக் கிடைத்தது காய்ந்து-தீய்ந்த ரொட்டிகளும்.

ஒரு நாள் அவள் ராமுவிற்காகப் பாயசம் பண்ணியிருந்தாள். பிஸ்தா, பாதாம், பாலேடு, கோவா, சீனி எல்லாவற்றையும் புதுப் பாலுடன் சுண்டக் கிளறினாள். அதை ஒரு மண் வட்டிலில் இட்டு, பாயசத்தின் மேற்பரப்பில் தங்கச் சருகு படர விட்டு, எளிதில் பூனைக்கு எட்டாதவாறு அறையின் ஒரு மேல் பிறையில் வைத்து விட்டு, வெற்றிலை போட்டுக் கொள்ள அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

பின்னாலேயே பூனையும் அந்த அறைக்குள் நுழைந்தது. பிறையின் கீழ் நின்று கொண்டே மேலே நோட்டம் விட்டது, வாசனையை நுகர்ந்த படியே. நல்ல சரக்கு தான். பிறையின் உயரத்தை அளந்த வாறே, ராமுவின் மனைவி வெற்றிலை மடிப்பதில் மும்முர மாக இருந்ததையும் கவனித்தது. அவள் மடித்த வெற்றிலையுடன் மாமியாரைத் தேடி நகர்ந்ததுதான் தருணம், ஒரே தாவலில் அதன் ஒரு முன்னங்கால் பிறைக்குள், பாயச வட்டிலைத் துழாவியது. அடுத்த கணம் கிணுங்கிய ஒலியுடன் மண் வட்டில், பாயின் மேல் உருண்டு உடைந்து சிதறியது.

ஒலியைக் கேட்ட கணமே, வெற்றிலைச் சுருளை மாமியார் முன்னர் எறிந்துவிட்டு, அறைக்குள் மீண்டும் ஓடிவந்த ராமுவின் மனைவி கண்டது, உடைந்துச் சிதறிய வட்டிலையும், பாயில் பரவிய பாயசத்தையும், அதை நக்கி உறிந்து நொட்டை விட்டுக் கொண்டிருந்த பூனையையும். அவளைக் கண்டதுமே பூனை மறைந்தது மாயமாய்.

ராமுவின் மனைவிக்கு ரத்தம் கொதிக்க ஆரம்பித்துவிட்டது. மூங்கில் இருந்தால் தானே ஊதுவதற்குப் புல்லாங்குழல்? பூனையை ஒழித்துக் கட்டுவதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டாள். இரவு முழுவதும் தூங்கவேயில்லை. எந்த உத்தியைக் கையாண்டால் பூனையின் உயிரைப் பறிக்க முடியும் என்ற யோசனையில் படுத்தவாறே நேரம் கழிந்தது. பொழுது விடிந்து பார்த்தால் வாசற்படியருகில் அவளை ஏறிட்டவாறு அமைதி யாய் அமர்ந்திருந்த பூனையின் பார்வையில் பரிவு இருந்தது.

அவள் கொஞ்சம் சிந்தித்த பிறகு, புன்னகையுடன் எழுந்தாள். பூனை கொஞ்சம் பின் வாங்கியது. ஒரு கிண்ணம் நிறையப் பாலை நிரப்பி வாசற்படியருகே வைத்து விட்டு அவள் அங்கிருந்து நகர்ந்து விட்டாள். கையில் ஒரு மணைப் பலகையை ஏந்தி அவள் திரும்பி வந்தபோது, பூனை பாலைப் பருகுவதில் மும்முரமாகி இருந்தது. சரியான தருணமாகப்படவே அவள் முழு பலத்தைத் திரட்டி, பலகையை பூனை மேல் விசிறி எறிந்தாள். ஓர் அசைவோ-உதறலோ, ஒரு கத் தலோ-முனகலோ எதுவுமின்றி பூனை விறைத்துக் குப்புற விழுந்தது.

முதலில் எழுந்த சப்தத்தைக் கேட்டவுடனேயே, வேலைக்காரி துடைப்பத்தை நழுவ விட்டாள். சமையல்காரி அடுக்களையை விட்டு வெளியே வந்தாள். மாமியார் பூஜையைக் கைவிட்டாள். அனைவரும் சம்பவ இடத்திற்கு வெளியே குழுமி விட்டனர். வெளியே வந்த ராமுவின் மனைவி முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு குற்றவாளியாய் நின்று கொண்டு அவர்கள் சொல்வதைக் கேட்க லானாள்.

வேலைக்காரி தான் துவங்கி னாள்: ''அரே ராம், பூனை செத்தேப் போச்சு. பெரியம்மா, பூனை மருமக கையாலெ செத்துப் போனது ஒன்னும் நல்லதுக்கில்லே, கெடுதல் நடந்து போச்சு.''

சமையல்காரி சேர்ந்து கொண் டாள்: ''அம்மா, பூனைய சாகடிக் கிறதும், மனுஷனைக் கொல்றதும் ஒரே மாதிரி தான். மருமக தலைல



படிப்பகம்

www.padippakam.com

இந்த சாவுப் பழி இருக்கிற வரைக்கும் நான் உள்ளே சமையல் பண்ண முடியாது.''

மாமியார் தன் பங்குக்குச் சொன்னாள்: ''ஆமா, சரியாத்தான் சொல்றீங்க. அவ மேல விழுந்திருக்கிற கொலைப் பாவம் இறங்குற வரை நாம யாருமே சாப்பிடறது என்ன, தண்ணிக்கூட குடிக்க முடியாது. பொண்ணே, என்னடி இப்படி ஒரு காரியம் பண்ணி வச்சிருக்கே.''

வேலைக்காரி கேட்டாள்: ''இப்பொக் கூட என்ன, சொன்னீங்கன்னா- பண்டிட்ஜியைக் கூட்டிட்டு வரட்டுமா?''

மாமியாருக்கு உயிரே திரும்பி வந்தாற்போல் இருந்தது. ''ஆமா, ஆமா- சீக்கிரமே ஓடிப் போய் பண்டிட்ஜியைக் கூட்டிட்டு வா.''

பூனையின் துர்மரணச் செய்தி மின்னலைப் போல் அக்கம் பக்கமெங்கும் பரவிவிட்டது. அக்கம் பக்கத்திலிருந்த பெண்கள் முடிச்சுப் போட்டாற் போல் திரண்டுவிட்டனர். தலை குனிந்து அமர்ந்திருந்த மருமகளைச் சுற்றி கேள்வி மேல் கேள்விகள் தெறித்தன.

பண்டிட்ஜீ பரமசுகம் பூஜையி லிருந்த போது, அவருக்குச் செய்தி எட்டியது. கேட்டவுடனேயே அவர் எழுந்துவிட்டார். மனைவியிடம் புன்முறுவலுடன் சொன்னார்:

''எனக்காக எதுவும் சமைக்க வேண்டாம். லாலா காஸீராமோட மாட்டுப்பொண்ணு பூனையைக் கொன்னுட்டாளாம். பிராயச்சித்தம் செய்ய வேண்டியிருக்கும், பணி யாரங்கள் எல்லாம் பண்ணி.''


பண்டிட் பரமசுக சௌபெ- குட்டை. ஆனால் கொழுத்த கட்டை. நாலடி பத்து அங்குல உயரத்தில் ஐம்பத்தெட்டு அங்குல சுற்றளவு வயிறு. உருட்டைத் தலை, புஷ்டியான மீசை. சிவந்த உடலின் சிகரமாக, தோள்வரை புரளும் குடுமிக் கட்டு. மதுராவில், படியளவு போஜனம் செய்யக்கூடிய பண்டிதர்களைத் தேடிப் பட்டியல் தயாரித்தால் அதில் பண்டிட் பரமசுகத்தின் பெயர் முதலிடத்தில் இருக்கும் என்று ஊரில் சொல்லிக் கொள்வார்கள்.

அப்படிப்பட்ட பண்டிதர் வந்ததுமே வீட்டில் சபை பூர்த்தியானது. பஞ்சாயத்தார் அமர்ந்தார்கள்- மாமியார், சமையல்காரி, கிஸ்னுவின் தாய், சுன்னுவின் பாட்டி, பண்டிட் பரமசுகம். மற்ற பெண்கள் மாட்டுப் பொண்ணைச் சுற்றி நின்றனர்.

கிஸ்னுவின் தாய் பேச ஆரம்பித்தாள்: ''பண்டிட்ஜி, பூனையைக் கொன்னால் என்ன நரகம் கிடைக்கும்?''

பண்டிட் பரமசுகம் பஞ்சாங்க ஏடுகளைப் புரட்டினார். ''பூனையைக் கொன்னுட்டாங்கிற வெறும் செய்தியை மட்டும் வெச்சு என்ன

**இரவு முழுவதும்தூங்கவே இல்லை. எந்த உத்தியைக் கையாண்டால் பூனையின் உயிரைப் பறிக்க முடியும் என்ற யோசனையில் படுத் தவாறே நேரம் கழிந்தது.**






படிப்பகம்

www.padippakam.com

மாதிரி நரகம்ன்னு ஒன்னும் சொல்லமுடியாது. எந்த நேரம்-முகூர்த்தத்துலே அது நடந்ததுன்னு தெரியணும். அப்பத்தான் சொல்ல முடியும்.''

''அதென்ன பொழுது விடிஞ்சு ஒரு ஏழு மணி இருக்கும்.'' என்றாள் சமையல்காரி.

பண்டிட் பரமசுகம் பக்கங்களைப் புரட்டினார். அவரது விரல்கள் எழுத்துக்கள் மீதும், எண்கள் மீதும் நடனமாடின. கை நெற்றியில் அழுத்தமாகப் பதிந்தது. கொஞ்சம் சிந்தித்த பின், அவரது முகத்தில் ஒளி கூடியது, நெற்றி நிமிர்ந்தது, நாசி விரிந்தது, குரலில் கனம் கூடியது. ''ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, என்ன கஷ்ட காலம், ஏழு மணி காலை வேளை-பரம்ம முஹூர்த்தத்திலே பூனையை சாகடிச்சாச்சு. இந்தப் பாவத்திற்கு கும்பிபாக நரகம்தான். ராமு-அம்மா, இது ரொம்பக் கெடுதலாச்சே.''

ராமுவின் அம்மா கண்களில் நீர் பெருகியவாறே கேட்டாள். ''பண்டிட்ஜி, அப்படின்னா இப்பொ என்ன பண்ணட்டும்?''

பண்டிட் பரமசுகத்தின் உதடுகளில் புன்னகை தோன்றியது. ''அம்மா, கவலைப்படாதீங்க, நாங்க எல்லாம் இந்த மாதிரி நாளுக்குன்னு இல்லாமெ வேறெ எதுக்கு இருக்கோம். சாஸ்திரங்கள்லே இதுக்கெல்லாம் பிராயச்சித்தம் பண்ண வழி வெச்சிருக்காங்க. அதாலெ எல்லாத்தையும் சரி பண்ணிடலாம்.''

ராமுவின் அம்மாவுக்கு மூச்சுத் திரும்பியது. ''பண்டிட்ஜி, அதனாலெ தானே உங்களைக் கூட்டிட்டு வரச் சொன்னது. மேலே என்ன பண்ணனும் சொல்லுங்க.''

''என்ன பண்ணனும்? இதுக்குத் தங்கத்திலே ஒரு பூனை பண்ணி, மாட்டுப்பொண்ணு கையாலெ தானம் பண்ணிடுங்க. அது செய்யற வரைக்கும் வீட்டு மேலெ விழுந்திருக்கிற பாவம் கழியாது. தங்கப்பூனை தானம் பண்ணிட்ட அப்புறம் இருபத்தோரு நாள் (பூஜை) பாராயணம் நடக்கணும்.''

சுன்னுவின் பாட்டி ஒத்து ஊதினாள்: ''ஆமா, பின்னேயென்ன, பண்டிட்ஜி சரியாத்தான் சொல்றாரு. பூனை தானம் முதலிலே நடக்கட்டும், அப்புறமாப் பாராயணம் வெச்சிக் கலாம்.''

ராமுவோட அம்மா கேட்டாள்: ''பண்டிட்ஜி, அப்பொ பூனை எத்தனை தோலாவிலே செய்யணும்?''

புன்முறுவல் பூத்தவாறே பண்டிட் பரமசுகம், தொந்தியைத் தடவிக் கொண்டே சொன்னார்: ''பூனை எத்தனை தோலாவிலா? அம்மா, சாஸ்திரத்திலே சொல்லியிருக்கு, பூனை எடைக்கே தங்கப் பூனையும் செய்யணும்னு. ஆனா இது கலியுகம், கர்மம், தர்மங்கெளெல்லாம் நாசமாயாச்சு, சிரத்தையும் போயாச்சு. அதனாலெ பூனையோட எடைக்குச் சரியா இருபது- இருபத்தோரு சேர் எடைலே தங்கப் பூனை முடியுமா என்ன அம்மா? ஏதோ ஒரு இருபத்தோரு தோலா எடைக்காவது பண்ணினா ச்ரி, அதுக்கு மேலே உங்க சௌகரியம்.''

ராமுவின் அம்மா பண்டிட்ஜியைப் பார்த்த பார்வையில் அவள் முழியே பிதுங்கி விட்டாற் போலத் தோன்றியது. ''அம்மாடியோ, இருபத்தோரு தோலா தங்கமா? பண்டிட்ஜி, அது ரொம்ப அதிகமாச்சே. ஒரு தோலா நிறைக்கக் கொடுத்தாப் போதாதா?''

பண்டிட் பரமசுகம் வாய் விட்டுச் சிரித்தார். ''ராமு-அம்மா, ஒரு தோலாவிலே தங்கப் பூனையா? மாட்டுப் பொண்ணை விடப் பணம் அவ்வளவு முக்கியமா? அவள் தலைல அவ்வளவு பாவம் விழுந்திருக்கச்சே, இவ்வளோ கஞ்சத்தனம் கூடாது.''

இப்படித் தொடங்கிய பேரம் கடைசியில் பதினோரு தோலா எடை தங்கப் பூனையாக இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப் பட்டது. அடுத்து பூஜை-பாராயணம் பற்றிப் பேசினார்கள்.

பண்டிட் பரமசுகம் சொன்னார். ''இதிலே என்ன கஷ்டம், நாங்கெல்லாம் எதுக்குப் பின்னே இருக்கோம் ராமு அம்மா? நான் பாராயணத்தைப் பார்த்துக்கறேன். பூஜைக்கு வேண்டிய சாமான்களை மட்டும் வீட்டுக்கு அனுப்பி வெச்சிடுங்க.''

''பூஜைக்கு என்னென்ன சாமான்கள், எவ்வளோ வேணும்?''

''அதுக்கென்ன குறைஞ்சபட்சம் எவ்வளவு தேவையோ அவ்வளவு அனுப்பினாப் போதும். தானத்திற்கு ஒரு பத்து மணங்கு கோதுமை, ஒரு மணங்கு அரிசி, ஒரு மணங்கு பருப்பு, எள் ஏறக்குறைய ஒரு மணங்கு, அஞ்சஞ்சு மணங்கு அவரை, பட்டாணி, ஒரு அஞ்சு படி நெய், உப்பு ஒரு மணங்கு-இவ்வளவு இருந்தாப் போதும். காரியம் நடந்துடும்.''

''அடே அப்பா, இவ்வளவு சாமான்களா? பண்டிட்ஜி, இதுலே நூத்துக் கணக்கிலே செலவழியும் போலிருக்கே.''


ராமு-அம்மாவுக்கு அழுகையே வந்துவிட்டது.

''இதைவிடக் குறைச்சா வேலையே நடக்காது. பூனையைக் கொன்னது மகாபாவம். செலவைப் பார்க்கிற போது மருமகளோட பாவமும் நினைவிலெ இருக்கட்டும். இது ஒரு பிராயச்சித்தக் கடன், சிரிச்சு விளையாடற சமாசாரம் இல்லெ. பிராயச்சித்தத்தின் மூலம் கிடைக்கிற பலனைப் பொறுத்தே செலவுகளும் இருக்கணும். நீங்களும் இப்படி-



படிப்பகம்

www.padippakam.com



அப்படிங்கற குடும்பமும் இல்லை. இந்தச் செலவு உங்களுக்கு ஒன்னும் பெரிசில்லெ. கை மண்ணை உதறுற மாதிரிதான்.''

சமையல்காரியும் தன் பங்குக்குச் சொன்னாள். ''அப்புறம் அம்மா, நீங்க எல்லாரும் பெரிய வீட்டு மனுஷங்க வேறெ, இதெல்லாம் பொறுக்க முடியாத செலவா என்ன?''

ராமுவின் அம்மா சுற்றுமுற்றும் பார்த்தாள். எல்லோருமே பண்டிட்ஜியின் பக்கம் இருப்பது தெரிந்தது. பண்டிட் பரமசுகத்தின் முகத்தில் புன்னகை மிதந்தது.

''ராமு-அம்மா, ஒரு பக்கம் மருமகளுக்காக கும்பிபாக நரகம், இன்னொரு பக்கம் உங்க கையிலே இருந்து கொஞ்சம் செலவு. அதை நினைச்சு முகத்தைத் திருப்பிக் காதீங்க.''

அவர் குரலில் கடுமை கூடியது. ''இது மனசு உவந்து செய்ய வேண்டிய காரியம். இஷ்டமில்லேன்னா வேண்டாம், விட்டுடுங்கோ, நான் போய்வரேன்.''

இதைச் சொன்னவாறே பண்டிட்ஜி பஞ்சாங்க- புத்தகக் கட்டுக்களைச் சேர்த்து எடுத்துக் கொண்டார்.

''பண்டிட்ஜி, பண்டிட்ஜி, ராமுவோட அம்மா ஒத்துக்காத மாதிரி ஒன்னுமே சொல்லலையே. பாவம், சங்கடத்திலே இருக்கா, கோவிச்சுகாதீங்க, பண்டிட்ஜி.''

சமையல்காரி, சுன்னுவின் பாட்டி, கிஸ்னுவின் அம்மா எல்லோரும் ஒரு சேரக் குரல் எழுப்பினார்கள்.

''இருபத்தியோரு நாள் பாராயணத்திற்கு தட்சிணையா ரூபாய் ஒரு தொகை, அதுக்கு மேலெ இந்த இருபத்தியோரு நாள், தினம் அஞ்சஞ்சு பிராமணனுக்கு வகையா சாப்பாடு போடணும்.''

**இதுக்குத் தங்கத்திலே ஒரு பூனை பண்ணி, மாட்டுப்பொண்ணு கையாலெ தானம் பண்ணிடுங்க. அது செய்யற வரைக்கும் வீட்டு மேலெ விழுந்திருக்கிற பாவம் கழியாது.**

கொஞ்சம் நிதானித்து பண்டிட் பரமசுகம் மேலும் சொன்னார்:

''இதைப் பத்திக் கவலைப் படாதே. நானே தினம் இரண்டு வேளையும் சாப்பிட்டுச் சமாளிச் சுடுவேன். நான் அப்படி செய்தாலே, அஞ்சு பிராமணாளுக்குச் சாப்பாடு போட்ட பலன் கிடைச்சுடும்.''

''பண்டிட்ஜி சொல்றதெல்லாம் சரியாத்தான் இருக்கு, அவரைப் பார்த்தாலே தெரியலயா?'' சமையல்காரி அங்கீகரித்தாள், முறுவலுடன் அவரது தொந்தியை நோக்கிப் பார்வையைத் தாழ்த்தியவாறே.

''அப்பச் சரி, பிராயச்சித்தத்துக்கான ஏற்பாடெல்லாம் செய்ய ஆரம்பிங்க. ராமு-அம்மா, பதினோரு தோலா தங்கம் எடுத்து வையுங்க, நான் அதுலே பூனை பண்ணி எடுத்துட்டு வரேன். குறைஞ்சது இரண்டு மணி நேரமாவது ஆகும் இதுக்கு. அந்த நேரத்திலே பூஜை சாமானுக்கெல்லாம் ஏற்பாடு ஆகட்டும். நினைவு வைச்சுக்கோ பூஜை சமயத்திலே..''

பண்டிட்ஜி சொல்ல வந்ததை முடிப்பதற்குள், வேலைக்காரி மூச்சிரைக்க ஓடி வந்தாள். பாதிப் பேர் எழுந்து விட்டார்கள் அந்தப் பதட்டத்தில். ராமு-அம்மா பீதியடைந்து கேட்டாள். ''என்னடி, என்ன ஆச்சு?''

வேலைக்காரியின் குரல் தட்டுத் தடுமாறியது. ''அம்மா, பூனை எழுந்து ஓடிப் போயிடிச்சு.''



படிப்பகம்

www.padippakam.com

க ட் டு ரை

# நான் அறிந்த ந.பிச்சமூர்த்தி

அமர எழுத்தாளர், திரு. ந. பிச்சமூர்த்தி, "நான் எதற்காக எழுதுகிறேன்?" என்ற 'எழுத்து' கட்டுரையில்,

"எழுதுவது ஒரு கலைஞனுக்கு இயல்பானது... மல்லிகை பூப்பது போல், விதைகள் விழுந்து மரமாவது போல்... அறிவுக்குப் புலப்படாத பாலுணர்வின் தூண்டுதல் போல்..." என்று தன் இலக்கிய ஆர்வத்தின் ஆதாரத்தை விவரித்திருக்கிறார்.

பிச்சமூர்த்தி இயல்பிலேயே, ஆன்மிக விஷயங்களிலும், துறவிலும் நாட்டங் கொண்டவராக இருந்திருக்கிறார்.

சம்சார வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த பின்னும், ஒரு வருட காலம் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சந்நியாசத்தை விரும்பி ஊர் ஊராக அலைந்திருக்கிறார்.

ரமண ரிஷியிடமும், சித்தர் குழந்தைசாமியிடமும் உபதேசம் வேண்டி அணுகி, தன்னைத் துறவியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார். சந்நியாசிகள், இவருக்கு உசிதமான வாழ்க்கை சம்சாரம்தான் என்று உபதேசித்திருக்கிறார்கள்.

பிச்சமூர்த்தி, பின்பு நிறைந்த குடும்ப வாழ்க்கையில், தொழில் செய்து ஜீவனம் நடத்தி, இலக்கியங்களில் ஆர்வம் கொண்டிருக்கிறார். கவிதை, சிறுகதை, நாடகம் நாவல் எழுதிய எழுத்தாளராக மலர்ந்திருக்கிறார்.

இவருடைய இலக்கிய வெளிப்பாடுகள், நிறைவேறாத துறவு மோகத்தின் இன்னொரு வடிகாலாக எனக்கு யோசிக்கத் தோன்றுகிறது.

'கவி' முற்றினால் 'ஞானி' என்று சொல்வதுண்டு. முற்றி, முழுதும் துறக்காத ஞானிகள், கவிகளாக மாறுவதும் ஒருசாத்தியப் பாடுதான்.

எப்படியோ, பிச்சமூர்த்தி ஒரு உன்னத எழுத்தாளராகி, தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்திருக்கிறார்.

இந்த பூர்வாசிரமத்தில் புற அடையாளமாக, தாடி வைத்துக் கொள்ளும் பழக்கமும், இயல்பாகவே இவரைத் தொற்றிக் கொண்டிருக்கிறது.

பிச்சமூர்த்தி, நடேச தீக்ஷதரின் பிள்ளை. நடேச தீக்ஷதர், தன் காலத்தில் நாடகங்களில் ஆர்வமுடன் ஈடுபட்டு, சங்கீதம், நடிப்பு எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்று முதன்மையாக விளங்கியிருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

பிச்சமூர்த்தியின் கலை ஈடுபாட்டுக்கு இன்னொரு காரணம் இதுவாகவும் இருக்கலாம்.

"எனக்குள் எப்போதும், ஒரு கலைஞனும், ஒரு மனிதனும் இருக்கிறார்கள் — இவர்கள் எப்போதும் ஒருவரை யொருவர் ஏமாற்றிக் கொள்வதில்லை..." என்கிறார் பிச்சமூர்த்தி.



**எஸ்.வைதீஸ்வரன்**



படிப்பகம்

www.padippakam.com

அவர் வார்த்தைகளில் எப்போதும் உண்மை உண்டு. அவர் தன் இயல்புக்கு முரண்படாத படைப்பாளி.

இளம் வயதில், கவிதை எழுவதிலேயே அதிக ஆர்வம் கொண்டவர், மணிக்கொடி பத்திரிகை மூலம், ஒரு முக்கியமான சிறுகதை எழுத்தாளராக முத்திரை பதித்திருக்கிறார்.

அவர் கதைகள் மிகுந்த கலை ஒழுங்குடன், இயல்பான ஓட்டத்துடன் காணப்படுகின்றன. பிச்ச மூர்த்திக்குள் இருக்கும் 'மனிதன்' அவர் சிறு கதைகளில் அதிகம் தெரிய வருகிறான்.

வேறுவேறு வகைப்பட்ட மனிதர்களும் சம்பவங் களும் அவருடைய கவனிப்பில் நல்ல சிறுகதைகளாக மலர்ந்திருக்கின்றன. அவர் கால கட்டத்தில் வாழ்வு, நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், குடும்ப உறவுகள் அத்தனையும், மிக இயல்பான நடையில் சொல்லப் பட்டிருக்கின்றன.

அவருடைய கவிதைகளைவிட, சிறுகதைகள் அதிக வீச்சும், செய்திகளும் கொண்ட படைப்பாக இன்றைய வாசகனுக்குத் தோன்றலாம்.

சிறுகதையின் வடிவம் இவருக்கு 'சிக்'கெனப் பிடிபடுகிறது. கதைகள் சரியான இடத்தில் ஆரம்பித்து, ஒரு வாய்க்காலின் மெல்லிய சலசலப்புடன் ஓடி, இயல்பாக சங்கமம் ஆகி விடுகின்றன.

உதாரணமாக 'மாங்காய் தலை' என்ற 'கலை மகளில்' பிரசுரமான கதையைப் பார்க்கலாம்.

இது இரண்டு பிச்சைக்காரர்கள் பற்றிய கதை. ஒருவன் குரங்கை வைத்து ஆட்டிப் பிழைப்பவன். இன்னொருவன் 'மாங்காய் தலையை' வைத்து வேடிக்கை காட்டிப் பிழைப்பவன். 'மாங்காய் தலை' வினோதமான பிராணி. அது சத்தம் செய்யாது. உடம்பெல்லாம் விபூதி கரைத்துப் பூசிக்கொண்டு ஓணான் மாதிரி வயிறுடன் சின்ன 'மாங்காய் தலையுடன்' ஒரு பெண்ணால் அனாதையாக தெருவில் விடப்பட்ட வளர்ச்சி குன்றிய மனிதக் குழந்தை!

**மனித அறிவின் சாத்தியங்களும், அறிவுக்கெட்டாத மர்மங்களில் மறைந்து கொண்டிருப்பதை நாம் இன்று உணர்கிறோம்.**

இந்த ஊனக் குழந்தையை பிச்சைக்காரர்கள் ஆட்டிப் பிழைப்பது அந்தக் காலக்கட்டத்தில், அதிர்ச்சியேற்படுத்தாத விஷயமாக இருந்திருக்கிறது! இந்த 'மாங்காய் தலை' குரங்குக் குட்டியை விட அதிக வினோதமாக வேடிக்கைகள் செய்து பிச்சைக் காரனுக்கு நிறைய காசு சம்பாதித்துக் கொடுக்கிறது.

இரண்டு பேரில், ஒருவன் 'பணக்காரப் பிச்சைக் காரன்'. இவர்களுக்கிடையில் பொருள் வரவின் ஏற்றத் தாழ்வினால் எழும்புகிற போட்டி, பொறாமை, பூசல்கள்– 'ஏழைப்' பிச்சைக்காரன் மாங்காய் தலையை திருடிக் கொண்டு குரங்குக் குட்டியை விட்டுவிட்டு ஓடுகிற சுயநலத் தந்திரங்கள்... குரங்குக் குட்டியும், 'மாங்காய் தலையும்' சிநேகமுடன் வாழைப்பழங்களை பகிர்ந்து கொள்ளும் அந்யோன்யத்தை தடுத்து பிரித்து வைக்கும் பிச்சைக்கார மனங்கள்- இவ்வளவும் இந்தக் கதையை அற்புதமாக சோகத்தை உள்ளுருக்கும் அனுபவமாக ஆக்குகின்றன. முடிவில், தாங்கள் உடமைகளுக்காக போராடும் பிச்சைக்காரர்களை கோர்ட் வாசல் வரை கொண்டு நிறுத்துகிறது.

பிச்சமூர்த்தி இப்படி அநேக நல்ல சிறுகதைகள் எழுதியிருக்கிறார். நிறையவே எழுதியிருக்கிறார்.

1934 முதல் 44 வரை இவர் எழுதிய கவிதைகளின் அளவு குறைவானதுதான். இவருடைய ஆரம்ப காலக் கவிதைகளை பார்க்கும்போது, அவை துறவுப் பான்மையின் நீட்சியாகவே இருக்கின்றன. விழுமிய சிந்தனைகளையும், தத்துவ விசாரங்களையும் பொழிந்து வைக்க சௌகரியமான சாதனமாக கவிதைகள் இவருக்கு பயன்பட்டிருப்பதாக ஒரு அபிப்ராயம் எழுகிறது. அநேகமாக எல்லாக் கவிதைகளும் "கொம்பேறி, வான் பார்க்கும் அணில்களாக", மண்ணில் ஆரம்பித்து, மனதின் தனித்த விசாரக் கேள்விகளுடன் முடிகின்றன. இவருடைய ஆரம்ப கவிதைகளுக்கு 'பிக்ஷு' என்ற புனைப்பெயரையும் சூட்டிக் கொண்டதிலிருந்து, இவர் கவிதைகளின் பொருள் இன்னும் ஊர்ஜிதமாகிறது.

பிச்சமூர்த்தி, மரபுக் கவிதைகள் எழுதிவந்த அதே காலகட்டத்தில், அவருடைய சக எழுத் தாளரான கு.ப.ராவுடன் சேர்ந்து கொண்டு, மணிக் கொடியில் கவிதைகளை வசன வடிவில் எழுதிப் பார்க்க, சோதனைகள் மேற்கொண்டிருக்கிறார்.

கவிதையின் 'வடிவ சித்தாந்தங்களைப்' பற்றி நிறையவே யோசித்து, அதன் நியாயங்களை தீர்மானமாக பேசியிருக்கிறார், எழுதியிருக்கிறார். மேற்கே எஸ்ரா பவுண்ட் கண்ட முடிவுகளுக்கு இணையாக, நமது இலக்கிய மரபுக்கு இயல்பான புதிய கோட்பாடுகளை பிரசுரங்கள் செய்துள்ளார். கவிதைகளில் 'வடிவ சோதனை' பற்றி சிந்தித்த முதல்வராக, அல்லது முதல்வர்களில் ஒருவராக, நாம் இவருக்கு உரிய பெருமையையும், பாராட்டையும் நிச்சயம் அளிக்கவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

பாரதியின் 'காட்சி' வசனக் கவிதைகளும், வால்ட் விட்மனின் 'புல்லின் இதழ்களும்' இவருக்கு இந்த துணிவுக்கு வர உந்துதலாக இருந்ததாக சொல்லி யிருக்கிறார்.

ஆனாலும், ஆரம்பச் சோதனைக் கவிதைகளில், வடிவத்தைத் தவிர பாரதியின் வேறெந்தப் பாதிப்பு களும் இவரிடம் தென்படுவதில்லை.

மேலும் பரிணாமத்தின் மாற்றமுடியாத மலர்ச்சி யாக இவர் வரவேற்ற புதுக்கவிதைகளில் தொடர்ந்து ஈடுபடாமல், மரபுக்கும், சோதனைக்குமாக மாறிமாறிக் கவிதைகளை எழுதிக் கொண்டு வந்துள்ளார். இந்த முரண்பாடுகளுக்கு அவரே அறிந்து, பதில் சொல்லி யிருந்தாலும், தன் சோதனைகளை முழுவதும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள அவருக்கு தயக்கம் ஏற்பட்டிருக்கிறதோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

அதே போல், இவருடைய புதுக் கவிதை வடிவங்களும், பொதுவாக 'மரபின் ஓசையிலிருந்து' முற்றும் விடுபடாமல், யாப்புத் தளைகளை மீறுகின்ற சுதந்திரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளாதது போல் படுகிறது.

சி.சு. செல்லப்பா 1959-ல் 'எழுத்து'வின் முதல் மாதவெளியீட்டில், பிச்ச மூர்த்தி 15 வருடங்களுக்கு முன்பு எழுதி வைத்த "பெட்டிக் கடை நாரணன்' கவிதையை மறுபிரசுரமாக வெளியிட்டார்.

அந்தக் கவிதையின் பிரசுரம், புதுக்கவிதைகளின் 'புதிய ஆரம்பத்தை' தற்செயலாகத் தொடங்கி வைத்ததென்று கூறலாம்.

பிச்சமூர்த்தி 59லிருந்து 74 வரை எழுதிய கவிதை களில் நிறைய நல்ல படைப்புகள் எழுதப்பட்டுள்ளன.

62ல் வெளிவந்த "ராதை" நாயகி—நாயக பாவத்தின் மறுபிரதியாக இருந்தாலும், காதலின் உயர்ந்த ஒன்றிப்பை உணர்வாக்கிக் காட்டுகிறது.

"முழுவிளக்கில் சிறு விளக்கை ஏற்ற நீண்டது
திரியா?
சுட்டு விரலா?
இந்த வேலை பார்த்து வந்தவன்
யாராம்?"

"வழி தெரிந்து வரவில்லை
தீச்சுடரில்
விளக்கைப் பொருத்த
விரல் நீளும் விளையாட்டை
விரைந்து பார்க்க வந்தேன்.."

என்று நாயகன், நாயகியின் 'தீயை' அணைக்கிறான்.

1960-ல் எழுதிய 'மணல்' என்ற கவிதை சாதாரண அன்றாடத் தொந்தரவை, நுண்மையாக்கி வாழ்வுத் துன்பத்தின் குறியீடாக, கவிதையில் காட்டுகிறது.



'கண்ணில் விழுந்த மண்ணைக்
கண்ணுக்கே விட்டுவிடு
கை வைக்க வேண்டாம் கேள்.
கண்கள் சிவந்து விடும்...

துன்பத்தின் இயல்பை பூரணமாக உணர்ந்து கொள்ளும் போது, அதற்கு மாற்று ஏற்பட வழி உண்டு—

சிப்பி தனக்குள் விழுந்த மாசை புறக்கணிக் காமல் அதை முத்தாக மாற்றுகிறது என்ற பொருள் தொனிக்க இக்கவிதை முடிகிறது.

*1969*—ல் இவர் எழுதிய 'உற்பத்தி' என்ற கவிதையில் வருகிற சுவாரஸ்யமான விவரம், இன்றைய தலைமுறையின் கற்பனைக்குத் தோன்றாத ஒன்று:

'கன்னக்கோல் போடும் திருடன்
குச்சியில் சட்டி மாட்டி
ஓட்டை வழி உள்ளே நீட்டி
நிலைமை அறியாமல்
சட்டென்று உள்ளே நுழைவதில்லை.'

படிப்பகம்

www.padippakam.com

## ஆண்டுதோறும் சிறந்த நூல்களுக்கான பரிசுகளை வழங்கிவரும் திருப்பூர் தமிழ்ச் சங்கம் இவ்வாண்டு பரிசு வழங்கிய நூல்கள் விபரம்:

- நாவல்: நாஞ்சில் நாடன் (எட்டு திக்கும் மதயானை)
  பாவைச்சந்திரன் (நல்ல நிலம்)
  பாரதிபாலன் (செவ்வந்தி)
- சிறுகதை: அபிமானி (பனைமுனி)
  ப.ஜீவகாருண்யன் (ஒரு நதியைப் போல)
  ப.காமுத்துரை (நல்ல தண்ணிக்கிணறு)
  பாத்திமுத்து சித்திக் (இடி,மின்னல்,மழை)
- கவிதை: யுகபாரதி (மனப் பத்தாயம்)
  இளம்பிறை (நிசப்தம்)
  பூவை அமுதன் (உயிர் உறவு)
- கட்டுரை: மு.ராமசாமி (தமிழ்நாடகம் நேற்று இன்று நாளை)
  சு.பொ.அகத்தியலிங்கம் (மனித உரிமைகள்)
  மருதமுத்து (சமூக நீதிப் போராட்டம்)
- மொழி பெயர்ப்பு: நிர்மால்யா (சரீரம் ஒரு நகரம்- சச்சிதானந்தன் கவிதைகள்)
  ஆர்.சிவக்குமார் (உருமாற்றம்- காப்கா)
  இளங்கோவன் (பசுமை நினைவுகள்- ருஷ்கிந்பாண்ட்)
- சிறுவர் இலக்கியம்: கே.ஜீவபாரதி (அறிவை வளர்க்கும் சிறுவர் பாடல்கள்)
  வாண்டு மாமா (அறிவியல் தகவல்கள்)
  வே.சபாநாயகம் (தேச தேசக் கதைகள்)
- நாடகம்: ச.கலியாணராமன் (இரு நாடகங்கள்)
- நலிந்த கலைஞர் உதவித் தொகை: சூரங்குடி சேதுராசன் (ராஜபார்ட் நடிகர்)

*1999இல் வெளியான சிறந்த நூல்களுக்காக*
*2பிரதிகள் அனுப்பவேண்டும்.*
*ஒவ்வொரு பிரிவிலும்*
*ரூ.6000/- பரிசுத்தொகை.*
*30/4/2000க்குள் அனுப்ப வேண்டும்.*

**திருப்பூர் தமிழ்ச்சங்கம்,**
34, கே.பி.என். காலனி, 3ஆவது வீதி,
திருப்பூர்-641601.

இன்று கான்க்ரீட் சுவர்களில் 'கன்னக்கோல்' வைத்து திருடமுடியாது. அன்று மண்சுவற்றின் நடுவில் ஓட்டை போட்டு திருடன் உள்ளே நுழைவதற்கு பதிலாக, முதலில் சட்டியை குச்சியில் மாட்டி தலை போல் நுழைத்துப் பார்க்கும் 'வழக்கமான' தந்திரம் இருந்திருக்கிறது. அதை தலையென்று நினைத்து தடியால் அடித்தால், உடைவது சட்டி தான். திருடன் தப்பி விடுவான்!

பிச்சமூர்த்தியின் 'வழித்துணை' விரிந்த தூரிகையில் அதீதக் கற்பனையாக எழுதப்பட்ட நீண்ட புதுக்கவிதை. இதில், மனிதன், கடவுள், அவரவர்களுடைய படைப்புத் தொழில் பற்றிய அடிப்படைக் கேள்விகள், வேறுபாடுகள் இவைகளை கவிதை வரிகள் மூலம் சம்பாஷித்திருக்கிறார்.

'காட்டு வாத்து' என்ற இன்னொரு சீரிய கவிதை முயற்சி. மனிதனின் அறிவின் பலஹீனங்களை சுட்டிக் காட்டி, வாழ்க்கையில் பரிணாம இயக்கம் உணர்வு ஞானத்தின் மூலமாகவே செயல்படுகிறதென்று உணர்த்துகிறது. இது ரஷ்யக் 'காட்டுவாத்தின்' வேடந்தாங்கல் பயணத்தை ஆதாரமாகக் காட்டுகிறது.

இன்று விஞ்ஞானம், இத்தகைய உணர்வுகளில் மூலத்தையும் அறிவால் ஆராய்ந்து, கணிப்பொறியியலுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளுகிறது.

மனித அறிவின் சாத்தியங்களும், அறிவுக் கெட்டாத மர்மங்களில் மறைந்து கொண்டிருப்பதை நாம் இன்று உணர்கிறோம்.

பிச்சமூர்த்தியின் வாழ்வுப் பார்வை நடுநிலையான ஒன்று. மனித வாழ்க்கை அதன் ஆத்ம விடுதலையையே லட்சியமாகக் கொள்வதுதான் இயல்பு என்ற கருத்து அவருடையது. உணர்வு பூர்வமான உறவும், மனித வாழ்வின் தற்காலிகத் தன்மையை அறிந்து வாழுகின்ற பக்குவமும் தான், அவர் கவிதைகளின் ஆதாரச் செய்தியாக நான் உணர்கிறேன்.

40 வருடங்களாக (இடையில் நீண்ட இடைவெளிகள் நேர்ந்துவிட்ட போதிலும்) தன்னுடைய இலக்கியப் படைப்புகளில் தீவிரமான ஈடுபாடும், கலப்பற்ற நேர்மையும் கொண்டு, முதிர்ந்த சிந்தனையாளராக, நல்ல கலைஞராக நிறைவாழ்வு வாழ்ந்த ந. பிச்சமூர்த்திக்கு அவர் வாழ்ந்த காலத்திலேயே நிறையக் கௌரவங்கள் கிடைக்காமல் தவறிவிட்டதோ வென்று நினைக்கிறேன்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில், அவருடைய பங்களிப்பு நிச்சயமாக நல்ல பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பிச்சமூர்த்தியின மேல் மிகுந்த மரியாதையும், பக்தியும் கொண்டு, அவருடைய கவிதைப் படைப்புகளை பற்றி எழுதிப் பதிப்பித்து, புதுக்கவிதை இலக்கியத்தில் அவருடைய ஸ்தானத்தை ஊர்ஜிதமாக்க பாடுபட்ட திரு. சி.சு. செல்லப்பாவையும் நாம் இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

நினைக்கப்படும்.

# தமிழ்க்கடல்

மரன்


காரைக்குடிக்குப் போயிருந்தேன். இடையில் சித்தன்னவாசலை எட்டிப் பார்த்தேன். முடியவில்லை. ஏறித்தான் பார்க்க வேண்டியிருந்தது. பெரிய குன்று. ஏறும்போதே ஏகப்பட்ட மயில்களின் அகவல் ஓசை. ஐயாயிரத்துக்கு மேல் மயில்கள் இருக்கிறதாகச் சொன்னார்கள். அதிகமாகத்தான் சொல்கிறார்கள். ஆனாலும் மயில்கள் அதிகம்.

மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறை மேலே உள்ள குடைவரைக் கோவிலைப் பூட்டி வைத்திருந்தார்கள். திறந்து பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது. மூன்று தீர்த்தங்கரர்களின் சிலைகள். சுவரிலும் விதானத்திலும் அற்புதமான ஓவியங்கள். 1200 ஆண்டுகாலப் பழமை. யானை, தாமரை மலர், குளம், மீன்கள் என்று வண்ணங்களில் ஓவியம் நெஞ்சை நிறைத்தது. போகிறவர்கள் சாவியாலும் குச்சியாலும் ஓவியத்தைக் குத்திக் குத்திப் பார்த்து கொலை செய்திருக்கிறார்கள். அங்கே வெடி வைத்துப் பாறை உடைத்தபோது ஓவியங்கள் இன்னும் சிதிலமடைந்து உதிர்ந்துள்ளன. இவ்வளவுக்குப் பிறகும் வண்ணங்கள் மாறாமல் இப்போதும் ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களுக்கு எந்த வகையிலும் குறையாத ஓவியங்கள். அருகருகே வழக்கம் போல் யார், யாரைக் காதலிக்கிறார்கள் என்ற விபரங்கள், கரிக்கோடுகளாலும் கலர் பென்சில்களாலும். எழுதுவதில் உள்ள ஆர்வம் இவர்களுக்கு இன்னமும் குறையவே இல்லை.

வண்ணப்படங்களுள் ஒருபடம். அரசனின் படம். எங்கோ பார்த்ததாக நினைவு. யோசித்தபோது பிடிபட்டார். பாடப்புத்தகத்தில் இடம்பெறும் மகேந்திரவர்மன் படம். கண்டுபிடித்துவிட்டதாக நினைத்து பக்கத்திலிருந்த கல்வெட்டைப் பார்த்தபோது ஏமாற்றம் மிஞ்சியது. அதில் ஸ்ரீவல்லபன் என்றிருந்தது. சுற்றிக் காட்டியவர் சொன்னார். இதை ஸ்ரீபல்லவன் என்று தவறாகப் படித்துவிட்டுப் பாடப்புத்தகத்தில் மகேந்திரவர்மன் என்று போட்டுவிட்டார்கள். இவன் பல்லவ அரசன் இல்லை. பாண்டியன் என்று சொல்லி அங்கிருந்த குறிப்புகளை ஆதாரமாகக் காட்டினார். ஆனாலும் பாடப்புத்தகங்கள் மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. இன்னும் எத்தனை காலம்தான் பாண்டியன் பல்லவனாக இருக்கப் போகிறானோ தெரியவில்லை.

திரும்புகிற போது சமணர்களின் படுக்கையைப் பார்க்கலாமா என்றார்கள். ஓவியக் குகையிலிருந்து இறங்கி மீண்டும் வேறு திசையில் ஏறிப் போனால் குகைப்படுக்கைகள். போகிற வழியே பெரும் பயணமாக மூச்சிறைத்தது. பாறை இடுக்கில் (இடுக்கு என்பது 10 அடி உயரம்) உள்ளே சென்று நுழைந்தால் பத்துப் பன்னிரண்டு பாய்களை விரித்துப் போட்டது போல படுக்கைகள். பாறையில்தான். வழவழ என்று படுக்கிற இடம். தலைக்குச் சற்றே மேடு. சுற்றிலும் பிராமி எழுத்துகளில் படுக்கையைச் செய்தளித்த அரசனின் பெயர். நமக்கு எதற்குமே நீண்ட நாள் மரபு இருக்கிறது. இப்போதும் கோயில்களில் உபயதாரர் பெயரோடு டியூப் லைட்டுகள். அப்போது சமணர் படுக்கைகள்.

அது சரி சமணர்கள் மக்களோடு இல்லாமல் இப்படி ஏன் மலைகளில் பதுங்கினார்கள்? இவர்களுக்குப் படுக்கை செய்து தந்ததையே மாபெரும் பணியாக மன்னர்கள் ஏன் நினைத்தனர். சமண முனிவர்கள் ஏன் தனியாக இல்லாமல் இப்படி கூட்டம் கூட்டமாகப் படுத்துக் கிடந்தனர். தமிழகத்தில் கிடைத்துள்ள கி.மு. ஆண்டுகளுக்குரிய எழுத்துச் சான்றுகள் எல்லாம் சமணர் படுக்கைகளில் உள்ள எழுத்துகளாகவே இருக்கின்





படிப்பகம்

www.padippakam.com

ன. எல்லாமே மலைகளில்தான். வர்கள் மலையைவிட்டுக் கீழே றங்கி ஊருக்குள் போயிருக்க ாட்டார்களா?

எண்ணாயிரம் சமண முனிவர்கள் ழுவிலேற்றப்பட்டபோது எங்கெங்கு மணர்கள் கிடைத்தாலும் கழுவி லற்றப்பட்டார்களோ? அதனால் ன் இவர்கள் மலைகளில் தலை றைவானார்களோ! தலைமறைவின் பாதுதான் சித்தன்னவாசல் வண்ண வியங்கள் உருவானதோ! வண்ணத் ற்கு எங்கே போயிருப்பார்கள்?

அருகில் முளைத்திருக்கும் ஒரு சடியைப் பிடுங்கி, அதன் தளிரைப் டித்து உள்ளங்கையில் தேய்த்துக் ாட்டினார். பிறகு அச்செடியின் ஒவ் வாரு இலையையும் கசக்கித் தய்த்தார். ஒவ்வொரு இலையி ிருந்தும் வெவ்வேறு வண்ணத்தில் று வந்தது. சித்தன்னவாசல் மலை ில் இப்போதும் அந்த செடிகள்.

தமிழ்க்கடல் இராய.சொக்கலிங் த்துக்கு நூற்றாண்டு விழா காரைக் டியில் நடைபெற்றது. செட்டி ாட்டு மக்கள் தமிழுக்கு நிறையவே செய்திருக்கிறார்கள். தமிழ்க்கடல் றிப்பிடத்தக்கவர். தமிழுக்கும் டலுக்கும் தீராத வழக்கு உண்டு. வடிவேல் எறிந்த வான் பகை பொறாது குமரிக்கோடு கொடுங் கண்டல்' கொண்டது. முதற்சங்கம் இருந்த கபாடபுரம் கடல் கொண்டது. தென்மதுரைக்குத் தமிழ்ச்சங்கம் குடி பெயர்ந்தது. பின்னர் தென்மதுரையும் போகவே தமிழ் மதுரைக்கு வந்தது.

பதியெழுவறியாப் பழங்குடி மக் களைக் கொண்ட பூம்புகார் எனும் காவிரிப் பூம்பட்டினம் கடலுக்குள் போகவே செட்டிநாட்டு மக்களாகிய நகரத்தார்கள் காரைக்குடிக்குக் குடி பெயர்ந்தனர். செல்வமும் செல் வாக்கும் தலைமுறை தலைமுறை யாய்க் கொண்டிருக்கும். இவர்கள் பொட்டல் பூமியாகிய காரைக்குடி யில் குடியமர்ந்ததற்குக் காரணம் அரு கில் கடலோ பெரிய ஆறோ இல்லா மைதான். இப்போதும் செட்டி நாட் டில் மாளிகை போன்ற வீடுகள் ஏரா ளம். ஆனால் கூர்ந்து பார்த்தால் சொல்லி வைத்தாற் போல எல்லா வீடுகளும் சமதரையிலிருந்து பத்தடி உயரத்தில் மேடாக்கிக் கட்டப்பட் டுள்ளன. மழை வெள்ளப் பாதிப்பின் பயம் அவர்களின் மனதில் பல தலைமுறைகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழைப் போலவே செட்டி நாட்டு மக்களுக்கும் கடல்மீது ஒரு பகை இருக்கிறது. ஆனாலும் திரை கடல் ஓடித் திரவியம் சேர்த்திருக் கிறார்கள்.

பூம்புகார்ப் போற்றுதும் என்று இளங்கோவடிகள் வாழ்த்திய காவி ரிப்பூம்பட்டினம் இப்போது கட லுக்குள். ஆனால், 'பார்ப்பார் அற வோர் பசு பத்தினிப் பெண்டிர் மூத் தோர் குழவி எனும் இவரைக் கை விட்டுத் தீத்திறத்தோர் பக்கமே சேர்க' என்று கண்ணகி மூட்டிய தீயில் அழிந்த மதுரை இப்போதும் இருக் கிறது. காரணம் மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்ததால் மீண்டும் உயிர்த் தெழுந்திருக்கிறது. காவிரிப்பூம்பட் டினத்தைக் கடல் கொண்டது எனி னும் கடல்மீது பயணம் செய்து பொருள் திரட்டினவர்கள் செட்டி நாட்டு நகரத்தார். தமிழ்ச்சங்கத்தைக் கடல் கொண்டது எனினும் தீப்பட்ட ழியினும் மதுரை உயிர்ப்பித்துக் கொண்டுள்ளது. தமிழுக்குக் கடல் மேல் உள்ள பகையால் தான் எல்லா ஆறுகளும் கடலில் கலக்கிறபோது வைகை ஆறு மட்டும் கடலின் முகத் தில் விழிக்க விரும்பவில்லை போலும்.

தமிழுக்கும் கடலுக்கும் பகைமை இருந்த போதிலும் ராய.சொக்க லிங்கம் தமிழ்க்கடல் என்றே அழைக் கப்பட்டிருக்கிறார். அவரைத் தமிழ்க் கடல் என்பதற்கு வேறு ஒரு காரண மும் பொருத்தமாக இருக்கிறது. நவீன தமிழ் இலக்கியப் பிதாமகன் என்று கருதப்படும் புதுமைப்பித்தன் என்ற முத்து பிறந்தது இவர் நடத்திய ஊழியன் பத்திரிகையில் தான்.

ஊழியன் பத்திரிகை கையைக் கடிக்க நிறுத்தியபோது சந்தாதாரர்க ளுக்கு மீதிப்பணத்தை அனுப்பிவிட் டார். பத்திரிகை நின்றதற்கான கார ணத்தைச் சொல்கிறபோது, தமிழர்கள் ஆதரவு காட்டாததால் இந்தப் பத்தி ரிகை நிற்கவில்லை. என்னால் நடத்த இயலாமல்தான் நின்று போகிறது என்று அப்போதும் மக்களைக் குறை கூறும் மனம் இல்லாதவர் ராய.சொ.

காங்கிரஸ் கட்சியின் பெரும்புள் ளியாக விளங்கியவர். காந்தி பிறந்த குடிலைச் சென்று பார்த்து வந்தவர். காந்தி பெயரில் காரைக்குடியில் மாளிகை எழுப்பியிருக்கிறார்.

இந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்துப் பக்தி இலக்கியங் களைப் பதிப்பித்து வெளியிட்டிருக் கிறார். காரைக்குடி பெருந்தனக்கா ரர்கள் வீட்டு நிகழ்ச்சிகளின் போது தமிழ் நூல்களைப் பரிசுப் பொருளாக் கியிருக்கிறார். அந்த வகையில் தமிழ் நூல்கள் பல மறுபதிப்பாகியுள்ளன.

தமிழகத்தில் மகாகவி பாரதியா ரால் பாடப்பெற்ற ஒரே சங்கம் இந்து மதாபிமான சங்கம்தான். அங்கு பாரதி தங்கியிருந்தபோது எடுத்த படம் தான் தடியோடு கூடிய பாரதி படம்.

1967இல் அறிஞர் அண்ணா முதல் வரானதும் செட்டிநாடு சென்று முத்தையா செட்டியார் மாளிகையில் உணவு முடித்து ராய.சொ. சங்கம் வந்து நூலகத்தைப் பார்வையிட்டு கலந்துரையாடியிருக்கிறார்.

ராய.சொ. எப்போதும் வெள் ளுடையில் பளிச்சென்று இருப்பா ராம். அவர் காங்கிரசில் தீவிரமாக இருந்தபோது ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றாராம். மேடையில் உட்காரும் நாற்காலியில் தூசு படிந் திருக்க, மேசை மீதிருந்த காங்கிரஸ் கொடியை எடுத்துத் துடைத்துவிட்டு உட்கார்ந்தாராம். கூட்டத்தில் இருந் தவர்கள் கூச்சல் போடவே ராய.சொ. எழுந்து விளக்கம் சொன்னாராம். கம்பத்தில் பறந்தால்தான் அது கொடி. மற்ற நேரத்தில் அது வெறும் துணி என்றாராம். கூட்டத்தினர் சமாதானம் அடையாமல் மன்னிப்புக் கேட்கச் சொல்ல, ராய.சொ. கூட்டத்தை விட்டே எழுந்து வந்துவிட்டாராம்.

இப்படி ஏகப்பட்ட செய்திகளுக் குச் சொந்தக்காரர் இந்து மதாபிமான சங்கத்தின் முன் சிலையாய் நிற்கிறார்.

காரைக்குடி,கம்பன் அடிப்பொடி யால் மட்டுமின்றி தமிழ்க்கடலாலும் நினைக்கப்படும். ■



படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# சில நினைவுகள்

## ந.பிச்சமூர்த்தி

பி.வி.சுப்பிரமணியன்

திருவண்ணாமலை ஸ்ரீ ரமண ஆசிரமத்திற்கு 1920-ல் ஓர் இளைஞர் வந்திருந்தார். சிந்தனைத் தெளிவும், திட்டவட்டமான கருத்துக்களும் கொண்டிருந்த அவ்வாலிபர் அப்போதே வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டிருந்தார். எதிரில் நீண்ட மேடையொன்றில் அமைதியே உருவெடுத்து வந்தாற்போல் அமர்ந்திருந்த முனிவரையே நோக்கிய வண்ணம் நின்றவாறே, கேட்க நினைத்த ஏதோ ஒன்றை இளைஞர் கேட்கத் தயாராகிக் கொண்டிருந்த தாகத் தோன்றிற்று. முனிவரின் ஊடுருவும் கண்கள் அவரை நோக்கின.

'சில மாதங்களுக்கு முன்புதான் கலியாணம் செய்து கொண்டேன்' என்று கூறி, ஏதோ தவறு செய்து விட்டவரைப் போல் சற்றுத் தயங்கினார் அங்கு வந்திருந்தவர்.

'சரிதான், கலியாணத்திற்குப் பிறகு பெரியவரின் ஆசிபெற வந்திருக்கும் புதுமாப்பிள்ளை போலிருக்கிறது' என்று அருகிலிருந்தவர்கள் நினைத்தனர். மணப் பெண்கூட வந்து அங்கு ஒதுக்குப்புறமாக நாணிக் கோணி நின்று கொண்டிருக்கலாமென்று இரண்டொருவர் சுற்றுமுற்றும் பார்த்தனர். ஆனால் வந்திருந்த வாலிபரின் கண்கள் கலங்கியிருந்தன; "என்னைப் போல் குடும்பத் தளைகளில் சிக்கியவர்கள் விடுதலை பெறும் வழி ஏதேனும் உண்டா?" என்றார். அவருடைய நா தழுதழுத்தது. அருகிலிருந்தவர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

இதற்குள் முனிவர் ஏதோ பேசத் தொடங்கியதால் எல்லோருடைய கவனமும் அவர் பக்கம் திரும்பியது. கனிவும், கருணையும் தோன்ற "பழம் கனிந்தால் தானாக உதிர்ந்துவிடும். இதைப் பற்றி கவலை என்ன?" என்றார் ரமண முனிவர்.

மகாயோக அடிப்படையை இவ்வளவு ரத்தினச் சுருக்கமாக அவரிடம் பெற்ற வாலிபர் வேங்கட மகாலிங்கம். அதுதான் ந. பிச்சமூர்த்தியின் இயற் பெயர். அவருடைய அண்ணனுக்கும் அவருக்கும் இடையில் இரண்டு குழந்தைகள் பிறந்து இளம் பருவத்திலேயே இறந்துவிட்டதால், அடுத்த குழந்தை பிறந்ததும் 'இதுவாவது இறைவன் இட்ட பிச்சையாக ...நாள் வாழட்டும்' என்று பிரார்த்தித்து ...த்தி என்றே பெற்றோர்கள் அவரை அழைக்கத் தொடங்கினர். நாளடைவில் அந்தப் பெயரே நிலைத்து விட்டது.

கலியாணம் செய்துகொண்ட சில மாதங்களுக்குள் 'விடுதலை' பெற விரும்பிய ஒருவரைப் பற்றி நினைக்கும்போதே சிறிது வியப்பு ஏற்படுகிறது அல்லவா! சன்னியாசிப் பரம்பரையில் இதைத் தவிர வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? பிச்சமூர்த்தியின் மூதாதையரில் ஏழு தலைமுறைகளுக்கு முன்னிருந்த குட்டியப்ப தீட்சிதருக்கு அப்பாலிருந்தவர்களைப் பற்றி நமக்கு அதிக விவரங்கள் கிடைக்கவில்லை. திருவையாற்றில் சில நூற்றாண்டுகளுக்கு முன் குடியேறியிருந்த தெலுங்குப் பிராமணக் குடும்பங்களில் அவர்களுடையதும் ஒன்று. திருவையாற்றில் குட்டியப்பர் வாஜபேய யாகம் செய்து முடித்த பிறகு துறவு பூண்டு காசிக்குச் சென்று அங்கேயே காலமானார். அவருடைய சந்ததிகளில் ஒவ்வொரு தலைமுறையிலும் ஒருவர் சன்னியாசம் பூண்டு வந்திருக்கிறார்கள்.

பிச்சமூர்த்தியின் பாட்டனார் பெயர் தியாக ராஜ தீட்சிதர்; கர்நாடக சங்கித மும்மணிகளில் தலைசிறந்த தியாகராஜ சுவாமிகளும் அவரும் சம காலத்தவர்கள், நண்பர்கள். அவர்களுடைய வீடுகளும் அருகருகிலேயே இருந்தன. தியாகையர் மாணவர்களுக்கு இசை கற்பித்து வந்ததைப் போல் தீட்சிதரும் தம்து மாணவர்களுக்கு தத்துவ, சாஸ்திர நூல்களில்



படிப்பகம்

www.padippakam.com

> "பொழுது போக்க விரும்பும் சோம்பேறிகளுக்காக, பொழுது போகாத சோம்பேறிகள் எழுதுவதற்குப் பெயர் இலக்கியம் என்று பலர் நினைக்கிறார்கள்."



பயிற்சியளித்து வந்தார். இரு தியாகராஜர்களும்
உஞ்சவிருத்தி வாழ்க்கையை மேற்கொண்டவர்களே.
தீட்சிதருடைய நான்கு சகோதரர்களில் ஒருவர்
சன்னியாசியானார். இப்போதும் அவருடைய சமாதி
திருவையாற்றில் இருக்கிறது. கடைசியாக இந்த
வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவர் நடேச
தீட்சிதர். பிச்சமூர்த்தியின் தந்தை காவியுடை ஏற்று
வீட்டிலிருந்து வெளியேறுவது நின்றது. ஆனால்
அகத்துறவு பிச்சமூர்த்தியையும் விட்டபாடில்லை.

நடேச தீட்சிதர்—பிச்சமூர்த்தியின் தந்தை — பல
விதங்களிலும் மிக அதிசயமான மனிதர். தியாகராஜ
தீட்சிதரின் மாணவர்களில் கும்பகோணத்தைச் சேர்ந்த
ஒருவர், தமது ஆசிரியரையும் அருகிலேயே வைத்துக்
கொள்ளும் ஆர்வத்தில் அவரை வற்புறுத்தி . வர
வழைத்ததுடன், கும்பகோணத்திலேயே ஒரு வீடும்
கட்டிக் கொடுத்தார். மாணவர்களுக்கு வகுப்புகள்
நடத்தவும், திருத்தொண்ட ர் புராண விரிவுரைகள்
நிகழ்த்தவும் வசதியாக அவ்வீட்டில் 'சபை' என்ற
பெருங்கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.
திருவையாற்றிலிருந்த குடும்பம் இப்போது
கும்பகோணத்திற்கு வந்தது. நடேச தீட்சிதரின்
பணிக்கு இது மிக உதவியாக இருந்தது. தமிழ்,
தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டி ஆகிய மொழிகளில்
நடேச தீட்சிதர் நல்ல பயிற்சி பெற்றிருந்ததுடன்.
அவற்றில் பல பாட்டுகளும் இயற்றியிருக்கிறார்.
கதாகாலட்சேபம் அவருக்குக் கைவந்தகலை.
அவருக்குத் தாய் வழியில் நெருங்கிய உறவினரான
குப்புசாமி அய்யர் ஓர் குருடர். சிறந்த சங்கீத
ஞானமுள்ளவர். நடேசன் தாம் காலட்சேபங்களுக்குப்
போகுமிடங்களுக்கு எல்லாம், பின்பாட்டுக்கு
குப்புசாமி அய்யரையும் அழைத்துச் சென்று,
அவருடைய இசைத்திறன் மக்களிடையில் பரவுமாறு
செய்தாவ கர்நாடக சங்கீத உலகத்தில், வயலின்
வித்வான் கும்பகோணம் டி.கே. ஜெயராமய்யரைத்
தெரியாதவர்கள் இருக்க முடியாது. அவர் சென்னை
சங்கீத அகாடமியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்
பட்டு. 'சங்கீத கலாநிதி' பட்டமும் பெற்றவர்.
அவருடைய தந்தையே குப்புசா்மி அய்யர். குப்புசாமி
அய்யருக்கு உறுதுணையாயிருந்து, நடேச தீட்சிதர்
இசைக் கலையை வளர்த்தார். அது மட்டு
மின்றி. சிறுவர்களைக் கொண்டு நாடகம் நடத்திக்
காட்டும் "பாய்ஸ் நாடகக் கம்பெனி"யை முதன்
முதலில் தமிழ்நாட்டில் அமைத்தவரும் நடேச
தீட்சிதரே.

பிச்சமூர்த்தி 1900 ஆகஸ்ட் 15—ந் தேதி பிறந்தார்.
ஐந்து அல்லது ஆறு வயதினராக இருக்கும்போதே
தந்தையை இழந்துவிட்டதால் தமையனாரின்
மேற்பார்வையில் பிச்சமூர்த்தியின் பள்ளிப் படிப்புத்
தொடங்கியது. இன்டர்மீடியட் வரையில் எவ்வித
சிக்கலுமின்றி படிப்பு முன்னேறிக் கொண்டு வந்தது.
அவர் இன்டர் வகுப்பிலிருந்த ஆண்டு, புறா வளர்ப்பில்
உற்சாகம் கொண்ட நண்பரொருவர், ஏராளமான
புறாக்களுடன் அப்பகுதியில் வந்து குடியேறினார்.
பிச்சமூர்த்தியின் உற்சாகமெல்லாம் புறா ஆராய்ச்சியில்
திரும்பியது. பறவை, மரவகைகள், பூக்கள்
போன்றவற்றில் பிச்சமூர்த்தியின் ஆர்வத்திற்கு
இணையாக ஆங்கிலக் கவிஞர் வேட்ஸ்வொர்த்தைச்
சொல்லலாம். இயற்கையில் அவ்வளவு ஈடுபாடு
கொண்டவர். ஒரு தடவை சிவப்பாக இருந்த பூ



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றைக் காட்டி 'இதன் பெயர் என்ன?' என்றார். 'இது கலியாண முருங்கை என்று சொல்லுவார்கள் போலிருக்கிறது' என்று கூறினேன்.

'ச்சீ—அந்த இனந்தான். ஆனால் இது கலியாண முருங்கை அல்ல' என்று கூறிவிட்டு, அதைப் பற்றி அப்பூ விற்ற பெண்ணையே கேட்டார். அவளுக்கும் தெரியவில்லை. இதே கேள்வியைப் பலரிடம் கேட்டதாக நான் தெரிந்து கொண்டேன். மாதக் கணக்கில் தேடித் திரிந்து, கடைசியில் ஒருநாள் 'ஓ! கண்டுபிடித்துவிட்டேன். அதன் பெயர் பாஞ்சாலிப் பூவாம். பூக்கள்விற்கும் கிராமப் பெண் ஒருத்தி கூறினாள்.' என்று உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே வீட்டுக்கு வந்தார். இது சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்தது. ஆனால் இயற்கையை ஆராயும் இந்த நாட்டம் புறா ஆராய்ச்சியிலிருந்தே தொடங்கியிருக்க வேண்டும். ஏனெனில் இன்டர் மீடியட் பரீட்சை அந்த ஆண்டு 'கோட்' ஆகிவிட்டது! பிறகு பிச்சமூர்த்தியை அவருடைய தமையன் அழைத்துச் சென்று, தம்முடன் வைத்துக் கொண்டு. தேர்வுக்குத் தயார் செய்து அதில் வெற்றிபெறச் செய்தார். கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் பி.ஏ.யும், சென்னை சட்டக்கல்லூரியில் 'பிளீடர்' படிப்பும் முடிந்த பிறகு, பிச்சமூர்த்தி 1925ல் கும்பகோணத்தில் வக்கிலாகத் தொழில் தொடங்கினார். அவருக்குத் திருமணமானதும் இந்தச் சமயத்தில்தான்.

கல்லூரி நாட்களிலிருந்தே அவருக்கு இலக்கியத்தில் அளவற்ற ஈடுபாடு உண்டு. கு.ப. ராஜகோபாலனும் அவரும் பள்ளித் தோழர்கள். ஹார்டி, கீட்ஸ், விட்மன், தாகூர் ஆகியோரின் நூல்களைப் படித்துவந்தபோது தாங்களும் அவ்வாறு எழுத வேண்டுமென்ற ஆர்வம் அவ்விருவருக்கும் தோன்றியது. கல்லூரியில் இருக்கும்போது ஆங்கிலத்தில் அவர்கள் கதை, கவிதைகள் எழுதினார்கள். பிச்சமூர்த்தி தமது தொழிலுடன் வக்கீல் சங்க வேலைகள், முனிசிபல் சபை அங்கத்தினர் பொறுப்பு மற்ற பொதுப்பணிகள் ஆகியவற்றை மேற்கொண்ட போதிலும், படைப்பு ஆர்வம் அவரை விட்டு அகலவில்லை. 1933-ல் 'கலைமகள்' நடத்திய சிறுகதைப் போட்டியில் அவருடைய "முள்ளும் ரோஜாவும்" பரிசு பெற்றது. சில நாட்களுக்கு முன் என்னைச் சந்தித்த இளம் தமிழ்க் கவிஞர் ஒருவர், "பிச்சமூர்த்தி கதைகளில் 'மோகினி'யை தலைசிறந்த படைப்பாகக் கருதுகிறேன்" என்று கூறினார். 'முள்ளும் ரோஜாவும்' வெளியாவதற்கு முன்னரே ஆங்கிலத்தில் பிச்சமூர்த்தி எழுதிய கதை அது. ஆங்கிலப் பிரதியைத் தூக்கிப் போட்டுவிட்டு மீண்டும் அதைத் தமிழில் எழுதிய படைப்பு அது. தமது படைப்பிலக்கியம் பற்றி அவரே 1946-ல் கூறியிருப்பது பின் வருமாறு:

"பொழுது போக்க விரும்பும் சோம்பேறிகளுக்காக, பொழுது போகாத சோம்பேறிகள் எழுதுவதற்குப் பெயர் இலக்கியம் என்று ப நினைக்கிறார்கள். நான் அப்படி நினைப்பதில்ல மனிதனை வளரச் செய்யும் சக்திகளில் முக்கியமா ஒன்று மதம். இன்று மதத்திற்கு கௌரவம் இல்ல தற்கால மனிதனை உயர்த்தக் கூடிய சக்தி விஞ்ஞான ஆனால் அது அசுரத் தன்மை கொண்டதா இருக்கிறது. இந்த இரண்டு சக்திகளின் உண்மையா வேலையை வெற்றிகரமாக இலக்கியந்தான் செய்ய கூடும். வருங்கால இலக்கியத்தின் வழியும் இதுவே 'விஞ்ஞானத்துக்குப் பலி', 'பழிக்குப் பழி' முதலி கதைகளில் விஞ்ஞானத்தின் பல குறைகள் சுட்டி காட்டப்பட்டிருக்கின்றன. விஞ்ஞானத் துறை அவர் எந்தக் காலத்திலும் எதிர்த்ததாக. எனக் நினைவில்லை. 'ப்ரான்கின்ஸ்டைன்' நாவலில் மே ஷெல்லியும், தமது நூல்களில் பெர்னார்டு ஷாவு காந்திஜியும் விஞ்ஞான முறைகளை எதிர்த்ததை போல—அதே நோக்கத்துடன்—பிச்சமூர்த் விஞ் ஞானத்தைப் பற்றி எழுதியதாகத் தா தோன்றுகிறது. 'அன்புக் கண்ணை இழந்து ஒ எண்ணத்தின் வலைக்குள் சிக்கி விஞ்ஞான தடுமாறுகிறது' என்றுதான் அவர் எழுதியிருக்கிறா 'பழிக்குப் பழி'யில் 'வாயில்லாப் பிராணிகளை வ செய்யும் வெறும் வீணர்களே; தாயில்லா தவளைகளைத் தவிக்கச் செய்யும் விஞ்ஞானிகளே கோயிலுள்ளான் படைப்பித்த பட்சிகளை விலங்குகளை, படிப்பிற்கும் சுகத்திற்கும் துன்புறுத்த சொன்னவர் யார்?' என்று கொல்லப்பட் விலங்குகளின் எலும்புக் கூடுகள் பாடுகின்றன.

பூனை, நாய், அணில் போன்ற உயிரினங்களை வைத்து அவர் எழுதிய கதைகள் அவருடைய அ புள்ளத்தை எடுத்துக் காட்டுகின்றன. இப்போதுள்ள ஆறு சிறுகதைத் தொகுதிகளில் 'தலையெழுத்து 'வானம்பாடி', 'மீனி', 'புலியின் வரிகள்' போன்றவற்றை தவிர சுமார் 20 கதைகளுக்கு மேல் அவர் விலங்கு கதைகள் எழுதினார். இவற்றை மட்டும் தனியா வெளியிட வேண்டுமென்று வாங்கிக் கொண்டு போன ஒருவர் அத்தொகுதியை எங்கேயோ தொலைத்து விட்டதாகக் கூறியது இலக்கியத்திற்குப் பெரு நஷ்டம்.

புலனறிவிற்குத் தென்படும் உலகம் உண்மையின் ஒரு பகுதியைத்தான் காட்டுகிறதென்றும், அதற்குப் அதீதமாக உள்ள சக்திகளையும் நாம் உணர வேண்டும் என்பதுமே பிச்சமூர்த்தியின் அடிப்படைக் கருத்து அமெரிக்கப் பேராசிரியரும், பிரபல நூலாசிரியருமான வில்பிரட் ஸ்டோன், இஎம். பார்ஸ்டரின் 'இந்தியாவுக்கு வழி' என்ற நூலைப் பற்றி எழுதியுள்ள ஆராய்ச்சி நூலில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

"குறியீடுகளும், ஆன்மிகப்பற்றும் வறண்டுவிட்ட நம் காலத்தில் அறிவுக்கு உட்பட்டதையும், எட்டாததையும் இணைத்துப் பார்க்கும் அவசியத்தை இந்நூல் (இந்தியாவுக்கு வழி) வற்புறுத்துகிறது. அவ்வாறு செய்யவில்லை என்றால் குடும்ப, சமூக, அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

துறைகளில் நாம் இதுவரை செய்துவந்த தவறுகளையே மீண்டும் மீண்டும் செய்வோம். அறிவுக்கு எட்டுவது — எட்டாதது என்பதையே முற்காலத்தில் மனிதன் — கடவுள் என்ற பிரிவினையில் எடுத்துரைத்து வந்தார்கள். இதிலுள்ள உண்மையை ஏற்றுக் கொண்டால்தான் மானிடம் பொருட் செறிவு பெறும்."

பிச்சமூர்த்தி எழுதிய 'மோகினி,' 'ஈசுவர லீலை'




முதலிய கதைகள் இக்கருத்துக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றன. "கைலாசத்துக்குச் சித்தக் கோளாறா அல்லது திவ்வியப் பெண்ணை சந்தித்தானா? மோகினி என்றால் நோய் அல்லவா?" என்ற வார்த்தைகளில் சாதாரண உலகத்தின் புறநோக்குத் தென்படுகிறது. இதையடுத்து, "மூன்று வாரமாக... இரண்டற்ற சௌந்தர்யத்தில் ஒடுக்கம். ஒரு வேளை இதெல்லாம் பிதற்றல் என்று அலுப்பும் சலிப்பும் கொள்வாயோ என்னவோ..." என்று கூறும் கைலாசத்தின் வார்த்தைகளில் மற்றொரு உணர்வு நிலை. 'ஈசுவர லீலை'யிலும் இவ்வாறே இரு மட்டங்களில் பேச்சுத் தொடருகிறது:

"நேற்றைப் புயலைத் தான் ஈசுவர லீலை, பராசக்தியின் தாண்டவம் என்று சொல்ல வேண்டும். அந்த அந்த சக்தியின் லீலையைப் பார்க்க எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று சொல்லி உள்ளம் பூரித்தார் இஞ்சினீயர்.

அப்போது 'சாமியாம், சாமி, கம்மனாட்டிக் காத்து. அதற்குப் பைத்தியம் கியித்தியம் புடிச் சூட்டாப்பலே இருக்குது' என்று (புயலில் சிக்கி உயிர் தப்பிய) ஒருவன் தனக்குத்தானே பேசிக் கொண்டு தெருவில் சென்றது இவ்விருவர்களின் கவனத்தையும் பிடித்திழுத்தது....

இது அவர்களுடைய கவனத்தை மட்டுமல்ல. நம்முடைய கவனத்தையும் பிடித்திழுக்கிறது. "ஈசுவர லீலையைப் பைத்தியமாக்கி, 'பிரம்ம'த்தைக் 'கம்மனாட்டி' யாக்கிவிட்டான் அல்லவா அந்த ஏழை" என்ற வார்த்தைகள் நம் உணர்வைப் புது நிலைக்கு உயர்த்துகின்றன. ஈசுவர லீலை என்பது உண்மையா, பைத்தியம் பிடித்த காற்று என்பது உண்மையா! புயல் ஏற்படுவது காற்றழுத்த வேறுபாடுகளினால் என்றால், அவ்வேறுபாடுகள் ஏன் ஏற்படுகின்றன? இவற்றைப் போன்ற கேள்விகளுக்கு உலகப் புகழ்பெற்ற விஞ்ஞான மேதை ஐன்ஸ்டின் ஓரிடத்தில் பதிலளித்திருக்கிறார். (இயற்கையில் நிலவும் ஒழுங்குமுறையைக் கண்ட) "ஒவ்வொருவருக்கும் எல்லையற்ற அடக்கமே தோன்றும். பேரறிவே உருவெடுத்து தன் முன் நிற்பதாகத் தோன்றினாலும், அதன் அடிமட்டத்திற்குப் போகும் சக்தி மனிதனுக்கு இல்லை. இதைத்தான் சமய நோக்கு என்று நான் குறிப்பிடுகிறேன். சமய நோக்கை இவ்வாறு விஞ்ஞானம் பரிசுத்தமாக்குகிறது" ("என் முதுமைப் பருவத்திலிருந்து" — ஐன்ஸ்டின்)

உயிர் நிலையிலிருந்து உயிர் மூலத்தைச் சுட்டிக் காட்டுவதற்கு இசை, கவிதை ஆகிய இரண்டினால் தான் முடியும். கவிதைக்கே உரிய உருவகத்தை பிச்சமூர்த்தி மிக வெற்றிகரமாக சிறுகதைகளில் கையாண்டிருக்கிறார். சட்டியில் வேகும் கோழிக் குஞ்சு இறகு பெற்றுப் பறப்பதிலிருந்து, 'வெறும் மாமிசத்தைக் குஞ்சாக்கி இறகளித்து வெட்டவெளியில் பறக்கச் செய்தது எது?' என்று கேள்வி ('வெறும் மரமா?') ஒரு பக்கிரியின் மனத்தில் எழுகிறது. 'முதல் பிடில்' என்பது



படிப்பகம்

www.padippakam.com

நாதத்தின் இரகசியத்தையே ஆராயும் முயற்சி. இதில் ஈசாப்பைவிட பிச்சமூர்த்தி ஒருபடி மேலே போயிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

அன்பு, தியாகம், மனிதாபிமானம் மூலம் தனிமனிதன் உயருவது மட்டுமின்றி சமுதாயமே உயருகிறது என்பது ஆசிரியரின் கருத்து — இவற்றிற்கு 'தாய்', 'கபோதி' முதலிய கதைகள் இலக்கணமாக அமைந்திருக்கின்றன. வாழ்க்கையிலும், தொழில் துறையிலும் எற்பட்ட அனுபவங்கள் காரணமாக பிச்சமூர்த்தி சிந்தனையின் ஆழம் மேலும் அதிகரித்தது. 1925-ல் தொடங்கிய வக்கீல் தொழிலுக்கு 1938-ல் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, அவர் சென்னைக்கு வந்து 'ஹனுமன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். ஆனால் பத்திரிகைத் தொழில் அதிக நாள் நீடிக்கவில்லை. அப்போது சென்னை அரசாங்கத்தில் மந்திரியாக இருந்த டிஎஸ்.எஸ். ராஜன் கூறியதற்கிணங்க கோயில் நிர்வாக அதிகாரியாக 1939ல் பதவி ஏற்றார். அது முதல் 1956-ல் அவர் ஓய்வு பெறும்வரை அப்பணியை காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், திருத்தணி முதலிய பல இடங்களில் தொடர்ந்து செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

கோயில் சொத்துக்களைக்கூட சுயநலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளத் தயங்காதவர்கள் இருக் கிறார்கள் என்பதை அவருடைய பதவிக் காலத்தில் நேரடியாகப் பார்த்தார். பல தடவைகளில் கோயில் சொத்துக்களுக்காக நீதிமன்றத்தில் வழக்காடி, சுயநலமி களை விரட்ட வேண்டியிருந்தது. சமுதாயத்திலுள்ள பொருளாதாரப் பிரச்னைகள், ஊழல், சுரண்டல், வெளிவேடங்கள் ஆகியவை பிச்சமூர்த்தியின் எழுத்தில் முக்கிய இடம் பெறலாயின. அவை சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் இருந்தன என்பதுதான் அவரைப் பெருந்துயருக்கு உள்ளாக்கிய விஷயம்.

மாங்காய்த் தலை கொண்ட ஒரு விசித்திரப் பிறவியைச் சுரண்டிப் பிழைக்கிறான் ஒரு பிச்சைக் காரன். கடைக்காரனொருவன் அப்பிச்சைக்காரனைச் சுரண்டி லாபமடித்து வாழுகிறான். இந்தச் சுரண்டல் களுக்கு நீதிபதியின் குரல் முடிவு கட்டுகிறது என்று 'மாங்காய் தலை'யில் காட்டும் பிச்சமூர்த்தி, சட்டங்களே சுரண்டலுக்கு உடந்தையாக இருந்த அவல நிலையை 'விவசாய ராமாயணத்'திலும் சாமி யின் பெயரைச் சொல்லி, யானையைக் கணபதியாக்கி ஊராரைச் சுரண்டும் மாவுத்தன் தில்லுமுள்ளுகளை 'கணபதி துணை'யிலும் சுட்டிக் காட்டுகிறார். இதைப் போன்ற சமுதாய நோக்கு இன்னும் பல கதைகளிலும், குறிப்பாக கவிதைகளிலும் கூட சற்று அழுத்தமாகத் தோன்றுகிறது.

பிச்சமூர்த்தியின் கதைகளிலேயே—கவிஞர் தாகூரின் கதைகளில் இருப்பதைப் போல— கவிதை உத்தி இருப்பதை ஏற்கெனவே எடுத்துக் காட்டி யிருக்கிறேன். பிச்சமூர்த்தியின் கவிதைகள் பழைய யாப்பிலக்கணத்தை ஒட்டி இருக்கின்றனவா என்று ஆராய்வதில் பயனில்லை. அப்படி ஆராய்பவர்கள், விமர்சிப்பவர்கள், இலக்கிய மரபுக்கே மாறாகச் செயல்படுவதாக எனக்குத் தோன்றுகிறது. "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறு"வதே எக்காலத்திலும், எல்லா இடங்களிலும் மரபாக இருந்து வந்திருக்கிறது. புதுக் கவிதை பற்றிய உத்தி தொல்காப்பியத்திலும் காரிகைகளிலும் இல்லை என்றால், அந்நூல்களில் இடம் பெறும் அளவுக்கு அப்போது இக்கவிதை முறை இல்லை. வளர்ச்சி என்பது உலக இயல்பு. சிந்தனையின் இயல்பு. கம்பர் காலத்தைப் பொறுத்த வரை அவர் எழுதியது புதுக்கவிதை. இன்றைய கவிதைகளில் மரபுவழி வந்த யாப்பு முறை இல்லை என்றால், இது அவ்விதச் செய்யுள் அல்ல என்றே பொருள்படுகிறது. செய்யுளும், கவிதையும் ஒன்றுதான் என்று நினைக்கும் நண்பர்களுடைய சிந்தனையையே முற்கூறிய விவாதம் எடுத்துக் காட்டுகிறது. வால்ட் விட்மன் எழுதிய "புல்லின் இதழ்கள்" என்ற நூலே தமது கவிதை முயற்சிகளுக்கு வித்திட்டதாக பிச்சமூர்த்தி "காட்டு வாத்து" தொகுதியின் முன்னுரையில் கூறியிருக்கிறார். விட்மன் கவிதைகள் கவிதைகளே அல்ல என்ற இயக்கம் அமெரிக்க இலக்கியத்தில் தலைதூக்கியதே இல்லை.

இது கவிதையின் அமைப்புப் பற்றிய பிரச்னை. இதில் எனக்கு அவ்வளவாக அக்கறையில்லை. புதுக் கவிதையா, மரபுக் கவிதையா என்பதை நான் உருவத்தை மட்டும் வைத்து மதிப்பிடுவதில்லை. டிஎஸ். எலியட் கூறியிருப்பது போல, 'மரபுக் கவிதையா', வேறு விதக்கவிதையா என்பது பிரச்னையே அல்ல. கவிதை கவிதையாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். ஜப்பானியக் கவிதை வகைகளில் கூட வார்த்தைகளின் பொருட் செறிவே அடிப்படை. எதுகை, மோனை, தளை முதலிய எதையும் ஜப்பானியர் முக்கியமாகக் கருதுவதில்லை.

கதைகள் எழுதத் தொடங்கியபோதே கவிதை களும் இயற்றத் தொடங்கிய பிச்சமூர்த்தி விட்மன், பாரதியாரின் 'வசன கவிதைகள்' ஆகியவற்றின் செல்வாக்குக் காரணமாக. இப்போது 'புதுக் கவிதை' என்று சொல்லுகிறோமே, அந்த உத்தியையே கையாண்டு ஏராளமான கவிதைகள் எழுதினார். 1934 முதல் 1976 வரை எழுதிய புதுக் கவிதைகள் எல்லாம் 'பிச்சமூர்த்தி கவிதைகள்' என்ற நூலாகவும், யாப்பிலக்கணத்திற்கிணங்க எழுதியவை 'குயிலின் சுருதி' என்ற நூலாகவும் வெளியாகியிருக் கின்றன. இக்கவிதைகள் எல்லாமே கருத்திலும் உருவத்திலும் பெரும் சாதனைகள் என்பதில் சந்தேக மில்லை. 'காட்டு வாத்து', 'வழித்துணை', 'குயிலின் சுருதி' ஆகியவை தமிழ் மக்கள் என்றென்றும் போற்றி மகிழக் கூடிய படைப்புக்கள். சில ஆண்டுகளுக்கு முன் அவர் எழுதிய 'தேசப் பறவை' ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு இங்கிலாந்தில் வெளியான 'பொங்குவின்' தொகுதியில் இடம் பெற்றிருக்கிறது. 'குயிலின் சுருதி'யில் வரும் குயில் பிச்சமூர்த்தியேதான்.



படிப்பகம்

www.padippakam.com


# தமிழவன் எழுதிய புதிய நாவல்

# ஜி.கே. எழுதிய மர்ம நாவல்

(276 பக்கங்கள், விலை ரூ.85.)

**ஒரு புதிய தேசத்தை நிர்மாணிப்பதற்கு நடக்கும் பல கொலைகளை செய்பவர் யார்? என எழும் கேள்விக் குரலுக்கு இடையில் ஆங்காங்கே எழுகிறது ஒரு குரல். இந்த நாவலை எழுதிய**

# ஜி.கே.யார் ?

விபரங்களுக்கு:

**பல்கலைப் பதிப்பகம்**

36, தெற்கு சிவன் கோயில் தெரு,

கோடம்பாக்கம், சென்னை-600024


'சொத்தும் சுதந்திரமும் சொக்கப்பனை ஏற' வேண்டுமென்று அவர் வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்த தத்துவத்திற்கு, 'குயில்' நல்ல உதாரணமாக அவருக்குக் கிடைத்தது. 'பொய்ப் பொறுப்பை விட்டால் புவனத்தில் தானாக மெய்வாழ்வு தோன்றும்' என்று வாழ்ந்து காட்டிய கர்மயோகி பிச்சமூர்த்தி.

அவர் எழுதிய 'குடும்ப ரகசியம்' என்ற குறுநாவல், 'காளி' என்ற நாவல் ஆகிய இரண்டும் 'கலைமகள்' வெளியீடுகளாகப் பிரசுரிக்கப்பட்டிருக் கின்றன. அவர் எழுதியிருந்த மற்றொரு நாவலில் தம் வாழ்க்கையே அதில் இடப்பெற்றிருப்பதாகக் கூறி அதன் கடைசிப் பகுதியைக் கிழித்துப் போட்டு விட்டார். மற்ற பகுதியையும் கிழித்துவிடப் போகிறரே என்று நான் அதை எடுத்து வந்து வைத்துக் கொண்டு அந்த நாவலை மீண்டும் முடிக்கும்படி தூண்டிக் கொண்டிருந்தேன். 'சரி உன்னிடமிருப்பதைக் கொண்டு வா: எழுதுகிறேன்' என்று எழுதினார். அதை நான் கொடுத்தபோது அவருடைய உடல் நலம் குன்றியிருந்ததால், அவ்வேலை முடிவடையவே இல்லை. ஆனால் அவர் எழுதி முடித்திருந்த 'வீடும் வெளியும்' என்ற நாவலை அவர் ஏன் பிரசுரிக்கவில்லை என்று விளங்கவில்லை. தேசிய இயக்கத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டிருந்த அந்த நாவல் மிக நன்றாக இருந்தது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் ஆனந்த விகடன்' நடத்திய நாவல் போட்டிக்கு அதை அனுப்பி யிருந்தார். அதில் குகப்ரியை எழுதிய 'சந்திரிகா' என்ற நாவலுக்கு முதல் பரிசும், பிச்சமூர்த்திக்கு இரண் டாவதோ அல்லது மூன்றாவதோ பரிசும் கொடுக்கப் பட்டது. ஆனால் அதை அந்தப் பத்திரிகையிடமிருந்து திருப்பி வாங்கிக் கொண்ட ஆசிரியர் அதை அவர்களுக்கு அனுப்பவுமில்லை; வேறு எங்கும் பிரசுரிக்கவுமில்லை. நான் மிகவும் வற்புறுத்திக் கேட்டபோது "அது ஸ்ரீரங்கத்தில் மழைத்தண்ணீரில் விழுந்து பயன்படாமற் போய்விட்டது" என்றார். அது தற்செயலாக விழுந்ததா அல்லது பிச்சமூர்த்தியே அதைத் தூக்கி மழையில் போட்டுவிட்டாரா என்பது இன்னும் கூட எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது.

கடந்த சில மாதங்களாகவே அவருக்கு வயிற்றுக் கோளாறு இருந்துவந்த போதிலும் உற்சாகமாகவே காணப்பட்டார். அவருடைய 76ஆவது பிறந்த நாளன்று நானும், சிட்டி சிவபாதசுந்தரம் முதலிய நண்பர்களும் அவரைக் காணச் சென்றிருந்தோம். தமிழ் இலக்கியம் பற்றி வெகுநேரம் பேசிக் கொண் டிருந்தோம். அதற்குப் பிற பல தடவைகள் அவரைச் சந்தித்த போதும், சற்று பலவீனமாகக் காணப்பட்டாரே தவிர உடல்நலக் குறைவாக இருப்பதாகச் சொல்ல வில்லை. நவம்பர் இரண்டாவது வாரத்தில் கூட, 'நீ இங்கு வந்து இரண்டு வாரமாகப் போகிறது. ஏன் வரவில்லை? இந்தத் தடவை வரும்போது அவசியம் 'அவுட்சயிடர்' (Outsider) புத்தகம் கொண்டு வா—' என்று எழுதியிருந்தார்.

ஆனால் நவம்பர் 21-ந் தேதியன்று (ஞாயிறு) நான் அவரைச் சந்திக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, முதல் நாளிரவு தூக்கத்திலிருந்தபோதே நினைவிழந்த நிலை ஏற்பட்டுவிட்டதென்றும், அவரை ஆஸ்பத்திரி யில் சேர்த்திருப்பதாகவும் ஒரு நண்பர் வந்து கூறினார். நான் நேரில் போய்ப் பார்த்தபோது ஆஸ்பத்திரியில் நினைவிழந்த நிலையில் அவர் இருந்தார். மீண்டும் அவருக்கு நினைவு வரவே இல்லை. அவருடைய மனைவி சாரதா அம்மையாரும், குழந்தைகள் மீனாட்சி, பாலு முதலியவர்களும் அல்லும் பகலும் அவருடனேயே இருந்து உதவி செய்தனர். பிச்சமூர்த்தி நினைவிழந்த நிலையிலேயே இருந்து டிசம்பர் 4-ந் தேதி(சனி)யன்று பகல் 2-30 மணிக்கு காலமானார். திருவண்ணாமலை பற்றியும், ரமண முனிவரைப் பற்றியும் எங்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்த இந்த முனிவருக்கு ஒளியேற்றி வைத்துவிட்டு அந்தக் கார்த்திகை நாளன்று வெறுங்கையுடன் வீடு திரும்பினோம்.

(நன்றி : தீபம் பிப் 1977)



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

## கறுப்பு அன்னங்கள்

மாத்தளை சோமு
பக்கங்கள் 180.
விலை ரூ.34/-
நர்மதா பதிப்பகம்
16/7, ராஜா பாதர் தெரு,
பாண்டிபஜார்,
சென்னை-600017.

**சு.பொ. அகத்தியலிங்கம்**

''மலையாண்டி! நீ புண்ணியம் செஞ்சவன். எவன் ஒருத்தன் சொந்த வீட்டில் கீரையாவது சமைத்துச் சாப்பிடுகிறானோ அவனே மனிதன். அதுவே நிம்மதி. இதை நான் சொல்லவில்லை. மகாபாரதம் சொல்கிறது.''

ஐயரின் வார்த்தைகளை மலையாண்டி தனது பாணியில் வெட்டினான்:

''போங்க சாமி! ஊர்மக்களே அகதி முகாமில் இருக்கிறபோது நான் மட்டும் வீட்டுல இருக்கணும்னு எந்த மகாபாரதம் சொல்லுது? அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்...?''

''என்ன முடிவு?'' ஐயரின் ஆர்வம் வார்த்தைகளாக விழுந்தன.

''நாளையில் இருந்து நானும் தெனம் காலையில் முகாமுக்கு வந்து முகாமைச் சுத்தம் செய்யப் போறேன் சாமி!'' என்று மலையாண்டி சொன்னதைக் கேட்டு ஐயர் கூனிக் குறுகிப் போனார்.

'மகாபாரதம் ஐயர்' என்ற சிறுகதையை இத்துடன் நிறுத்தி இருந்தாலும் செய்தி வலுவாகத் தான் இருந்திருக்கும்... அப்போதும் படிப்பவர் இதயம் துடித்திருக்கும்... ஆனால் மாத்தளை சோமு மேலும் மூன்று பத்திகள் கதையை நீட்டுகிறார்...

''நேத்து வரைக்கும் தனியா கத்தான் சாப்பிட்டேன். இனிமே இந்த முகாம் சாப்பாடு தான் எனக்கும்...'' என்று ஐயரை சொல்ல வைக்கிறார் கதாசிரியர். இது இயல்பான முடிவா? யதார்த்தமா? ஆசிரியர் குரலா? இப்படி விவாதம் செய்து இக்கதையின் ஜீவனைச் சிதைக்க முடியும்? ஆயினும் மாத்தளை சோமு மனிதர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையை சிதைக்க முடியாது. அதுதான் அவர் கதையின் ஊடும் பாவுமாய் இருக்கிறது...

''இந்த மனிதர்கள் யாவரும் ஒரே நிறத்தில் இருந்திருந்தால் என்ன? வெள்ளை நிறத்திலும், கறுப்பு நிறத்திலும் மஞ்சளிலும் ஏன் மனிதன் படைக்கப்பட்டான்? ஊரில் இருந்த போது சாதிப்பிரிவு... ஊரைவிட்டு வெளியே வந்தால் மொழிப்பிரிவு... இவையெல்லாம் தாயகத்தின் நோய்கள் என்று எண்ணிக் கொண்டு கடல் கடந்து கண்டம் தாண்டி இந்த நாட்டுக்கு வந்தால் நிறத்தில் வேறு ஒரு பிரச்சனை.''

-இப்படி ஆதங்கப்படுகிற மனிதன் ஒரு கேள்வி எழுப்புகிறான். ''தம் நிறத்தையிட்டு எப்போதும் 'மேன்மை'யில் மிதக்கும் வெள்ளைக்காரர்கள் கூட இந்த கறுப்பு அன்னத்தை மணிக்கணக்கில் பார்த்து ரசிக்கின்றார்கள்'' என்கிற முரண்பாட்டை உருவகமாக்கிப் பின்னப்பட்டுள்ள ''கறுப்பு அன்னங்கள்'' அற்புதப் படைப்பிலக்கியம்.

''ஹேப்பி நியூ இயர்'' என்று கைநீட்டிய போது ''கோ எவே'' என்று துரத்திய வெள்ளைக்காரன்... முயல்வேடம் போட்ட அதே கறுப்பனோடு கைகுலுக்குவது என்பது நுட்பமான கற்பனை. பழிவாங்குவதில் கூட ஒரு பண்பாடு. இப்படி நடக்குமா என்பது குதர்க்க வாதம்... பண்பாட்டுச் சிதைவிலிருந்து மனிதனை மீட்க பண்பாட்டு ஆயுதங்கள் தேவையன்றோ?

''லயத்துப்பயல்'' என்கிற சிறுகதையைப் படித்தபோது தமிழ் சினிமாக்கள் நினைவுக்கு வந்தன. பல படங்களில் முதலாளி வீட்டின் நன்றியுள்ள வேலைக்காரனுக்கும் முதலாளி மகனுக்கும் உள்ள நட்பு சித்திரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் காணப்பட்ட செயற்கைத் தனங்கள்... மசாலாக்கள் வாழ்வுக்கு மிகவும் அந்நியமானவை. அதே சமயம் மாத்தளை சோமுவின் 'லயத்துப்பயல்' என்கிற பாத்திரப் படைப்பு வசதி படைத்தவனுக்கும் வயிறு பசித்தவனுக்கும் இடையேயான முரண்பாடு சமாதான சகவாழ்வு மூலம் தொலையாத ஒன்றெனக் கூறி நிற்கிறது. பல கதைகளில் தீர்வை நம்பிக்கையோடு முடிக்கும் மாத்தளை சோமு இக்கதையில் மட்டும் முரண்பாட்டு இடைவெளியை நீட்டிப்பது அவரின் பார்வை நேர்த்திக்குச் சான்று.

'கலப்புத் திருமணத்தாலும் உருவாக்க முடியாத தேசியம்' என்கிற குத்தலோடு அதேசமயம் உயர்ந்த மனிதனை நம் கண்முன் நிறுத்துகிறது ''எல்லை தாண்டிய அகதிகள்''.

இந்நூல் முழுக்க தம் வேர்களை இழந்து கொண்டிருக்கிற மனிதர்களின் உள்ளத்து உளைச்சல்களை- தாங்கள் காலங் காலமாக பண்பாடு என்று போற்றி வந்தவற்றை கைவிட்டு நழுவுகிற அவலங்களை- அவற்றைக் காப்பாற்றத் துடிக்கிற இதயத்தை- உயிர்துடிப்போடு அழகிய கவிதையாய்- நம்முன் உலவவிட்டிருக்கிறார் மாத்தளை சோமு.



படிப்பகம்

www.padippakam.com




பண்பாடு என்பது எது? அது மொழி சார்ந்ததா? மதம் சார்ந்ததா? பிரதேசம் சார்ந்ததா? அதை அளப்பது எப்படி? எதைக் காத்திட வேண்டும்? எதைத் துறக்க வேண்டும்? புதிய மனிதனைச் செதுக்கத் தடைகள் எவை? படிகள் எவை? இதுபோன்ற நூறு கேள்விகளை உரக்கக் கேட்கும் பல ஆய்வுக் கட்டுரைகளின் பணியை ஒரு சிறுகதைத் தொகுதி செய்திட இயலுமா?

ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கை எழுத்தாளர் மாத்தளை சோமுவின் 'கறுப்பு அன்னங்கள்' சிறுகதைத் தொகுப்பு கதை மாந்தர்கள் மூலம் பலநூறு பண்பாட்டுக் கேள்விகளை எழுப்பியுள்ளது. விடைகாண வேண்டியது சமூகத்தின் பொறுப்பு.

**தெக்கத்தி ஆத்மாக்கள்**
**பா. செய்பிரகாசம்**
பக்கங்கள் 148.
விலை ரூ.45/-
அலைகள் வெளியீட்டகம்
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம்
சென்னை-600024

**வசந்தன்**

திசை தெறிக்க ஓடும் இன்றைய வாழ்க்கை முறையில் கிராமியக் கலைகள் எல்லாம் ஒடுங்கி வருகின்றன. விவசாயத்தை விட்டு மக்களே படிப்படியாக ஒதுங்குகிறபோது, கலைகளும், கலைகளை சுமந்த மனிதர்களும் வெளியேறி வருகின்றனர். இப்படி ஒவ்வொரு கிராமமும் இழந்து போனவைகள் ஏராளம். இந்த இழப்பை, வேதனையை தங்கள் சொந்த மண்ணில் நின்று கொண்டு எழுத்தில் கொண்டு வந்திருக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய எழுத்தாளர்களில் பா.செயப்பிரகாசமும் ஒருவர்.

அவரின் சமீபத்திய படைப்பான 'தெக்கத்தி ஆத்மாக்கள்' ஒரு கட்டுரைத் தொகுப்பாக மேலோட்டமாகத் தென்படுகிறது. உண்மையில் பல சிறுகதைகளுக்கான, வட்டார நாவலுக்கான அடித்தளத்தை இந்நூல் பெற்றிருக்கிறது. நூலில் சொல்லப்படும் தனித்தனியான 'ஆத்மாக்களை'ப் பற்றிய அனுபவங்கள் இன்னும் கொஞ்சம் விரிவாகவும், கற்பனையாக்கமும் செதுக்கப்பட்டிருந்தால் இவைகள் சிறந்த குறுநாவல்களாக மாறியிருந்தாலும் வியப்பதற்கில்லை. பா.செ—யின் சிறுகதைகளில் நிரம்பிவழியும் கரிசல் மொழி அத்தனையும் உருட்டித் திரட்டி கொட்டியதுபோல் இந்தக் கட்டுரைகள் அனைத்தும் அமைந்திருப்பது தனிச் சிறப்பாக உள்ளது.

வில்லுப்பாட்டில் சமுதாயக் கருத்துக்களை அள்ளித் தெளித்த கிராமத்துப் பாடகி மூக்கம்மா; சேவல் போரிலேயே தன் காலத்தைக் கழித்த மல்லையா; ஏழை, பரதேசிக்கெல்லாம் பசிவார்த்த கிட்ணம்மா; காவல்துறை வேலைக்கே லாயக்கில்லாத 'ஏட்டு' சோலைராம்; ஒரு சரித்திரத்தையே தனக்குள் பூட்டி வைத்திருந்த சிவசங்கு; கரிசல் காடுகளை தன் கானங்களால் நிறைத்த சேது; இப்படிப்பட்ட உயிர்ச் சித்திரங்களின் குண அழகை, ஆளுமைகளை தனித் தனிச் சரித்திரமாய் நாம் படித்து முடிக்கிறபோது, இன்னும் சொல்லப்படாத மண்ணுக்குள் கிடக்கும் ஆத்மாக்களை யார் எழுதுவார்கள் என்று கேள்வி எழுகிறது.

இன்றைய நுகர்வுக் கலாச்சாரத்துக்கும், உலகமயமாக்கலுக்கும் இடையில் நெருக்கித் தள்ளப்படும் சூழ்நிலையில் 'தெக்கத்தி ஆத்மாக்கள்' தொலைந்துபோன நல்ல மனிதர்களை மட்டும் பேசவில்லை. நம் மண்ணின் மரபிலிருந்து மணவாசனை பிரசவிக்கும் கலைகள், மானாவாரிப் புஞ்சையின் விவசாய முறைகள், நோய்களுக்கான கை மருந்து, தின்பண்டங்கள், விளையாட்டுக்கள் என பல கிராமியச் சித்திரிப்புகள் நமது முன்னோடிகள் நமக்கு விட்டுச் சென்ற பாதையை அடையாளம் காட்டுகிறது.

வறுமையும் வறட்சியும் பிடுங்கித் தின்னும் கிராமப்புற நிலைமைகள், சாதி மோதல் என்ற வங்கொலையில் வெட்டுப்பட்ட சிவசங்கு, கலையில் சகல வலிமைகளும், சொந்த வாழ்க்கையில் சகல கேடுகளும் கொண்டு சீரழிந்து போன கலைஞன் சேது—இந்தச் சித்திரங்களை படித்தபின் படிப்பவன் மனதில் சில சலனங்களை ஏற்படுத்தும். இதற்கான காரணம்? விடை என்ற தேடலில் சில வினாடிகளாவது அவன் சிந்திப்பான்.

பா.செ. தான் இதுவரை கற்றுணர்ந்து வந்திருக்கும் அரசியல் நிலையிலேயே இதற்கு விடை தேட முடியும். வெகுஜனப் பத்திரிகையில் அதற்கு இடம் கிடைக்காத நிலையில், நூல் வடிவம் பெறும்போது எதனால்? யாரால்? என்ற கேள்விகளுக்கு, ஆதிக்க சக்திகளின் பின்புலத்தை பா.செ. தொட்டு அம்பலப்படுத்தியிருக்க வேண்டும்.

'மண்ணின் மணத்துடன் மக்கள் மொழியில் ஒரு நூல்' வெறும் புகழ்ச்சியில்லை.



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை



# குறுக்கு வெட்டு

**சிவகாமி**

விலை ரூ.65/-
தமிழ்ப்புத்தகாலயம்,
15, மாசிலாமணி தெரு,
பாண்டிபஜார், தி.நகர்,
சென்னை-17

**சுப்ரபாரதி மணியன்**

மேலோட்டமாக வெகு எளிமையும், இயல்பும் கொண்ட மொழியும், சபலமுறுகிற ஒரு ஆண், பெண்ணின் அவஸ்தையுமானமையமும் ஆக இந்த நாவல் தென்படுகிறது. ஆனால் அந்த அவஸ்தையை வெளிப்படுத்தும் விதத்திலும் அது சார்ந்த பிரத்யேக அனுபவங்களை விவரித்துக் கொண்டு போவதிலும் நுணுக்கமான நாவலாகிவிடுகிறது.

விவஸ்தை கெட்ட உறவுதான். சரோவுக்கு கணவன் இருக்கிறான். குழந்தைகள் இருக்கிறார்கள். குமாருக்கும் அப்படியே. குடும்ப அமைப்பில் பெரிதாய் குறைகளைக் கண்டு பூதாகரமாக்கி நொந்து போய்விடவில்லை அவர்கள். குடும்பத்தையும் நேசிக்கிறார்கள். அதை மீறி தங்களுக்கு இடையிலான உறவு என்பது அவர்களை அலைக் கழித்தாலும், அதில் உள்ளுணர்ந்த சுகானுபவம் அவர்களை யார் கண்ணிலும் படாதவாறு மறைந்து மறைந்து சந்திக்கச் செய்கிறது. சந்திப்புக்காக ஏங்கச் செய்கிறது. அதிக பரிச்சயமில்லாத மனிதர்களுக்கு மத்தியில் தங்களைக் கொண்டு போய் நிறுத்தி ஆசுவாசம் கொள்ளச் செய்கிறது.

எது மகிழ்ச்சி தருகிறதோ அதை நோக்கிய முடிவு என்று திரிகிறார்கள். இயற்கையைப் பார்த்து உள்வாங்கி அடையும் பரவசமும், கலவியின்பமும் ஒன்றை நோக்கியதாகவே உணர்கிறார்கள். அவை அற்புதமான அனுபவங்களாக அமைந்துவிடுகின்றன. குடும்பத்தைத் தகர்த்தெறிகிற தைரியமும் அற்று, அதனிடமிருந்து எவ்விதக் கருணையையும் எதிர்பார்க்காமல் நட்பைத் தொடர்கிறார்கள்.

''நமது உறவு அதுவாக இற்று விழட்டும். நீயும் நானுமாக வலிந்து எந்த முயற்சி, வார்த்தைகளுக் குள்ளும் போக வேண்டாம்.'' என்ற தீர்மானம் அவர்களுக்குள் இருந்தாலும் இயல்பாகவே சில முரண்பாடுகள் தோன்றி அவை இற்று விழப்போக அவர்களின் நட்பு அமரத்துவம் கொண்டதாகவே தொடர்கிறது.

டால்ஸ்டாயின் அன்னாகரினாவை ஒத்திருக்கிறாள் சரோ. அவளின் சஞ்சலமும், ஊசலாட்டமும் ஒரு கோணத்தில் சற்று அருவருப்பூட்டலாம். ஆனால் பரஸ்பரம் நட்பும், இதமும் தேடி அலைகிற மனதைக் கொச்சையாக முத்திரையிட்டு விடமுடியாது என்பதால், துல்லியமான அலைக் கழிப்பில் சிக்குண்ட பெண்ணாகிறாள். நாவலின் படிநிலைகளையும், பக்கங்களையும் விரித்துக் கொண்டு போவதற்காய் நிறையக் கதாபாத்திரங்களை உலவவிடவில்லை. சரோ-குமாரின் சந்திப்புகளும், பதட்டமான உரையாடல்களுமே நாவலை நிறைக்கின்றன. குமாரின் மனைவியான சுப்பு சில வரிகளிலேயே வருகிறாள். ஆனால் நிரந்தரச் சித்திரமாகி விடுகிறாள். இதற்குக் காரணம் நுணுக்கமான சித்திரிப்புகள். அவை வெகு அழுத்தமானவை என்பதால் நிரந்தர இடம் பிடிக்கின்றன.


இந்த நாவலினை யதார்த்த தளத்திலிருந்து சற்றே விலக்கிக் காட்டுவதற்கான முயற்சியில் வேதாளம், விக்ரமாதித்யன் என இணைவாசிப்பிற்காக ஒரு பகுதியும், ஒவ்வொரு பக்கத்தின் இறுதியிலும் அமைந்துள்ளது. குடும்ப அமைப்பு, பெண்களின் நிலை குறித்த பல விவரக் குறிப்புகளை அவை தருகின்றன.

'புதிய பார்வை'யில் தொடராக வந்தபோது இப்பகுதி உறுத்திக் கொண்டு நின்றது. நூலினை முடித்த பின்பு கூட இப்பகுதியை தனியே வாசிக்கலாம். பெரும்பாலும் கவிதை நூல்களில் கவிதைகளின் இடையில் நவீன ஓவியங்கள் தென்படும். வித்யாசமான முயற்சியாக இந்த நாவலின் இடையில் சந்துருவின் சுமார் இருபது நவீன ஓவியங்கள் தென்படுகின்றன. கதைபாத்திரங்களின் உணர்வுகளோடு அவற்றைச் சம்பந்தப் படுத்திப் பார்க்கலாம். அல்லது தனித்த நிலையிலேயே பல படிமங்களை அவை முன்நிறுத்துகின்றன. நாவலின் தயாரிப்பில் கூடுதல் அக்கறையை இவை காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## எதிரொலி




ஓவியத்தில் ஒரு புதுமை! பொன் தகட்டில் மின்னும் புதுமைப் பித்தன் சித்திரம்! — நவம்பர் மாத 'கணையாழி'.

'சற்றுநேரம்' சிந்திக்கத் தூண்டும் உங்கள் ஆசிரியத் தலையங்கம் தவறிழைக்கும் மண்ணின் மைந்தர்கள் நெஞ்சங்களை துளைக்கும் ஈட்டி.

'டீசல் விலை மக்களைப் பாதித்தால் மக்கள் போராடட்டும்' எனும் வரிகள் அர்த்தமுள்ளவை. லாரி வேலைநிறுத்தத்தின்போது பொதுமக்கள் பேசிக் கொண்ட, என் காதில் விழுந்தவை இவை:

"டீசல் விலை அதிகரித்தால் அதற்கேற்ப கட்டணத்தை லாரி உரிமையாளர் உயர்த்தட்டும். அதன் விளைவு உபயோகிப்பாளரைப் பாதிக்கும். வாழ்க்கைச் செலவு கூடும். மக்கள் குரலெழுப்புவர்; போராடுவர். அது நேரடியாக ஆட்சியினருக்குக் கேட்கும். ஆட்சியில் இருப்பவர்கள் அதற்குப் பதில் சொல்லட்டுமே."

கட்டுரைகளும் சிறுகதைகளும் குறுநாவலும் மனநிறைவைத் தருகின்றன.

எஸ்.பி. கிருஷ்ணன்.
திருச்சி—21

இயக்குனர் ஞானராஜசேகரன் பேட்டியில்...

'முகம்' பாதிப்பு பற்றின அவருடைய பதிலுக்கும் அவரின் ஆக்கத்தில் திரையிடப்பட்ட முகத்திற்கும் வித்தியாசங்கள் ஏராளம் இருக்கிறது.

நிஜ முகம் போலி முகம் என்கிற தன்னுடைய மெல்லிய சிந்தனையை திரையில் அத்தனை விகாரப்படுத்தித்தான் சொல்ல வேண்டுமா?

ஒரு Personality யின் அழகற்ற — அழகான என்கிற முகத்துக்குள் சிக்கி அது வெற்றியடைந்ததா? தோல்வி கண்டதா என்பது மட்டுமே அவருடைய 'இரண்டு முகம்' பற்றின Element என்பது சுலபமான தப்பித்தல்.

இலக்கியம், சினிமா பற்றின உரைகளில் இலக்கியவாதியின் Individuality பற்றி சொல்லியிருக்கிறார்.

நாவலில் பக்கம் பக்கமாக விளக்க வேண்டியவை, நாவலுக்கு அதன் வீச்சுக்கு பக்க பலமாக இருக்கலாம்.

ஆனால் அது சினிமாவுக்கு தேவையில்லை.

இங்கே Visualizing முக்கியம். அதில் Montage முக்கியம். ஒருவன் பல் துலக்குவதையும் 'மொச் மொச்' என்று எதையோ வாயில் வைத்து சுவைப்பதையும் படு க்ளோஸ் அப்பில் ஐந்து நிமிடங்கள் இசை கூட இல்லாமல் காட்டினால்...

படிக்கின்ற உணர்வு சினிமாவில் வந்து விட்டதாக அர்த்தமா? அதைக் காட்டுவதற்கு அவசியம் என்ன வேண்டியிருக்கிறது?

சமுதாயத்தில் மனிதச் செயல்களின், அர்த்த பாவங்களின் வித்தியாசங்களை எப்படி அவை வாழ்க்கையின் ஊடாக புரையோடிக் கிடக்கின்றன என்பதை படம் பிடித்துச் சொல்லியிருந்தால்... — ஒருவேளை, படிக்கின்ற உணர்வு ஏற்பட்டிருக்கலாம்.

முயற்சி முழுமை அடையவில்லை. எதிர்காலத்தில் இன்னும் சிறப்பாகச் செய்வார் என எதிர்பார்ப்பது மட்டுமே.

எஸ். இளங்கோ
சென்னை—21

Dr. ஜெயம் கண்ணன் அவர்களின் சந்ததி கட்டுரை பற்றி எனக்குத் தெரிந்த சில செய்திகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என விழைகின்றேன்.

அலோபதி மருத்துவர்கள் இதுபோன்ற ஆய்வுகளில் ஈடுபடுவது மெத்த மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும் நமது புராணங்களின் வரிசையில் பத்மபுராணம் என்ற புராணத்தில் சிவன் இராமனுக்கு உபதேசம் செய்த சிவகீதை என்ற ஒரு பகுதி உள்ளது. அதில் சாரீரத்தின் உற்பத்தி - எந்தெந்த மாதங்களில் என்ன உறுப்புகள் உற்பத்தியாகின்றன என்பதைப் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. நூலில் உள்ளதை அப்படியே தருகின்றேன்

"புணர்ச்சியினால் கலந்த இந்திரிண்யம் சோனிதத்துடன் சேர்ந்ததாகி அது முதலாவது மாதத்தில் குழம்பாய் இருக்கும். அதன்பின் அக்குழம்பு நீர்க்குமிழி போல திரளும். அதன் பின் மாமிசப் பிண்டமாகும். இரண்டாம் மாதத்தில் பெரிய பிண்டமாகும். மூன்றாம் மாதத்தில் கை, கால்,



படிப்பகம்

www.padippakam.com

தலை முதலிய உறுப்புகள் குறிப் பாக உண்டாகின்றன. நான்காம் மாதத்தில் ஜீவனுடைய இயக்கம் உண்டாகிறது. அதனால் கர்ப்பம் தாயின் வயிற்றிலே அசைகிறது. ஆணென்றால் வயிற்றின் வலப் பாகத்திலும், பெண் என்றால் இடப்பாகத்திலும், அலி என்றால் நடுப்பாகத்திலும் இருக்கிறது. ஆதலால் தாய் ஆண் கருவானால் வலப் பக்கமாக சயனிப்பாள். அப்போது அங்கப் பிரத்யங்கள் சிறியனவாகும். பிறந்த பிறகு உண்டாகின்ற மீசை, பல் முதலியவை தவிர ஏனைய அங்கங்களின் இயல்பு நான்காம் மாதத்தில் உண்டாகிறது. ஐந்தாம் மாதத்தில் மனம் உணர்ச்சி வரும். மாமிசமும். ரத்தமும் புஷ்டியாகும். ஆறாம் மாதத்தில் எலும்பும், நரம்பும், நகமும், கேசமும், ரோமங்களும் பிரிவாய் இருக்கும் பலமும், நிறமும் சிந்திக்கத்தக்கனவாம். ஏழாம் மாதத்தில் அவையமெல்லாம் நிறைவாகும். எட்டாம் மாதத்தில் தோலும், காதும் நிறைவாகும் பிராணபலம், ஒளி, நெஞ்சில் உண்டாகும். சுத்தமான பசுமை கலந்த இரத்தமும், நிமித்தமும், ஜீவிப்பும் உண்டாகும். பிறகு அது தாயை சஞ்சலப்படுத்துவதாய் ஊர்ந்து விளையாடும். அதனால் எட்டாம் மாதத்தில் பிறந்த கர்ப்பம் பிராணபலம் இல்லாமல் மரிக்கும். ஒன்பது முதலிய மாதங்கள் பிரசவத்திற்கு ஏற்ற காலமாம்.''

இந்தச் செய்தியைப் படித்த போது மிகவும் அதிர்ந்து போய் விட்டேன். பல நூற்றாண்டிற்கு முன்னமே அறிவியலில் நாம் முன்னோடி என்பதற்கு பல செய்திகள் நம்மிடம் உள்ளன. அவற்றை வெளிக் கொணர முயற்சிக்க வேண்டும். அவ்வாறு நாம் செய்தால் மருத்துவத் துறையின் சிகரத்தில் பிரகாசிக்க முடியும். இதுபோன்ற செய்திகளுக்கு கணையாழியில் சில பக்கங்களை ஒதுக்கலாம். கணையாழி செய்யவில்லையெனில் வேறுயார்தான் செய்ய முடியும்.

சிவபாரதி
இராசசிங்க மங்கலம்.

எஸ். பொவின் 'சிங்கப்பூரில் ஒரு ஞானோதயம்' கட்டுரை புலம்பெயர்ந்த தமிழர்களின் மீது ஒரு பரிதாப உணர்வை ஏற்படுத்தியது.

புலம் பெயர்ந்த தமிழர்களின் மொழித்துவ அடையாளத்தினை இழந்திடும் பேரபாயத்தினை நம்முன் கேள்வியாக தொடுக்கிறார். தமிழ்த்துவம் என்பது தனித்தன்மை வாய்ந்தது. இன்றைய இலக்கிய விற்பன்னர்களாய்த் திரியும் சந்தைப் பிச்சைக்காரர்களால் தமிழ்த்துவச் சிறப்பு நிற்காது. எனினும் இந்தக் கௌரவ பிச்சையை கோடம்பாக்கத்தோடு நிறுத்திக் கொள்ளலாம். அது அவர்கள் செய்யும் தரகுத் தொழிலுக்கு மேன்மையாயிருக்கும்.

எஸ். செந்தில்குமாரின் 'கொலுசு' கவிதை கிராமங்களில் பார்க்க நேர்கிற ஒரு இயல்பு. சு. முரளியின் 'களவாடப்பட்ட தனிமை' கவிதை நன்றாயிருக்கிறது. அ. கார்த்திகேயனின் 'மகா மவ்னம்' கவிதை பெரும்பான்மையான மௌனங்கள் தவறாக அர்த்தப் படக் கூடாது என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடு.

அரவிந்த பாரதியின் 'தனிமை' ஆழியாளின் 'வெப்பியாரம்'' பாப்லோ அறிவுக்குயிலின் 'வழக்கு' ஆகிய சிறுகதைகள் நல்ல தேர்வு; படித்து முடிக்கிறபோது மனசிற்குள் ஒரு இறுக்கம் வந்து பின்பு வெறுமையாகி விடுகிறது. கதைகளில் வாகர்களை நுழைத்து விடுகிற நேர்த்தி இவர்களின் கைவசம் இருக்கிறது.

எஸ்.சி. கலையமுதன்
சுக்கம்பட்டி.

அக்டோபர்' 99 — ''சி.சு. செல்லப்பா — சில நினைவுகள்'' திரு. வல்லிக்கண்ணன் அவர்களின் கட்டுரை படித்த போது மனம் ரொம்பவும் சோகமாகிப்போனது.

அறுபதுகளில் திரு. சி.சு.செ. அவர்கள் வத்தலக்குண்டில் இருந்தார். ரொம்பவும் எளிமையான மனிதர். ஒரு சாதாரணப் பழுப்புநிற வேட்டியும், கையில்லாத. காடாத் துணியில் தைக்கப் பட்ட பனியன் போன்ற சட்டையும், ஒரு மேல் துண்டோடும், டயர் செருப்போடும். சரக், சரக்கென்று சுறுசுறுப்பாக அந்த அக்ரஹார வீதிகளில் போய்க்கொண்டிருப்பார்.

''பெரிய அகம்'' என்று பெயர் அவர் இருந்த வீட்டிற்கு. கோயில் தெருவில் உள்ளது. இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர்கள் நாங்கள் நாலைந்துபேர் இருந்தோம். காமாட்சி அம்மன் கோயில் எனும் சம ஆராதனை நடக்கும் இடம் ஒன்று அங்கு ஒற்றைத் தெருவில் உண்டு. அந்தக் கோயிலில் காலி வராந்தாவில் ஒரு நாற்காலியில் அவர் அமர்ந்திருக்க, சுற்றிவர நாங்கள் உட்கார்ந்திருப்போம்.

புதுக்கவிதைகள், சிறுகதை, நாவல், இலக்கியம் பற்றியும், பழம் பெரும் எழுத்தாளர்களின் மேன்மை பற்றியும் எடுத்துரைப்பார். அவரது உயிர் மூச்சு — எப்பொழுதும் — எழுத்து எழுத்து என்றும் — இலக்கியம் இலக்கணம் என்றுமே இயங்கிக் கொண்டிருந்தது எனலாம்.

வத்தலக்குண்டில் திரு.பி.ஆர். ராஜம் அய்யருக்கு நூற்றாண்டு விழா நடைபெற்றது. அவரது வீட்டை நினைவிடமாக்கி. அந்த விழாவினைச் சிறப்புற அரங்கேற்றிய பங்கு அவரையே சாரும். அப்போது எல்லா எழுத்தாளர்களும் அங்கு வந்திருந்ததும், நாதஸ்வரம், மேளம் முழங்க ஊர்வலம் நடைபெற்றதும், வதிலை போர்டு உயர்நிலைப்பள்ளியில் திரு. சகஸ்ரநாமம், முத்துராமன் நடித்து திரு பி.எஸ். ராமையா அவர்களால் எழுதப்பெற்ற 'தேரோட்டி மகன்'' நாடகம் நடைபெற்றதும் மறக்க இயலாதவை. இதற்கான பெருமைகள் அத்தனையும் திரு சி.சு.செ. அவர்களையே சாரும் எனலாம்.

உஷாதீபன்
மதுரை



படிப்பகம்

www.padippakam.com

# கணையாழி திரட்டுகள்

'தசரா' அறக்கட்டளை செப்டம்பர் — 95 முதல் இன்று வரை உள்ள இதழ்களை திரட்டுகளாக வெளியிட்டுள்ளது. இத் திரட்டுகள் 6 இதழ்களாக கட்டமைக்கப்பட்டுள்ளன.

வாசகர்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு ஆராய்ச்சி கருத்துக்கள் நிறைந்துள்ள இத்திரட்டுகள் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

| | விபரம் | ரூபாய் |
|---|---|---|
| Vol.– I | 1995 செப்டம்பர் — 1995 டிசம்பர் | 50.00 |
| Vol.– II | 1996 ஜனவரி — 1996 ஜூன் | 75.00 |
| Vol.– III | 1996 ஜூலை — 1996 டிசம்பர் | 75.00 |
| Vol.– IV | 1997 ஜனவரி — 1997 ஜூன் | 75.00 |
| Vol.– V | 1997 ஜூலை — 1997 டிசம்பர் | 75.00 |
| Vol.– VI | 1998 ஜனவரி — 1998 ஜூன் | 75.00 |

பதிவு தபாலில் பெற திரட்டு ஒன்றுக்கு ரூ. 20.00 சேர்த்து அனுப்பவும்.

'கணையாழி' பெயரில் M.O. அல்லது D.D. அனுப்பவும். காசோலை பெறப்படமாட்டாது.

## 'கணையாழி'

18, பி.பி.சி. ஹோம், 18, செவாலியர் சிவாஜி சாலை
தி. நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 432 0013










படிப்பகம்

www.padippakam.com

குறுநாவல்

# சீமை அம்பத்தாறு தேசமும்

## என்.ஸ்ரீராம்

பொழுது சாயத் தொடங்கியிருந்தது. மஞ்சள் வெய்யில் அடித்தது. வளவுக்குள் சனங்களின் பேச்சுச் சப்தம் மெல்ல கேட்கத் துவங்கியது. ஆம்பிளைகள் கையில் தூக்குப் போசி ஆட நடந்து வந்தார்கள். விறகுக் கட்டை சுமந்து வந்த பெண்கள் வீதியில் நின்று பேசினர். பின் பிரிந்தனர். முன்னமே வேலைக்காட்டிலிருந்து திரும்பிய பெண்கள் குடத்தை எடுத்துக்கொண்டு சேந்துக் கிணற்றை நோக்கிப் போயினர். சேந்துக் கிணற்றில் தண்ணி சேந்த பெரிய்ய அடிதடியாகக் கிடந்தது. இரண்டு தொளைகளிலும் பெண்கள் வரிசை நீண்டிருந்தது. மண்குடம் தூர்விட்ட பெண் சண்டைக்கு நின்றாள். எல்லாருக்கும் தண்ணி சேந்தும் நேரம் இதுவாகவே இருந்தது. பெண்களின் சப்தத்தோடு தொளையின் மரவண்டிச் சப்தம் தோய்ந்து வந்தது. மேலே கொக்குக் கூட்டம் வளவைத் தாண்டிப் போவதை தண்ணி சேந்தியபடி பெண்கள் பார்த்தார்கள். படை படையாக கிழக்கே போய்க்கொண்டேயிருந்தன கொக்குகள். வாகையில் இளம்பிஞ்சும் கொக்கின் இளங்குஞ்சும் யாரும் கண்டதேயில்லை எனப் பேசினர்.

**சம்ப்பா நரேந்தர் குறுநாவல் போட்டி பரிசு பெறும் படைப்பு**

வீட்டின் முன்பு வெள்ளைச்சிக் கிழவி கூடையை வைத்து உட்கார்ந்திருந்தாள், கால்நீட்டி. கோழிகள் இன்னும் வட்டச்சொம்பு விளக்குற இடத்தில் பொறுக்கிக் கொண்டிருந்தன. கிணற்றடியிலிருந்து வந்த பாட்டம்மா கிழவியிடம் நின்று பேசினாள். பாட்டம்மா வீட்டுக்காரன் வீதிக்கு வந்து சப்தம் போட்டான். பாட்டம்மா நடந்து போனபோது கையிடுக்கில் இடுக்கியிருந்த குடத்திலிருந்து தண்ணி தளும்பிக்கொண்டே போயிற்று. சாம்பசிவ வண்ணான் கழுதைகளைத் தேடிக்கொண்டு பின் வளவில் திரிந்தான். அவன் எதிர்பட்ட ஆளிடமெல்லாம் விசாரித்தபடியே போனான். அழுக்கு மோலி அவன் தலையில் கரகம் போல் ஒட்டியிருந்தது.

தொலைவில் வெள்ளாட்டின் கழுத்து மணிச் சப்தம் கேட்டது .வெள்ளைச்சிக் கிழவி கைகளை ஊன்றி எழுந்தாள். மேற்கே சல்லடைக் கண்ணாடி வைத்துப் பார்த்தாள். பொழுது கண்ணைக் கூசியது. குப்பக்கா விறகுச் சுமையோடு கடந்தாள். சைக்கிளை உருட்டிக்கொண்டு அவள்புருஷன் பின்னே போனான். கேரியரில் மிஸ்டக்கொடியிருந்தது.

ஒசையப்பக் கிழவன் வெள்ளாட்டை ஓட்டிக்கொண்டு வந்தான். ஒரு செம்மி மூடும், ரெண்டு கருத்த ஆடும் வந்தன. கால்களைப் பரப்பி நடந்து வந்தன. ஆட்டைக் கண்டதும் குட்டிகள் கொடாப்புக்குள்ளிருந்து குரல் கொடுத்தன. வெள்ளைச்சிக் கிழவி விரைசலாக பின்புறம் போனாள். கொடாப்புக்குள்ளிருந்த குட்டிகளை வெளியே நீக்கிவிட்டாள். குட்டிகள் தாவிக்கொண்டு போய் ஆட்டை எதிர்கொண்டன. மடியில் குட்டிகள் முகைவதை கருப்ப மாதாரி நின்று பார்த்துப் போனான். அவன் பார்த்தாலே கண் திருஷ்டி ஏற்படும். எனச் சொல்வார்கள். ஓசையப்பக் கிழவன் சல்லக்கத்தியை சுவற்றில் சாத்தினான். வெள்ளைச்சிக் கிழவியிடம் வந்து பேசினான்.

''கெணத்து நெறைய தண்ணி கெடந்தாலும்... சத்தம் போடாம தண்ணி சேந்தமாட்டாளுக நம்ம சக்கிலிச்சிக மாத்திரம் என்னைக்கும்...''

''ம்கூம்... கவுண்டிச்சிமாரு கன்னா மாத்திரம் மணக்கறாங்களாக்கும்...''

ஓசையப்பக் கிழவன் மேற்கொண்டு பேசாமல் பின்புறம் போனான். வெள்ளாடுகளின் காதுகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் தும்பில் பூட்டினான். ஒரு குஞ்சுக்கோழி வாசலுக்கு வந்து கூடையில் ஏறியது. அடைந்த பின்னும் அதன் ரொக்ரொக்கென்ற



படிப்பகம்

www.padippakam.com



சப்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது. வெள்ளைச்சிக் கிழவி ஆடுகளுக்குச் சுத்திப் போட்டாள். ஓசையப்பக் கிழவன் சருகுகளைக் குவித்து தீ மூட்டினான். மிளகாய் காந்தவில்லை என இருவரும் ஆத்திரம் கொண்டனர். பறைந்தனர்.

இருட்டியதும் பழனியும் ராமாயியும் தெலுங்கில் பேசியபடி வீதியில் வந்தார்கள். பழனி சோத்துப் போசியை திண்ணையில் வைத்தான். வெள்ளைச்சிக் கிழவி தீபம் பற்ற வைத்துக் கொண்டிருந்தாள். ராமாயி தலையிலிருந்த விறகுச் சுமையை பொடக்காலியோரம் வீசி எறிந்தாள். ஆடுகள் மிரண்டு தாண்டின. கழுத்துமணி அடித்தது.

ஓசையப்பக் கிழவன் ஒதுக்குப்பட்டலோரம் கயித்துக் கட்டிலை தூக்கிப் போட்டான். பச்சைத் துப்பட்டியை உதறி விரித்துப் போட்டான். மல்லாக்க படுத்துக் கொண்டான். ஆகாசத்துக்கும் பூமிக்கும்

**ஒரு குஞ்சுக்கோழி வாசலுக்கு வந்து கூடையில் ஏறியது. அடைந்த பின்னும் அதன் ரொக் ரொக்கென்ற சப்தம் கேட்டுக்கொண்டே யிருந்தது.**

இடையேயான பரப்பு மூழ்கியிருந்தது. இருளில் குஞ்சுக்கோழி மீனையும் கட்டக்கால் மீனையும் தேடி அலைந்தது கிழவனின் பார்வை. மீன்கள் உதித்துக் கொண்டேயிருந்தன.

பட்டத்தலைச்சி ஆத்தா கோவில் முன்பு ஆட்டுகாலிலிருந்து திரும்பிய பொடியன்கள் விளையாண்டு கொண்டிருந்தனர். காற்றோடு புழுதி பறந்து போயிற்று. வீதியில் யாரோடவோ பேசிக் கொண்டு வந்தான் சுந்திரன். அவனோடு வாலைக் குழைத்தபடி நாய் வந்தது. பழனி திண்ணையில் உட்கார்ந்தான். துண்டை தலைக்கு ஆதரவாகக் கொடுத்து சுவற்றில் சாய்ந்து கொண்டே யோசித்தான். எண்ணமெல்லாம் சுந்திரனை மையமிட்டே சுழன்றது.

ஊலை ஒழுகுவது நிற்பதற்கு முன்பே சுந்திரனை முத்துசாமிக் கவுண்டர் பண்ணையத்தில் கொண்டுபோய் வைத்தான் பழனி. இப்போது போல இருக்கிறது. மூணு வருஷமாகிவிட்டது. அவனுக்குக் கூலியாக வருஷத்துக்கு அஞ்சு மூட்டைக் கவசமும், மத்தியானச் சாப்பாடும், ஆடி பதினெட்டு, பட்டி பொங்கல் ரெண்டு நோம்பிக்கும் புதுத் துணி எடுத்துக் கொடுத்தார் முத்துசாமிக் கவுண்டர். ராமாயி வாசலுக்கு வந்து வெள்ளைச்சிக் கிழவியைக் கூப்பிட்டுக் கேட்டாள்.

''கன்னீம்மா வேலைக்குப் போயிட்டு வந்துட்டாளா?''

''பட்டியால நேரமே வந்துட்டா...''

''மால நேரத்துல இந்தக் கழுதெ எங்கெ தொலஞ்சுது...''

ராமாயி வீதியை எட்டிப் பார்த்தாள். குப்பக்கா வீட்டுமுன் கன்னீம்மா தண்ணிக்குடத்தோடு நின்று பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. மண்டைய மாதாரி



படிப்பகம்

www.padippakam.com

வீதியில் சப்தமிட்டுக் கொண்டு வந்தான். பழனி எழுந்து வாச லுக்குப் போனான். மண்டைய மாதாரியோடு பேசிவிட்டு திரும்பி னான். வாசல்படியிலிருந்த தீபத்தை எடுத்துக் கொண்டு ராமாயி உள்ளே போனாள். காற்றில் நிழல் அசை வது சுவரில் தெரிந்தது. கன்னீம்மா தண்ணிக்குடத்தை அடுப்படி யோரம் இறக்கி வைத்தபடி சொன்னாள்.

''மண்டைய மாமா பண்ணயங் கட்டற கொங்கபாடு எருமை செத்துப்போச்சாமா...''

''எனத்தனாலயாமா...?''

''வெசந்தொட்டிருச்சுன்னு பேசிக்கறாங்க...''

வீதியில் நடக்கும் ஆம்பிளை களின் டயர்செருப்பு சப்தம் எழுப் பிப் போயிற்று. பட்டைத் தலைச்சி ஆத்தா கோவில் முன்பு ஒரே பேச்சர வமாகக் கிடந்தது. மண்டைய மாதாரி வடக்கயிறும் மூங்கில் வளையும் தேடி வீடுவீடாக அலைந் தான். நாய்கள் குரைத்தபடி இருளில் எதிர்பட்டன.

குப்பக்கா புருஷன் வாசலுக்கு வந்ததும் பழனி எழுந்து உருமா லையை இறுக்கிக் கட்டிக் கொண் டான். குப்பக்கா புருஷன் பழனிக்கு ஒரு பீடியை உருவிக் கொடுத்தான். பற்ற வைத்துக் கொண்டான். கணேஷ் பீடியின் வாசனை புகை யோடு வெளிப்பட்டது. பழனிக்கு எப்பொழுதும் பச்சைக்கட்டு பீடிதான் பிடித்தது. அதன் ருசியே தனியானது.

கவுண்டர் வளவின் வழியாகப் போகும்போது துண்டை அவிழ்த் துக் கொண்டனர் மாதாரிகள். கவுண்டர்கள் தென்படும்போதெல் லாம் கும்பிட்டனர். நின்று பதில் சொல்லி நடந்தனர். கவுண்டிச்சிகள் நடையில் எட்டிப் பார்த்தனர். சானார் வளவைக் கடந்தபோது பெண்கள் தெலுவு காய்ச்சிக் கொண்டிருப்பதைக் கண்டனர். கொப்பரையின் இருபுறமும் தீயின் ஜுவாலை எரிந்து அமிழ்ந்தது.

வாவிக்கரைத் தோட்டம் செல்லும் இட்டேரி, ஊரிலிருந்து தனியாகப் பிரிந்து சென்றது. இட் டேரி நெடுக மணல் மேவி யிருந்தது. நடக்கும்போது செருப் புப் பதிந்து கொண்டது. கால்க ளுக்கிடையே புழுதி கிளம்பியது. இருபுறமும் கிளுவை வேலிகள் கவிழ்ந்து கிடந்தன. வெள்ளெலி கள் குறுக்கே ஓடின. ஆளுக்கு முந்திப் போன நாய்கள் முகர்ந்து பார்த்துப் போயின. பின்னே வந்து கொண்டிருந்தவர்கள் வெள் ளெலியைக் கல்லால் அடித்தனர். கல் குறி தப்பிப் போய் வேறெங்கோ விழும் சப்தம் கேட் டது. காற்று மரங்களினூடே புகுந்து முறைச்சல் எழுப்பிப் போனது.

வாவிக்கரைத் தோட்டம் ஒரு மைலுக்கு வீச்சாக இருந்தது. கிணற்று மேட்டில் லைட் எரிந்தது. வண்டி சாய்பின் முன்பு கட்டில் போட்டு பொன்னியப்பக் கவுண் டர் உட்கார்ந்திருந்தார். கூட இருந்தவர்கள் இருட்டில் பேசிக் கொண்டிருந்தனர். மண்டைய மாதாரி முதலில் போய் கும்பிட் டான். மற்றவர்கள் கட்டுத்தரை யைத் தேடிப் போனார்கள். முளக் குச்சிப் பக்கம் சிவபாலக் கவுண்டர் நின்று கொண்டிருந்தார். நாய்கள் ஒன்றோடு ஒன்று துரத்திக்கொண்டு சண்டையிட்டன. சிவபாலக் கவுண் டரும் சிலரும் சேர்ந்து கொண்டு நாய்களை சப்தமிட்டு விரட்டினர். கல்லெடுத்து அடித்தனர்.

கட்டுத்தரையில் எருமை விறைத்துப் போய்க் கிடந்தது. மத்தியானமே செத்துப் போயிருக்க வேண்டும். காதறுந்த இடத்தில் ரத்தம் உறைந்து போயிருந்தது. எறும்பு ஊர்ந்து கொண்டிருந்தது. கயிற்றை முன்னமே அவிழ்த்து விட்டிருந்தனர். எருமையின் நான்கு கால்களையும் சேர்த்துக் கட்ட முயன்றனர். மூங்கில் வளையை கட்டிய கால்களுக்கிடையே கோர்த் தனர். இரு அணியாகப் பிரிந்து ஆளுக்கு ஒரு பக்கம் பிடித்துத் தூக்கினார்கள். தூக்கும்போது சப்தம் போட்டார்கள். எருமை அசைய மறுத்தது. மூங்கில் வளை ஒடிந்துவிடும்போல் தோன்றியது. ஒத்தாசைக்கு வேறு ஒரு கோலைச் சொருகினர். சிறு கோல்களை விட்டு அல்லையில் நெம்பினர்.

நெடுநேரத்திற்குப் பின் எரு மையைத் தூக்க முடிந்தது. பாடையைத் தூக்கிப் போவது போல அசைந்து அசைந்து நடந் தனர். சுமை அழுந்த அழுந்த ஆளா ளுக்குத் திட்டிக் கொண்டனர், தெலுங்கில் சப்தமிட்டுக்கொண்டு. திட்டுக்கள் பெரும்பாலும் பின் புறத்தையும் குறிகளின் நுனியின் செயல்பாடுகளைப் பற்றியதாக வுமே இருந்தன. அரையிருட்டில் நாய்கள் ஆளுகளுக்கிடையே புகுந்து முந்தி ஓடின.





படிப்பகம்

www.padippakam.com

''முன்னெயெல்லாம் பண்டபாடி செத்தா தூக்கிப் போறதுக்கு கவுண்டமாருக மொட்டவண்டி குடுப்பாங்க... இப்ப என்னடானா தலையில தூக்கி வச்சு போன்னு சொல்றாங்க... இன்னுங் கொஞ்சங் காலத்துல ஊரெவுட்டே போன்னு முடிக்கிருவாங்க போலிருக்கு...''

''பின்னே... சக்கிலியனுகளுக்கு வண்டி குடுத்தா வெளங்கறதில்லையாமுல்ல...''

கேட்டுக்கொண்டு வந்தவன் பதில் சொன்னான். வளவுக்குள் எருமை வந்து சேர்ந்தபோது நடுச்சாமத்திற்கு மேலாகிவிட்டது. தேய்பிறை காலத்து நிலா மெல்லக் கிளம்பியது. மங்கலான வெளிச்சத்தில் சனங்கள் நிழலோடு தெரிந்தனர்.

பழனி கோடாரியை எடுத்து வந்தான். எருமையின் மண்டையைக் குறிவைத்து ஓங்கிப் போட்டான். கொம்பு தறித்துப்போய் விழுந்தது. கபாலம் பிளந்துகொண்டது. கால் கட்டை அவிழ்த்துவிட்டபின் குப்பக்கா புருஷனும் கருப்பமாதாரியும் எதிரெதிர் உட்கார்ந்தனர். கால்களை ரம்பத்தால் அறுத்தனர். ஆளுக்கு ஒரு வேலையை செய்தனர். கறி அரிய பெண்களும் வந்து சேர்ந்தனர். பொடியன்கள் நாய்களை விரட்டினர். அரிந்த கறிகளைப் போட எருமையை ஒட்டி சாக்கு விரிக்கப்பட்டிருந்தது.

முதல்கோழி கூப்பிட்டது. மண்டைய மாதாரி தோலைச் சாக்கில் சுருட்டி எடுத்துக் கொண்டான். கடைசியாக கறியை கூறு பிரித்தான். பண்ணையம் கட்டுகிறவன் என்ற முறைமையில் அதிகமான கூறுகளை எடுத்துக் கொண்டான். பெண்கள் முன்னே எழுந்து போய் அடுப்புப் பற்ற வைத்தனர். கறிவெந்து கொண்டிருக்கும்போது பளபளவென்று விடிந்துவிட்டது. வேலைக்காட்டுக்கு செல்லும் அவசரம் தொற்றியது பெண்களுக்கு. அன்றிரவு தோலை விற்றுத் திரும்பிய மண்டைய மாதாரி வீதியில் நின்று 'சண்டைக்கு அழைத்துக் கொண்டிருந்தான். போதை ஏறியிருந்தது. கெட்டவார்த்தையில் திட்ட ஆரம்பித்தான்.

ஓசையப்பக் கிழவன் தோப்பரையை எறப்பிலிருந்து உருவினான். கையிடுக்கில் இடுக்கிக் கொண்டு நடந்தான். கவுண்டர் வளவில் வாரு அறுந்த செருப்புகள் நிறைந்து கிடந்தன. விறைத்த செருப்புகளை தண்ணியில் நனைத்துப் பிடிக்கத் துவங்கினான். கவலை ஓட்டிய காலங்களில் சால்பரி தைக்கும் வேலையிருந்தது. வருஷ காலாவதியில் அதற்குத் தனியாகக் கூலி தருவார்கள். மின்சாரம் வந்ததில் எல்லாம் போயிற்று. சோத்து நேரமானதும் போசியில் சோறு வாங்கிக் கொண்டான். அரிசிச் சோறு பருப்புக் குளம்பு, என்னத்தையோ கண்டதுபோல் இருந்தது கிழவனுக்கு.

ராமாயி பாதிக்கறிக்கு மேல் உப்புக்கண்டம் போட்டு வைத்தாள். வெள்ளைச்சிக் கிழவி 'தோல் வாரோடு' சேர்த்து உப்புக் கண்டத்தை வாசலில் காயவைத்தாள். வெய்யிலின் உக்கிரத்தில் உப்புக் கண்டம் சுருங்கியது. நாய்களுக்கும் காக்காய்களுக்கும் காவலிருந்தாள். ஓசையப்பக் கிழவனுக்கு உப்புக் கண்டத்தைக் கண்டதும் நாக்கில் எச்சில் ஊறியது. உப்புக்கண்டம் காயப்போட்டிருந்த எல்லா வாசல்கள் முன்பும் நாய்கள் குத்தவைத்திருந்தன. நாக்குத் தொங்கியபடி விரட்ட விரட்ட திரும்ப வந்து கொண்டே யிருந்தன.

அந்த வாரமெல்லாம் ராமாயி உப்புக்கண்டத்தைப் போட்டுக் கறிக்குளம்பு வைத்தாள். கூப்பனரிசிச் சோறுக்கும், குளம்புக்கும் அலாதியான ருசி இருப்பதாகப்பட்டது சுந்திரனுக்கு. ஆட்டுக்காட்டுக்கு வயிற்றை நெளித்துக்கொண்டு போனான். மதியத்தில் ஆட்டுக்காட்டில் தூக்கம் சுகமாக வந்தது. ஆடுகள் கொறங்காட்டிலிருந்து வெளியே முட்டின. நேராக தோட்டத்துக்கு சென்றன. வெள்ளாமைக் காட்டில் மேய ஆரம்பித்தன.


வெகுநேரம் கழித்துத்தான் முத்துச்சாமிக் கவுண்டர் இளஞ் சோளக்காட்டில் மேயும் ஆடுகளைப் பார்த்தார். புடைக்கு வராத கோடை சோளப்பயிர். பகீரென்றது அவருக்கு. விரைசலாக விழுந்து ஓடினார். ஆடுகளை வெளியே முடுக்கிவரச் சிரமப்பட வேண்டி





படிப்பகம்

www.padippakam.com



யிருந்தது. சொக்குப் பிடித்த ஆடுகள் வயிற்றை நெளித்து புழுதியில் விழுந்தன. கால்களை பரப்பிக் கொண்டு புரண்டன. வயிறு உப்பி விட்டது முக்கால்வாசி ஆடு களுக்கு. சுந்திரனை சபதமிட்டுத் திட்டினார்.

''அட சண்டாளா... பட்டி யாட்டயெ தொலெச்சுப் போட்டெ யாடா படுபாவி...''

அவர் சொக்குப் பாடம் போடும் பாடகன் யாரென்று ஒருகணம் யோசித்தார். மேற்கே விழுந்து ஓடினார். வாவிக்கரைத் தோட்ட இட்டேரியில் வெள்ளாடு மேய்த்துக் கொண்டிருந்த ஓசையப்பக் கிழவனிடம் போனார். விசயத்தைக் கேட்டவுடன் வெள்ளாட்டை அங்கேயே விட்டுவிட்டு அவரோடு நடந்தான் கிழவன்.

புழுதிக்காட்டில் ஆடுகள் மதம் பிடித்து நின்றுகொண்டிருந்தன. அசைபோட முடியாமல் தவிப்பது தெரிந்தது. இட்டரைப் பிடித்த ஆடுகள் கத்தின. வேறுசிலரும் வந்தனர். மாட்டுத்தாழியில் கால், முகம் கழுவினான் கிழவன். மேலே சூரியனைக் கும்பிட்டான். துண்டை விசிறி பாடம் அடித்தான். வாய் முணகியது. மண்ணை மந்திரித்து ஆடுகளின்மேல் வீசினான். எதுவும்

padippakam

www.padippakam.com

பேசாமல் மேற்கே கிளம்பினான். திரும்பிப் பார்க்காமலேயே நடந் தான்.

வேறுசிலர் பேசிக்கொண்டிருந் தனர். ஓசையப்பக் கிழவனின் சொக்குபாடல் திறமையைப் பற்றி செம்மறியாடுகளைப் பற்றிப் பொதுவாக.

''செம்புலியாட்டப் புடிச்சசாபக் கெரகமே... கோடச்சோள பயித்தெ மோந்து பாத்தா போதும்... சொக் குப் புடிச்சுக்கு....''

ஆடுகள் எழுந்து நடக்க ஆரம் பித்தன. முத்துசாமிக் கவுண்டருக்கு கோபம் இன்னும் ஆறாமலேயே யிருந்தது. கொறங்காட்டைப் பார்த் துப் போனார், கையில் சாட்டையை எடுத்துக்கொண்டு. கடவுபடலை ஒட்டிய வேலாம்மர நிழலில் சுந் திரன் படுத்துக் கிடந்தான். அவன் வாயில் ஜலிவாய் ஒழுகியது. காலில் உதைத்து எழுப்பினார். அவன் கண்ணைத் தேய்த்துக் கொண்டு பிதிர்கெட்ட மாதிரி பார்த் தான். அவர் சாட்டையை ஓங்கி யதும் எழுந்து ஓடினான். துரத்திப் பிடித்தார். சாட்டை அவன் உடம் பெங்கும் வரிந்தது. சுந்திரன் பெருங் குரலெடுத்து அழத் துவங்கினான்.

முத்துசாமிக் கவுண்டர் சொல் லிச் சொல்லி அடித்தார்.

''நாளையிலிருந்து உனக்கு மத் தியான சோத்தெ குறுவ புடிக்க நம்பாரு... அப்பத்தா நீ சொன்னபடி கேப்பே...''

அன்று இரவு வீட்டில் பையன் அழுதுகொண்டிருப்பதைப் பார்த் ததும் பழனிக்குப் பதறியது. முது கெல்லாம் தடிப்புகள் புடைத் திருந்தன. ஒரு வேகத்தில் பையனை இழுத்துக் கொண்டு முத்துசாமிக் கவுண்டர் வீட்டுக்குப் போய்க் கேட்டான். முத்துசாமிக் கவுண்டர் பழனியையும் பையனையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு பேசினார்.

''சக்கிலிய நாயீக்கு... தட்டிக் கேக்கறளவுக்கு வாவு வந்தி ருச்சோ...?''

மறுதினத்திலிருந்து சுந்திர னுக்கு மதியச்சோறு அம்புலியே ஊற்றினார்கள். பட்டிப்பொங்க லுக்குக் கூட புதுத் துணியில்லை. அடுத்த வருஷம் சுந்திரனை வேறு பண்ணையத்தில் சேர்த்தான் பழனி. அதன்பின் பழனி கும்பிட்டாலும் முத்துசாமிக் கவுண்டர் எதிர்படும் போதெல்லாம் வன்மமாகப் பார்த் தார். காறித்துப்பிவிட்டுப் போவார்.

அந்த வருஷம் பங்குனி உத்திரத்திற்கு காவடி கிளம்ப ஆயத்தமானது. மாதாரி வளவில் ராத்திரியெல்லாம் பலகை அடித்து ஒத்திகை பார்த்துக் கொண்டிருந் தனர். கொடுமுடியில் தீர்த்தம் மந்திரித்து பழனிமலையில் கொண்டுபோய் விடவேண்டும். நீண்ட நடைகொண்ட பயணம். போய்வர ஒருவாரத்திற்கு மேலா கும். வரிப்பணத்திற்குச் சிலர் 'கைமாத்து'த் தேடிக்கொண்டிருந் தனர். காவடி புறப்படும் ராத்திரி

**வெகுநேரம் கழித்துத்தான் முத்துச்சாமிக் கவுண்டர் இளஞ்சோளக் காட்டில் மேயும் ஆடுகளைப் பார்த்தார். புடைக்கு வராத கோடை சோளப்பயிர். பகீரென்றது அவருக்கு.**

முத்துசாமிக் கவுண்டர் பக்க பூசாரியிடம் சொன்னார்.

''மாதாரி வளவுல அறுவது ஊடு இருக்கு. பலகை அடிக்க எல்லா ரையும் கூட்டிட்டுப் போய் செரி பண்ண முடியுமா... வளவளன்னு எதுக்கு நெறைய...: நல்லா அடிக் கறவுனுக பத்துப் பேரு போதும்...''

கூட இருந்தவர்கள் ஆமோதித் தனர். முத்துசாமிக் கவுண்டர் தேர்வு செய்த பத்துப் பேரில் பழனி இல்லை. வீட்டிற்கு திரும்பும் போது பழனிக்கு எதையோ இழந் ததுபோல இருந்தது. சுந்திரன் பலகையை திண்ணையில் வைத்து துடைத்துக் கொண்டிருந்தான். ராமாயி உள்ளே வழித்துவிட்டுக் கொண்டிருந்தாள். சாணிவாசம் வெளியேவந்தது. பழனி சுந்திரனி டமிருந்து பலகையைப் பிடிங்கி முன்புபோல எறப்பில் சொருகி, ன்ான். ராமாயி சாணிகையைக் கழு வினாள். முந்தானையில் துடைத் தபடி வெளியே வந்து பழனியிடம் பேசினாள்.

''இதுக்குத்தான் கவுண்டரப் பகைச்சுக்க வேண்டாமுன்னு தலை யால அடிச்சு தண்ணி குடிச்சே... கேட்டயா நீ.... இன்னும் என்ன அபாண்டமெல்லாம் நம்மேல கொண்டுவராங்களோ....''

நடந்ததையெல்லாம் உணராத இரவு வெகுநேரமாகியும் பழனிக் குத் தூக்கம் கொள்ளவில்லை. சாமத்திற்கு மேல் பலகை அடித் தபடி காவடி புறப்பட்டுப் போனது. திண்ணையில் படுத்துக்கொண்டு பார்த்தபடியே இருந்தான். கண் ணில் நீர் கட்டியது. எழுந்து பல கையை வெளியே எடுத்தான். பைத் தியம் பிடித்தவன்போல விசை கொண்டு அடித்தான்.

தனியான பலகை சப்தம் கேட்டு மற்றவர்களும் எழுந்து வந்தனர்.

ராமாயி கோழி கூப்பிடவே



படிப்பகம்

www.padippakam.com

எழுந்து அடுப்புப் பற்றவைத்தாள். சோத்தை போசியில் போட்டு வைத்துவிட்டு நடையைச் சாத்தி னாள். சுடுகாட்டுப் பாதையில் நடந்தபோது குப்பக்காவும் சேர்ந்து கொண்டாள். கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது. செம்பூத்து குரல் எழுப்பிய வண்ணம் இருந்தது.

சுடுகாட்டுப் பாதையின் முடி வில் 'பறைவளவு' வந்தது. எல்லா ஊர்களிலும் பறைவளவை ஊருக்கு ஒட்டாமல் வைத்திருப்பதன் கார ணம் ராமாயிக்கு விளங்கவில்லை. பறைவளவுக்குப் பின் சுடுகாட்டு வேலிப்புதர் விரிந்து கிடந்தது. வேலிப்புதரின் மேற்புறம் சேமலை யப்பக் கவுண்டர் கொறங்காட்டுக் கல்கட்டு நீண்டிருந்தது. மற்ற காலைநேரங்களைப் போலவே பறைவளவுப் பையன்கள் கல் கட்டில் உட்கார்ந்திருந்தனர், கால் களைத் தொங்கப்போட்டு. வெளிக்கு இருக்க வந்த இளம் மாதாரிப் பெண்கள் முகத்தை சுழித்துக்கொண்டு போயினர். திட் டினர் சிலர். பையன்கள் பேசிச் சிரித்தபடியிருந்தனர். ராமாயிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. நேராக கல்கட்டை நோக்கிப் போனாள். சப்தமிட்டாள்.

''சக்கிலிச்சீக ........ பாக்கறதுல அப்புடி என்னடா நீங்க காணாததெ காங்கறீங்க... கெழக்கால கவுண்டச் சிமாருக பேலறதெ போயி பாக்கற துதானே... உரிச்சு உப்புக்கண்டம் போட்டு ஊரெவுட்டு முடுக் கிருவாங்கன்னு தெரியுமில்ல... சக்கலிச்சிகன்னா மாத்தரம் உங்க ளுக்கெல்லாம் இழுச்சவாச்சிகளா தெரியுதா... நாளெயும் பொறவு உங் களெ இங்கெ பாத்தே... நீட்டியிருக் கறதெ அறுத்து நாய்க்கு போட் டிருவனாமா... சொல்லிட்டே... த்தூ...''

ராமாயி காரித் துப்பினாள். பையன்கள் கல்கட்டின் அந்தப்

**பழனிக்குத் தூக்கம் கொள்ளவில்லை. சாமத்திற்கு மேல் பலகை அடித்தபடி காவடி புறப்பட்டுப் போனது. திண்ணையில் படுத்துக்கொண்டு பார்த்தபடியே இருந்தான். கண்ணில் நீர் கட்டியது.**

புறம் குதித்து ஓடினர். வெளிச்சம் மெல்லப் பரவியது. வீடுவரும் வரை ராமாயியும், குப்பக்காவும் பேசிக்கொண்டே வந்தனர்.

''அல்லே ராமாயீ... அவுனு களெச் சொல்லியும் குத்தமில்லடி... நம்ம கொமரிமுண்டிகளும் அவனு கிட்ட பல்லிளிக்கறாளுகளே என்ன செய்யறது சொல்லு...''

''அதெ உடக்கா... இந்த ஆண் ட்வெ நமக்கு பேலறதுக்குக்கூட ஒரு நல்ல எடமில்லாம இப்படி ஒரு ஈனசாதியா படைச்சு முச்சந்தியில நிக்கவச்சுட்டான்னு நெனைக் கறப்ப கண்ணீரு மாலமாலையா வருதக்கா... ஒரு நேரத்துல ஏன்டா பொறந்தோமுன்னு இருக்கு... எங் காச்சும் ஓடிப்போயி நாண்டுக்கிட்டு செத்துப் போயிருளாமுன்னும் இருக்கு...''

ராமாயி வேலைக்காட்டிலிருந்து நேரமே வீட்டுக்கு வந்தாள். கைகா லெல்லாம் ஒரே குத்தும் குடைச் சலுமாக இருந்தது. வெந்தண்ணி காயவைத்து எடுத்துபோய் பொடக் காலியில் வைத்தாள். வீதியில் ஜீப் வந்து நின்றது. பேண்ட் போட்ட சிலர் இறங்கி வளவுக்குள் போயி னர். கிழக்கே வந்த குப்பிக்கா புருஷன் சொன்னான்.

''ஆபீஸ்மாருங்க வந்திருக் கறாங்க புள்ளீகோ... இந்நயோட நமக்கெல்லாம் நல்லகாலம் வந் திருச்சு... மகராசன் எம்.ஜி.ஆரு நமக்கெல்லாம் ஊடு கட்டித் தாரா ராமா...''

புதுவீடு, கோட்டர்ஸ் வீடு போல வரிசைவரிசையாக இருந் தது. வேலைப்பாடுகள் கொண்ட கான்கிரீட் ஜன்னல் நாலு மூலை யிலும் வைத்துக் கட்டியிருந்தனர்.

குடிபோன அன்றைக்கு பழ னிக்கு தூக்கமே வரவில்லை. ஓசை யப்பக் கிழவன் வாசலில் வாத நாரண் கோல் ஒன்று நட்டு தண்ணி ஊற்றிக் கொண்டிருந்தான். துளிர் விட்டிருந்தது.

பழைய மாதாரி வளவு சிதைந்து விட்டது. புகைபடிந்த பனை ஓலை யில் கரையான் ஏறியிருந்தது. தற் போது அதனுள் சாணார்கள் சாரா யம் விற்றுக் கொண்டிருந்தனர். சாராயம் குடித்தவர்கள் சைக்கிளை உலட்டியபடி ஓட்டி வருவதை பார்க்கும்போது சிரிப்பாக வந்தது. பெண்களோடு இரவெல்லாம் சண்டை நடந்து கொண்டேயிருந் தது. தாங்கிக் கொள்ள முடியாத கெட்டவார்த்தைகள். புணர்ச்சியின் வெவ்வேறு செயல்நிலைகளை குறித்த வார்த்தைகள். வெளியே வந்து விழுந்து கொண்டேயிருந்தன எந்நேரமும்.

சாணார் வளவிற்கு அடிக்கடி போலீஸ் வந்து போயினர். ஒரு முறை பாட்டம்மா வீட்டுக்கார னையும் எதற்கோ இழுத்துப் போனார்கள். அந்த மாதமெல்லாம் கன்னீம்மாவுக்கு உடம்பு சுகமில் லாமலேயே இருந்தது. அடிக்கடி படுத்துக் கொண்டாள். வாந்தி நிற் காமல் எடுத்தது. தாராபுரம் பெரி யாஸ்பத்திரிக்கு கூட்டிப் போனாள்



படிப்பகம்

www.padippakam.com

ராமாயி. அன்று இரவு பழனி வந்ததும் உடைந்து போய் அழுதாள்.

''இப்பிடி ஒரு அபகீர்த்தியை பண்ணுவான்னு ஆரு கண்டா... நம்ம சாதியாயிருந்தா மேக் கொண்டு பேசலாம்... இப்ப என்ன செய்யறது''

மீண்டும் அழுதாள். வெள்ளைச்சிக் கிழவி தட்டுத்தடுமாறி உள்ளே வந்தாள். பழனியின் மார்பில் அறைந்தபடி சொன்னாள்.

''எல்லாம் இந்த பாழாப்போன நாயால வந்தவென... வயசுப் புள்ளயெ தூரக்காட்டுக்கு ஒத்திலவேலைக்கு அனுப்பாதின்னா... கேட்டாத்தானே ஆரும்.''

பழனி சிவபாலக் கவுண்டர் வீட்டுக்கு போனபோது பொன்னியப்பக் கவுண்டர் வெளித்திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். கூட இருந்தவர்கள் சிரித்தபடி இருந்தனர். யாரோ கேட்டனர்.

''என்னடா இந்நேரத்தில...?''

''சாமீ.. தப்பு நடந்து போச்சுங்க... ஒரு ஞாயம் வேணுமுங்க...''

''என்னடா தப்பு?''

பொன்னியப்பக் கவுண்டர் கேட்டதும் பழனி முழுவதும் சொன்னான். ஆசாரத்து நடையோரம் நின்று கேட்டுக் கொண்டிருந்த பெரிய கவுண்டிச்சி வெளியே வந்து சப்தம் போட்டாள்.

''உம்புள்ள பேண்டபக்கம் ........ மறக்கறவ. எவங்கிட்ட ஏமாந்தாளோ... நீ இங்க வந்திருக்கே...''

''இல்லீங்காத்தா. சின்னக் கவுண்டரையே கூப்பிடுங்க ஒரு பேச்சு கேட்டுட்டுப் பேசலாம்...''

பொன்னியப்பக் கவுண்டருக்கு கோபம் வந்தது.

''சின்னக்கவுண்டனெ என்னடா கேக்கறது... அவனுக்கு பொண்ணு பாத்துகிட்டு இருக்கற இந்த நேரத்துல ஊர்ல ஆர்ரா உன்னயெ இப்படிச் சொல்லச் சொல்லி தூண்டியுட்டது... நீ எமுட்டு பணம் வாங்குனே..''

''அபகீர்த்தியெல்லாம் சொமத்தாதீங்க எஜமான். புள்ளே பட்டத்தலச்சி ஆத்தா மேல சத்தியமா... சின்னக்கவுண்டர் பேரத்தாஞ் சொல்லுது...''

திண்ணையிலிருந்து அதிகாரத் தொனியில் குரல் வந்தது.

''புள்ள சத்தியம் பண்ணினா நீ நம்பிருவியா... இதுக்கு முன்னால உம்புள்ள எவங்கூட போனான்னு நாஞ்சொல்லட்டுமா...?''

''தப்பு நடந்ததுங்கறதுக்காக புள்ளமேல அபாண்டமா பழி சொமத்தாதீங்க...''

''அப்படி சொமத்துனா என்னடா பண்ணுவே...''

''ஊரைக்கூட்டி ஞாயம் கேப்பனுங்க''

''ஓகோ... அந்தளவுக்கு வந்திருச்சோ...''

கூட இருந்தவர்கள் திண்ணையிலிருந்து இறங்கினர். பழனிக்கு பொடரியில் அடி விழுந்தது. எட்டி உதைத்தனர். மேலும் சில அடிகள் விழுந்தன. யார் யாரோ அடித்தார்கள். வீதி வெளிச்சத்தில் வந்து பார்த்தான். சிராய்ப்புகளில் ரத்தம் வடிந்தது. குத்த வைத்து உட்கார்ந்தான். துண்டில் முகத்தை மூடிக் கொண்டு அழுதான். தொலைவில் நாய் ஊளையிட்டது. ஊர் அடங்கியிருந்தது.

விடிந்ததும் பொன்னியப்பக் கவுண்டர் ஆள் அனுப்பினார். பழனி போனதும் பணம் கொடுத்தார். பழனி பணத்தை வாங்காமல் திரும்பி வந்தான். செவ்வாய்க் கிழமை ஓசையப்பக் கிழவனின் வெள்ளாடுகளை சந்தைக்கு ஓட்டிப் போய் விற்றான். ராமாயி கன்னீம்மாவை பெரியாஸ்பத்திரிக்கு கூட்டிப்போனாள். நான்கு நாட்கள் கழித்து திரும்பி வந்தாள். ஊருக்குள் மெல்ல விசயம் பரவியது. கன்னீம்மா பேச்சு அடங்க அந்த வருடமெல்லாம் ஆயிற்று.

முன்பனிக்காலம். சாயந்தரமே குளிர் அடித்தது. பழனி மம்புட்டிக்கு புடிபோட மாணிக்க ஆசாரியிடம் போனான். விநாயகன் கோவிலை ஒட்டிய தென்புற ஆல மரத்தடியில் ஆசாரி பட்டறை இருந்தது. நான்கு ஆள் கட்டிபிடிக்க முடியாத பெரிய ஆலமரம் அது. மரத்தடியெங்கும் சிராய்களும் இளைத்த மரச்சுருள்களும் இறைந்து கிடந்தன. ஆசாரியின் சம்சாரம் துருத்தியை ஊதிக்கொண்டிருந்தாள். சதாகாலமும் துருத்தி ஊதுவது ஒன்றுதான் அவள் வேலை என பார்ப்பவர்களுக்குத் தோன்றும். எப்பொழுதும் ஆசாரியின் அகன்ற வயிறு புடைத்தேயிருக்கும். வெள்ளை முண்டாசுப் பனியன் அழுக்கேறியிருக்கும். ஆள் குள்ளமாக எழுந்து நிற்கும்போது கரும்பூதம் போலத் தெரிவார். பழனியிடம் புடியை வாங்கிச் செதுக்கத் துவங்கினார். மார்கழி மாசத்து 'கூலிகாரன் பொழுது' விரைசலாக விழுந்து கொண்டிருந்தது. பழனி புடிபோட்ட மம்புட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான். ஆசாரி பேசினார்:

''விசயந் தெரியுமாடா பழனி... சிவபாலக் கவுண்டனுக்கு கலியாணம் நிச்சயமாயிருக்கு... நூறு பவுனும் ஒரு காரும் சீதனமா தர்றாங்களாம் பொண்ணூட்டுல...''

ஆசாரியின் சம்சாரம் எழுந்து சேலையை உதறி கட்டியபடி சொன்னாள்:



படிப்பகம்

www.padippakam.com

''இங்கினா என்ன கொறச்சல்... நம்ம சுத்துவட்டாரத்திலேயே மெசால்ட்டியான குடும்பம் அவுங்களோடதுதானே...''

சிவபாலக் கவுண்டர் கல்யாணம் முடிந்த ராத்திரி ஊரில் மாதாரிக் குடும்பங்களுக்கு கல்யாணச் சாப்பாடு ஆக்கிப் போட்டனர். பழைய முறைமையை பொன்னியப்பக் கவுண்டர் விடாமல் செய்தார். வளவிலிருந்து கூட்டம் போசியைத் தூக்கியபடி போய்க்கொண்டிருந்தது. ராமாயி சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்தபடி யோசித்தாள். அடுப்படியில் கன்னீம்மா 'வறக்காபி' வைத்துக் கொண்டிருந்தாள். புகை பரவியது வீடு முழுவதும். கண்ணை எரித்தது. கன்னீம்மா ஊது குழலை ஊதிக்கொண்டேயிருந்தாள். தீபம் அணையப் போவதைப் பழனி பார்த்தபடி வெளியே திண்ணையில் உட்கார்ந்திருந்தான். சீமெண்ணை தீர்ந்து போயிருக்க வேண்டும் எனப்பட்டது பழனிக்கு. வீடெங்கும் ஆட்கொண்டிருந்த அசாத்தியமான நிசப்தத்தை கிழித்துக்கொண்டு அடுப்பிலிருந்த சட்டி காயத் துவங்கிய சப்தம் வந்தது.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்தபின் கன்னீம்மா சிரித்தே ராமாயி பார்க்கவில்லை. இந்த வாரந்தான் கன்னீம்மா தனியாக அழுவது நின்றிருந்தது. கன்னீம்மா இளைத்துக் கொண்டு வருவது ராமாயிக்கும் தெரிந்தது. வெள்ளைச்சிக் கிழவி அடிக்கடி புலம்பத் துவங்கினாள்.

''ஆனக்கூடாரமாட்ட இருந்த புள்ளே... இப்பிடி பூனக்கூடாரமாட்ட போயிட்டாளே...''

சில நாட்களாக வெள்ளைச்சிக் கிழவியின் புலம்பல் விடியும் வரை கூடத் தொடர்ந்தது. பழனி தூக்கத்தில் எழுந்து பீடி பற்ற வைத்துக் கொண்டேயிருந்தான். தீக்குச்சி வெளிச்சம் தறித்துப் போவதை ராமாயியும் பார்த்தபடி தான் இருந்தாள். இந்த சம்பவத்திற்குப் பின் ஓசையப்பக் கிழவன் யாரோடும் பேசுவதேயில்லை. சாப்பாடு கேட்பதற்குக் கூட வட்டிலை தட்டினான். சுந்திரன் மட்டுந்தான் எந்தக் கவலையுமில்லாமலே திரிந்தான். தற்போது அவன் பெரிய மனிதன் தோரணையில் வேட்டி கட்டிக் கொண்டான்.

வீட்டில் ஒருவர் முகம் பார்த்து ஒருவர் பேசுவதேயில்லை. இப்படியே எத்தனை பொழுதுதான் போகுமோ என பயமாக இருந்தது ராமாயிக்கு. திரும்பவும் வீதியைப் பார்த்தாள். சனங்கள் போசியோடு போய்க் கொண்டுதானிருந்தனர். பாட்டம்மா வீட்டின் முன் பெருத்த சண்டையாகக் கிடந்தது. வீட்டுக்காரனும் அவளும் தெலுங்கில் திட்டிக் கொண்டனர். பழனி எழுந்து உள்ளே வந்தான். போசி எடுத்து ராமாயி கையில் கொடுத்துச் சொன்னான்.

''தொட்டது தொன்னூறுக்கும் கவுண்டமாருகிட்டதானே போறோம். .. இப்ப மானரோசம் பாத்தா மாத்திரம் ஆகப்போகுதாக்கும். என்னைக்கும் கொழுத்தவனுக்குக் கொள்ளு எளச்சவனுக்கு எள்ளுன்னு செலவாந்திரம் சொல்லறது செரியாத்தா இருக்கு... நாமதா புரிஞ்சுக்கோணும்...''

**சுந்திரன் மட்டுந்தான் எந்தக் கவலையுமில்லாமலே திரிந்தான். தற்போது அவன் பெரிய மனிதன் தோரணையில் வேட்டி கட்டிக் கொண்டான்.**

ராமாயி எதுவும் பேசாமலேயே இருந்தாள். அழுகை வந்தது அவளுக்கு. சிறிது நேரத்திற்குப் பின் போசியை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். பழனி திண்ணையில் உட்கார்ந்து ராமாயி போவதைப் பார்த்துக்கொண்டே இருந்தான். காற்றின் சுழற்சியை உணர முடிந்தது. கன்னீம்மா இருந்திருந்தாற்போல் அழத் துவங்கினாள். கூட வெள்ளைச்சிக் கிழவி குரலெடுத்தாள். வீதியில் போன சனங்கள் நின்று கேட்டுவிட்டு நடந்தார்கள். யாருமே குடிக்காமல் 'வறக்காபி' ஆறிக்கொண்டிருந்தது.

மாதாரிச்சிகள் சோறு வாங்கிக் கொண்டு திரும்பி வரும்போது சிவபாலக் கவுண்டர் கல்யாணம் பற்றியே பேசிக் கொண்டு வந்தார்கள். பொண்ணூட்டுச் சனங்களின் பவிசைப்பற்றி ஒருத்தி சொன்னாள். மண்டபத்தில் காருக்கு ரோஜா பூவாய் ஜோடித்திருந்ததை கூட வந்த மண்டைய மாதாரி பெருமை அடித்தான். அவனுக்கு சிவபாலக் கவுண்டர் பண்ணையம் கட்டுவதில் தலைக்கனம் ஏறிவிட்டது. வளவுக்குள் மற்ற மாதாரிகளை மதிப்பதேயில்லை அவன். பெரிய எஜமானர் போல நடந்து கொண்டான். சைக்கிளில் தோரணையாகப் போய்வந்தான். முத்துசாமிக் கவுண்டர் அவன் பொண்டாட்டிக்கு அடிக்கடி சேலை எடுத்துக் கொடுத்த போது தான் அவனுக்கு மெல்லச் சந்தேகம் வந்தது. ஒருநாள் திடீரென்று அவன் குடும்பத்தோடு ஊரைவிட்டே போய்விட்டான். அதன்பின் அவன் போன ஊரையும் காரணத்தையும் குறித்து சனங்கள் பேச ஆரம்பித்தனர்.

கன்னீம்மாவைக் கட்டிக் கொள்ள யாருமே முன்வரவில்லை. நீண்ட நாட்களுக்குப்பின் தெற்குப் பக்கமிருந்து மாப்பிள்ளை வந்து கேட்டனர். பழனி பரிசம் போட நாள் குறித்தான். வெகு நாட்கள்



படிப்பகம்


www.padippakam.com

கழித்து ராமாயி சிரிப்பதை பழனி பார்த்தான்.

இரவெல்லாம் மழை பெய்தது. பொழுது கிளம்பியும் வானம் மோடம் போட்டிருந்தது. வெய்யில் சுள்ளென்று வந்ததும் ஆட்கள் பன்றியைத் துரத்த ஆரம்பித்தனர். பன்றி உறுமியபடி ஊரெல்லாம் சுற்றியது. வேலிப்புதரினூடே அலைந்தது. கவுண்டர் வளவுக்குள் ஓடியது. சனங்கள் வேடிக்கை பார்த்தனர். சந்துகளிலிருந்து ஆட்கள் வெளிப்பட்டனர். நாய்களும் துரத்தின. சிலர் கல்லை விட்டெறிந்தனர். ஆட்களுக்கு சலிப்புக் கண்டது. வழியில் போனவர்களும் துரத்தினர். பன்றியைப் பிடித்து வாயை தைக்கும்போது இளமதியம் ஆகிவிட்டது. சாயந்தரம் ராமாயியும் மற்ற பெண்களும் பன்றிக்கறியை வேக வைத்துக் கொண்டிருந்த போது மாப்பிள்ளை ஊர்க்காரர்கள் வந்தனர். பழனி எழுந்து போய் தெலுங்கில் வரவேற்றான்.

''ரெண்டன்ன... ரெண்டன்ன...''

மாப்பிள்ளை ஊர்க்காரனோடு பழனி வாசலில் உட்கார்ந்து பேச ஆரம்பித்தான். சுந்திரன் தூக்குப் போசியை வாங்கிக் கொண்டு கிளம்பினான். சாணார் வளவு வேலிப்புதரினூடே இருந்தது. மொத்தம் பத்து வீடுகளுக்குள் தானிருந்தன. எல்லாம் பனை ஓலை வேய்ந்த கூரை கொண்டது. வீட்டின் முன்பு பன்றிகள் ஊறத் தாழியில் தவிடு உறிஞ்சிக்கொண்டிருந்தன. அவினி கிழித்துக் கொண்டிருந்த சடைய மூப்பன் இவனை நிமிர்ந்து பார்த்தான். காய்ந்த நொங்குத் தொட்டிகள் சிதறிக் கிடந்தன எல்லா வாசல்களிலும். சாராயம் வாங்கிக் கொண்டு திரும்பி வரும் போது சடைய மூப்பன், மாப்பிள்ளைக்காரன் பற்றி விசாரித்தான். போசி தளும்பியது. வேலிப்புதரின்





படிப்பகம்

www.padippakam.com

நடுவில் சுண்ணாம்புச் சூளை யிருந்தது. அதன்மேல் உட்கார்ந் திருந்த பூனை இவனையே பார்த் துக் கொண்டிருந்தது. இவன் போசி யை கீழே வைத்து மூடியை நீக் கினான். போசியை லேசாகச் சாய்த்து சாராயத்தை மூடியில் ஊற்றினான். குடித்தான். மறு படியும் போசியை மூடி பழையபடி எடுத்துக் கொண்டு நடந்தான்.

எல்லோரும் இவனுக்காகவே காத்திருந்தது போல இவனைக் கண்டதும் சிரித்தனர். இவன் போசியை அவர்களுக்கு நடுவே வைத்தான். ராமாயி 'கிளாசு' கொண்டுவந்து கொடுத்தாள். பெண்கள் சிலரும் கூட மறைவாகப் போய் குடித்துவிட்டு வந்தனர். இவன் பார்த்துக்கொண்டேயிருந் தான். இவனுக்கும் போதை ஏறிக் கொண்டிருந்தது. சாராயம் காலி யானதும் திரும்பவும் போய் வாங்கி வந்தான். ஊர் பெருமை பேசி னார்கள் ஆளாளுக்கு. இலை போடப்பட்டது; கறி திங்கத்திங்க எந்தக் காரணமும் இல்லாமல் சண்டை மூண்டது. இலை மேலேயே அடித்துக் கொண்டனர்.

மாப்பிள்ளைக்காரனின் அய்யா வுக்கு ரொம்பவும் போதை ஏறி விட்டது. கூட்டத்தை கெட்ட வார்த் தையில் திட்டினார். பழனி தனியே கூட்டிப்போய் சமாதானப்படுத் தினான். அந்த ஊர்க்காரர் எல்லாம் தாங்கினர் அவரை. பரிசப்பணத்தை டவுசர் பாக்கெட்டிலிருந்து எடுத்து வீதியில் வீசினார். கீழே விழுந்தார். உளறிக் கொண்டேயிருந்தார், திரும்பத் திரும்ப.

''எவனும் என்னயெ ஒரு மயிரும் புடுங்க முடியாது...''

மாப்பிள்ளைக்காரன் மண்டி யிட்டபடி பணத்தைத் துலாவி னான். பூனாங்கால் விழுந்து கிடந்தது மாப்பிள்ளைக்காரனுக்கு. அவனுக்கும் போதை ஏறியிருந்தது.

பெண்கள் உள்ளே போய் தீபம் எடுத்து வந்தனர். கன்னீம்மா இதை யெல்லாம் உள்ளேயிருந்து பார்த்த படியே இருந்தாள். நேரம் போயிற்று.

ஒறம்பரை சனங்கள் ஆளுக்கு ஒரு பக்கம் விழுந்து கிடந்தனர். சுந்திரன் எழுந்து வெளியே வந் தான். எங்கும் இருள். ஆளின் முகம் ஆளுக்குத் தெரியாமலிருந்தது. வீதியில் யாரோ எதிர்ப்பட்டு போனார்கள். பாட்டம்மா வீட் டைக் கடக்கும்போது குசுகுசு வென்ற சப்தம் கேட்டது. குப்பக்கா வீட்டுப் பின்புற நடையில் ஏறி சுந்திரன் கதவைத் தட்டினான். உள்ளே தாழ் விலக்குவது கேட்டது.

விடிந்தபோது வீடு எப்பொழு தும் போலவே இருந்தது. முந்தின இரவு நடந்தது எதுவுமே ஞாபகம் இல்லாததுபோல் ஆளாளுக்கு நடந்து கொண்டனர். மழை- வெய் யில் வந்தது. கன்னீம்மாவை கட்டிக் கொடுத்த அடுத்த வருஷம் சுந்திரன் குப்பக்காவோடு ஊரைவிட்டே ஓடி விட்டான். ஊட்டியில் படுக முத லாளியின் எஸ்டேட்டில் கிழங்கு சுமப்பதாக ஒரு கடிதம் போட்டான் பழனிக்கு. குப்பக்காவுக்கு நீண்ட நாட்களுக்குப்பின் குழந்தை பிறந் திருப்பதாக யாரோ பார்த்து வந்த வர்கள் ராமாயியிடம் சொன் னார்கள். ஓசையப்பக் கிழவன் கிடை சேர்ந்துவிட்டான். வெள் ளைச்சிக் கிழவிக்கு காது சுத்தமாக கேட்பதில்லை. கண் மட்டுமே தெரிந்தது. பொக்க வாயை மென்ற படி வாசற்படியையே காத்துக் கிடந்தாள். உலக்கில் வெற்றிலை இடிப்பதை மட்டும் நிறுத்தவே யில்லை அவள்.

வருஷத்திற்கு வருஷம் மழை குறைந்துகொண்டே வந்தது. புதன் சுக்கிரன் ஏக ராசியில் சஞ்சரிக்கும் காலம் சுபிக்ஷ மழை வருஷிக்கும் எனவும் சுக்கில ஆண்டு ஆறு மரக்காள் மழைக்கு மேல் பெய்யும் என்றும் பஞ்சாங்கம் படித்துக் கொண்டிருந்த கிருஷ்ணசாமி ஜோதிடர் ஊரை விட்டுக் கிளம் பினார். அவர் மனைவி குழந் தையை இடுக்கியபடி பின்னே போனாள். மொட்டை வண்டியில் சாமான்கள் போயிற்று.

தோட்டங்கள் அழிந்து தன் முகப்புகளை இழந்தன. தென்னை மரங்கள் குருத்துச் சாய்ந்தன. பனைகள் தோகை தொங்கிப்போய் நின்றன.

ஊரை மெல்லப் பஞ்சம் சூழ்ந் தது. குடிதண்ணிக்குப் பெரிய பாடாக இருந்தது. சேந்துக் கிணற் றில் தண்ணி அடி ஆழத்தில் கிடந் தது. சாமத்தில் எழுந்து குடத்தை எடுத்துக்கொண்டு போனாள் ராமாயி. வளர்பிறை காலத்து நிலா விழுந்து வெகுநேரமாகிவிட்டது. ஏற்கெனவே யாரோ சேந்திக்கொண் டிருந்தார்கள். வாளி சுவற்றில் அடிக் கும் சப்தம் கேட்டது. தண்ணியை துணியில் வேடுகட்டி வடித்தனர். திரும்பிவிட்டாள்.

வீதியில் வேறு ஒரு பெண் குடத் தோடு கிழக்கே போவது இருட்டில் தெரிந்தது. அவள் எங்கே போகி றாள் எனத் தெரியவில்லை. அவள் பின்னால் போய் பார்ப்போமா என எண்ணினாள் ராமாயி. பட்டத் தலைச்சி ஆத்தா கோவில் திண்ணை யில் படுத்திருந்த ஒருவன் எழுந்து உட்கார்ந்தான். பீடிபற்ற வைத் தான். செருமியபடி ராமாயி போவ தையே பார்த்தபடி இருந்தான். கீழே தரையில் நாய் ஒன்று மண்ணைப் பிறாண்டிக் கொண்டிருந்தது. அந்த அகால வேளையில் ஆடிக்காற்று விசை கொண்டு அடித்தது.

பருவம் தப்பிப் போயிற்று. புரட்டாசிக்குப் பின்னும் மழை பெய்யவில்லை.. முந்தின வெகு தானிய வருஷப் பஞ்சத்தைப் பற்றி வெள்ளைச்சிக் கிழவியிடம் சனங் கள் கேட்டனர். அந்தக் காலத்தில்



படிப்பகம்

www.padippakam.com

சனங்கள் பசி பொறுக்க முடியாமல் நிலையாவரையைத். தேடி காடுகளில் அலைந்தனர். நிலையாவரை வேரை ஆட்டி ரொட்டி சுட்டுத் தின்றனர். பசி பிடித்த குழந்தைகள் இரவெல்லாம் அழுதன. நாய்கள் நல்ல நிழல் தேடித் திரிந்தன. வேம்பு கூட பொசுங்கிவிட்டது. பனைக்கு அந்த வருஷம் தான் முதல் அழிவு வந்தது. பனைக்குருத்துக்குச் சனங்கள் அடித்துக் கொண்டனர். பிரமாதி வருஷம் முடிந்த பின்தான் கொக்குகள் திரும்பின.

பகலெல்லாம் வெய்யில் ஊரையே ஆட்கொள்கின்றன. இரவிலும் அதன் சூடு வெளியேறாமல் தங்கிவிடுகிறது. உப்புசம் தாங்க முடியவில்லை. ஐப்பசியில் நட்சத்திரங்களை எல்லா நாட்களிலும் பார்க்க முடிந்தது. முத்துசாமிக் கவுண்டர் முன்னிலையில் மழை சோறு எடுத்தனர். கொடும்பாவி கட்டி இழுத்தனர். மழை பெய்வதாகவேயில்லை. கனத்து இறங்கிய முகில்கள் கூட தூறலோடு போயிற்று.

சேமலையப்பக் கவுண்டர் கொறங்காட்டு கல்கட்டோரம் எவரோ கொண்டுவந்து மூக்கரைப் புள்ளையாரைப் போட்டுப் போயிருந்தனர். ஊருக்குள் தகவல் வந்ததும் முத்துசாமிக் கவுண்டர் ஆட்களோடு மொட்டை வண்டியைப் பூட்டினார். மூக்கரைப் புள்ளையாரை ஏற்றிப்போன மொட்டை வண்டியை ஊரே வழியனுப்பியது. ஊதியூர் மலைக் கரட்டில் கொண்டுபோய் மூக்கரைப் புள்ளையாரை குடைதூக்கி விட்டுவிட்டு ஆட்கள் வண்டியை திருப்பி ஓட்டிவந்தனர் சாமத்தில். அதன்பின்னும் மழை வரவில்லை.

உப்பாற்றுக் கரைவெளி தரிசாயிற்று. சனங்கள் அறுப்புக்கு போவது நின்று போனது. பழைய மாதாரி வளவு இருந்த இடத்தில்

**மழைசோறு எடுத்தனர். கொடும்பாவி கட்டி இழுத்தனர். மழை பெய்வதாகவேயில்லை. கனத்து இறங்கிய முகில்கள் கூட தூறலோடு போயிற்று.**

முத்துசாமிக் கவுண்டர் தேங்காய்க் களம் போட்டார். கவுண்டிச்சிமார்களே தேங்காய் எடுக்க வந்துவிட்டனர். பின் மதியங்களில் சனங்களற்ற சாணார் வளவின் கூரையை சூறைக்காற்று பிய்த்து எடுத்துப் போனது. பறையர்கள் கிருஷ்த்துவத்திற்கு மாறிவிட்டனர். வெள்ளை அங்கி போட்ட பாதிரிகள் இரவெல்லாம் பிரசங்கம் செய்து கொண்டிருந்தனர். பஞ்சத்திற்கு கோதுமை கிடைத்தது பறையர்களுக்கு.

ஓசையப்பக் கிழவன் இன்றோ, நாளையோ என இழுத்துக் கொண்டு கிடந்தான். சதாகாலமும் பள்ளிக்கூடத்து சத்துணவுச் சோற்றை கிழவனுக்கு ஊற்றிக் கொண்டிருந்த வெள்ளைச்சிக் கிழவி இன்றைக்கு ஏனோ பிறமுத்தி பிடித்தவள் போல உட்கார்ந்திருந்தாள். இவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்த ஆண்டவன் மேல் கோபப்பட்டான் பழனி. பகல் முழுதும் வீட்டிலேயே கிடந்தான். ஒரு நிலையில் பசி நிரந்தரமாக அடங்கிப் போய்விட்டது. காசு கிடைத்த போதெல்லாம் குடித்தான். ராமாயியை தினந்தோறும் போட்டு அடித்தான். ராமாயிக்கும் அடி பழகிவிட்டது போல் பழனி நடையில் நுழையும் போதே எதிர்கொண்டு ஏசத் துவங்கினாள்.

ஊர் அடங்கிவிட்டது. நடைமேல் இருந்த தீபங்கள் எல்லாம் வீட்டுக்குள் போய்விட்டன. ராமாயி நடையைத் திறந்தே வைத்துப் படுத்திருந்தாள். மஞ்சள் கலந்த வெளிச்சத்தில் அவள் நிழல் சுவரில் விஸ்வரூபம் எடுத்திருந்தது. பழனிக் கவுண்டர் வளவில் எரியும் வீதி லைட்டையே பார்த்தபடி இருந்தான். நீண்ட காலத்துக்குப் பின் சாமக் கோடாங்கி சப்தமிட்டுக் கொண்டு வந்தான். குடுகுடுப்பைச் சப்தங்கண்டு நாய்கள் அவன் பின்னே குரைத்தபடி வந்தன. வீட்டுப்பக்கம் வந்ததும் கோடாங்கி நின்று ஏதோ பேசினான். பழனி துப்பட்டியில் மூடி படுத்துக் கொண்டான். விடிவதற்கு முன்பே வெள்ளைச்சிக் கிழவி வந்து எழுப்பினாள். பாட்டம்மா வீட்டுக் காரனோடு சேர்ந்து கிழவனை நடு வீட்டுக்கு தூக்கிக்கொண்டு வந்து போட்டான் பழனி. விளைந்த உடம்பு ஊதிக்கிடந்தது. கொசு அரித்துக் கொண்டிருந்தது. பொழுது கிளம்பியது.

பழனி, கவுண்டர் வளவில் இறங்கி நடந்தான். சனநடமாட்டம் குறைந்த வீதியில் காற்று எதிரொலித்துப் போயிற்று. ஊர்ப் புழுதி சுழன்று மேலே போனது. வடக்கு வளவில் சனங்கள் அற்றுப் போய்விட்டனர். எல்லாரும் சொல்லி வைத்ததுபோல ஒருசேர காலி செய்து விட்டிருந்தனர். இன்னும் வீடுகள் முன்பிருந்த சாயலிலிருந்து மாறாமலேயிருந்தன. வீட்டுக்கு வெளியில் பெரிய கல்செக்கும், உயரமான உரலும் அப்படியே கிடக்கின்றன. அதன் குழிகளில் காற்று கொழிமணலை நிறைத்துக் கொண்டிருந்தது. வாசலின் இட மூலையிலிருந்த வேலா மரங்களுக்கு பொந்து விழுந்து விட்டது. வீட்டின் முன்பு வேலா மரங்கள் இருப்பது குடும்பத்திற்கு ரொம்ப



படிப்பகம்

www.padippakam.com

வும் நல்லது என கிழவர்கள் கூறு வந்த நினைக்கையில் பழனிக்குச் சிரிப்பு வந்தது.

கிழக்குப் பார்த்த வீடுகளில் திண்ணை சூடேறியிருந்தது. முன்பு திண்ணைக்கு காரை போட்ட கொத்தன் மையத்தில் கரண்டியால் வரைந்த 'பஞ்சாங்கர கட்டம்' சிதையாமலேயே இருந்தது. ஆளற்ற திண்ணைகளெங்கும் பட்சிகளின் எச்சம் கிடந்தது.

வடக்கு வளவு முடியுமிடத்தில் பொன்னியப்பக் கவுண்டர் வீடு இருந்தது. வீடு இன்னும் பொலிவோடவே இருப்பதாகப்பட்டது. பொன்னியப்பக் கவுண்டர் வெளியே வந்ததும் காலில் விழுந் தான் பழனி. நீண்டு அழத் துவங் கினான். பொன்னியப்பக் கவுண்டர் பணம் கொடுத்தார். பெரிய கவுண் டிச்சி நடைக்கு வெளியே எட்டிப்ப ார்த்துச் சொன்னாள்.

''என்னைக்கும் எருமெமேல ஏறினா சவ்வாரி... எஜமாங்க மேலே ஏறினா ஒப்பாரி... இனி மேலாவது நீங்க புரிஞ்சு நடந் துக்குங்கடா...''

பழனி திரும்பி வரும்போது வடக்கு வளவில் சிட்டுக்குருவிகள் பெருகியிருப்பதைக் கண்டான். தட்டோட்டு முகட்டில் குமுக்கு குமுக்காக சிட்டுக் குருவிகள் பறப்பதும் உட்காருவதுமாக இருந் தன. கீரலான சப்தம் எழுப்பின. இளம் மதியத்திலேயே காராட்டுப் பூனைகள் தட்டழிந்து கொண் டிருந்தன வீதியெங்கும். காகங்கள் இடம் மாறிப் போயிருந்தன. கூரைமேல் சோறு வைத்ததும் எடுக்க எந்தக் காகமும் வரவில்லை. வெகுநேரம் போனபின் கொட்டு முழக்கு அடித்தவர்கள் முதலில் போய் பந்தியில் உட்கார்ந்தனர். அவர்களைத் தொடர்ந்து சனங் களும் போய் உட்காரத் துவங்கினர்.

கன்னீம்மா கருமாதிக்குக் கூட வரவில்லை. கிழவன் சாகும்வரை ''கன்னீம்மாவந்தாளா... கன்னீம்மா வந்தாளா...'' எனக் கேட்டுக் கொண்டிருந்தது ஞாபகம் வந்தது பழனிக்கு. கன்னீம்மா மேல் அளவுகடந்த பிரியமிருந்தது கிழவ னுக்கு. சுந்திரனும் குப்பக்காவும் வந்ததும் திரும்பிவிட்டனர். குப் பக்கா இளமை . வந்துவிட்டது போல் நடந்து கொள்கிறாள் என இழவு வீட்டில் பெண்கள் பேசிச் சிரித்தனர்.

வெள்ளைச்சிக் கிழவி செத்த வருஷம் கவுண்டமார்கள் சிலர் தோட்டத்தில் போர் ஓட்டினார்கள். நானூறு அடி, ஐந்நூறு அடி என தண்ணி சுமாராகத்தான் பொத்தது. அதன்பின் தோட்டம் எங்கும் கம்ப்ரசர் ஓடும் சப்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது, இரவும்

**"என்னைக்கும் எருமெமேல ஏறினா சவ்வாரி... எஜமாங்க மேலே ஏறினா ஒப்பாரி... இனிமேலாவது நீங்க புரிஞ்சு நடந் துக்குங்கடா..."**

பகலும். காட்டுவெளியெங்கும் உக்கிரம் தணியாமல் தகித்தது. கோடைகாலம் எல்லாப் பக்க மிருந்தும் தன் குரூரத்தை வெளிக் காட்டியது. மாதாரிகள் சிலர் டவுனுக்கு வேலைக்குப் போயினர். ஹாலோ பிளாக் கம்பெனியில் கல்லறுக்கும் வேலை கிடைத்தது. பழனியினால் முடியவில்லை.

தற்போது மாதாரிப் பெண் களுக்கு கவுண்டர் வளவு அடி பைப் ஒன்றுதான் தண்ணிக்கு வழியாக இருந்தது. ராமாயி அடி பைப்பில் வெகுநேரம் நின்று கொண்டி ருந்தாள். பொழுது கிளம்பி மேலேறிக் கொண்டிருந்தது. வேறு சில பெண்களும் வந்து கொண் டிருந்தனர். முத்துசாமிக் கவுண்டர் வீட்டு ஆத்தா சாவகாசமாக இறங்கி வந்தார். சப்தமிட்டார்.

''இந்த முண்டிகளுக்கு தண்ணி புடிச்சு ஊத்தி ஊத்தியே நாங்கீழ் வரம் போயிருவேனாட்ட மிருக்கு...''

ராமாயி கண்ணீர் கோர்த்ததை அடக்கிக் கொண்டு ஆத்தாளைப் பார்த்து சிரிக்க முயன்றாள். அன்று இரவு வீதியில் வந்து தினமும் அடித்துக்கொள்ளும் பாட்டம் மாவும் வீட்டுக்காரனும் ஊரை விட்டே போனார்கள். வீட்டைக் கடக்கும்போது ராமாயியை திரும் பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனார்கள். பட்டத்தலைச்சி ஆத்தாகோவில் முன்பு பழனி வந்து கொண்டிருந்தான். ராமாயி சண் டைக்குத் தயாராகி வெளியே வந்து நின்றாள்.

பாட்டம்மா நாய் வீடு முட்டத் துவங்கியது. மசை பிடித்த பின் அதை அடித்து ஆட்கள் வீதியில் இழுத்துப் போனபோது கன்னீம்மா புருஷனைப் பிரிந்து எதிரில் வந்து கொண்டிருந்தாள்.

அர்த்தசாமத்தில் வந்து ஆட்கள் பழனியை எழுப்பினார்கள். பழனி ஆட்களிடம் பேசிவிட்டு வீட்டுக் குள்போனான். பழைய வெள்ளைத் துணியையும், வெள்ளிப் பூன் போட்ட கோலையும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். ஆட்கள் எதிர்த்த வீட்டில் தட்டிக் கொண்டிருந்தனர். பின்னால் வேறுசில மாதாரிகளும் பேசியபடி நடந்து வந்தார்கள். உலைக்கால் மீன் உச்சியிலிருந்தது.

பொன்னியப்பக் கவுண்டர் வீட்டுக்குப் போனபோது ஒப்பாரிச்



படிப்பகம்

www.padippakam.com

சப்தம் துவங்கியிருந்தது. ஊரைக் கடந்த பின்னும் அந்தச் சப்தம் கூட வருவது போலவே இருந்தது பழனிக்கு. ஆற்றின் மீதேறி மறு கரை போனான். அந்தப் பக்கத்து ஊர்களின் வீதியெங்கும் அந்த அகால வேளையில் சப்தமிட்டுத் திரிந்தான்.

''எழவு சேதீங்க.... சாமியோவ்....''

சப்தம் கேட்டு நடையை நீக்கிய வர்கள் சேதி கேட்டதும் திடுக் கிட்டனர். வெளியேறி வரும்போது அந்த ஊர்களின் முதுகுப்புறத் தையெல்லாம் பார்த்தான். இருளில் ஊர் வேறு ரூபம் கொண்டுவிடு கிறது. பூமிக்குள் இறங்கிவிட்டது போல வீடுகள் தோன்றுகின்றன. சனங்களைப் பற்றிய நினைப்பே வருவதில்லை. சாமிகளையும், பேய்களையும், பிசாசுகளையும், பூதங்களையும்; பாம்புகளையும் பற்றிய நினைப்பே எழுகிறது. எவ்வளவு தைரியசாலியாக இருந் தாலும் பயம் குறுகுறுக்கச் செய் கிறது.

குறுட்டாந்தை அலறுவது ஊர் வெளி முழுதும் ஒற்றிப்பட்ர்கிறது. விட்டுவிட்டு அதன் சப்தம் உராய் வது போல இருக்கிறது. முதன் முறையாக இழவுச் சேதி சொல்லப் போனபோது இதே மாதிரியான இரவுதான். ஆனால் மங்கலான நிலா வெளிச்சம் இருந்தது. எருக் களஞ்செடி காற்றுக்கு அசைவதை கவுண்டர் என நினைத்து கும்பிட் டான். வீட்டுக்கு வந்ததும் வெள் ளைச்சிக் கிழவியிடம் சொன்னான். சிரித்தாள் அவள். இன்றும் எருக்கு, ஆளின் உருபோலவே அசைந்தது.

வெய்யில் ஏறிக் கொண்டிருந் தது.சிவபாலக் கவுண்டரை நினைத் துக்கொண்டு நடந்தான். செங்காட் டுருக்குச் செல்லும் பாதை சுருங்கிக் கொண்டே வந்தது. இருபுறமும் வேலிப்புதர்கள் மூடியிருந்தன. யாரோ அப்பொழுதுதான் செம் மறியாடு ஓட்டிப் போயிருந்தார்கள். ஆட்டுக்காரனின் செருப்புத் தாரை கூடவே வந்தது. பச்சைப் புழுக் கைகள் குத்து குத்தாய் கிடந்தன. கிளுவை வேலிக்குள் காட்டுக் கோழிகள் கெக்கலித்தபடி போயின. தொலைவில் கிணற்றுப் புறா அணத்தியது.

பழனி தவச மூட்டையை அடுத்த தோளுக்கு மாற்றிக் கொண்டு நடந்தான். புழுதி முழங் கால் வரை அடித்திருந்தது. ஊருக் குள் போனபோது நாய்கள் மறித்துக்கொண்டு குரைத்தன. கோடாங்கிகளையும், இழவு சேதிக் காரனையும் கண்டால் நாய்கள் குரைக்காமலேயே இருந்ததில்லை எந்த ஊரிலும். மதியத்தில் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. குடியான வர்கள் தோட்டங்களுக்குப் போயி ருந்தனர். முதலில் மேற்கு வளவுக்கு போனான். வாசலில் தைபோக சோளம் காய்ந்து கொண்டிருந்தது. வீட்டின் உட்புறம் பார்த்து குரல் கொடுத்தான்.

''சாமீ... எழவு சேதீங்க...''

''எந்தூரப்பா...?''

''ஊர்லயுங்க... மாப்பிள்ளை எஜமாங்க... அதுதாங்க... வாவிக் கரைத் தோட்டத்து சின்ன எஜமாங்க போயிட்டாங்க சாமியோவ்...''

பெண்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பின் கேட்டனர்.

''எப்பிடி... திடீர்ன்னு...''

''மருந்தெ குடிச்சுட்டுதா பேசிக் கிறாங்க...''

முறத்தில் தவசம் கொண்டு வந்து போட்டனர். பழனி துணி முடிச்சை அவிழ்த்து தவசத்தை வாங்கிக் கொண்டான். பின் பம்மியபடி கேட்டான்.

''ஆத்தா புண்ணியத்துல... பழசு பட்டற ஏதாச்சும் குடுத்தீங் கன்னா...''

பெண்கள் வீட்டுக்குள் போய் பழைய துணி எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார்கள். சிலர் இல்லை என்று கூறிவிட்டார்கள். அவர்களின் பஞ்சப்பாட்டை பாட ஆரம்பித்துவிட்டார்கள். மழை பொய்த்துப் போனதும், காடு விளையாமல் போனதும் பேச்சில் அடிபட்டது. நாவிதர்கள் கல்யா ணப் பத்திரிகை, மாவுப் பலகாரம் கொண்டு வரும்போது மட்டும் நன்றாகக் கவனிப்பார்கள். நாவி தர்களைக் கண்டு கவுண்டர்களுக்கு எப்பொழுதும் ஒரு பயம் இருந்தது. சக்கிலியன் என்றால் எதிலும் இளக் காரம் தான். வெய்யில் ஏறி அடித்தது.

பழனி திரும்பி வரும் வழியில் நல்லி மடத்துக்குச் சொல்லப் போனான். ஆதியில் கைக்கோளர் கள் நிறைந்த ஊர் அது. கைக்கோ ளர்கள் காலி செய்துவிட்டுப் போயி ருந்த வீடுகள் குட்டிச் சுவராய்க் கிடந்தன. காரை பெயர்ந்த தரை களில் குசுவேலா மரங்கள் முளைத் திருந்தன. இடிந்த மதிற்சுவரில் அழுக்குவண்ணான்குருவிகள் உட் கார்ந்திருந்தன. முன்பு ஊருக்குள் நுழையும் போதே தறி நெய்யும் சப்தம் எதிர்கொண்டு கேட்கும். எல்லாத் திக்கிலிருந்தும் வரும். கைக்கோளப் பெண்கள் திண் ணையில் தார் சுத்திக் கொண்டிருப் பார்கள் சதாகாலமும்.

தற்போது ஊரில் கவுண்டர் வளவுதான் பாக்கி இருந்தது. வண்ணான் நாவிதர்கள் கூட காலி செய்து போய்விட்டனர். சாமியார் ஐயன் வளவில் பொன்னியப்பக் கவுண்டருக்குச் சொந்தம் இருந்தது. சாமியார் ஐயன் வளவில் ஆறு வீடு கள் இருந்தன. எல்லாம் உட்புறம் பெரிய தொட்டிகட்டு வீடுகள் கொண்டது. அந்த வீட்டு மரு மகள்கள் எல்லாரும் பட்டக்காரர் வீட்டுப் பெண்கள். நீலியம்மன்



படிப்பகம்

www.padippakam.com

கோவில் சாட்டன்று சவ்வாரி வண்டியில் வந்து இறங்குவார்கள். பாதம் பளபளக்கும். வெள்ளிக் கொலுசு மினுமினுக்கும். பண்டாரம் வெளியே வந்து பொங்கப் பானையை வாங்கிக் கொள்வான். அவன் துண்டு இடுப்பில் இருக்கும். மற்றவர்கள் சம்பிரதாயமாக கையெடுப்பார்கள். பிரகாரங்களில் நடக்கும்போது ஆண்கள் பின்னே போவார்கள் பேசியபடி.

பழனி வாசல்பக்கம் வந்தான். சேவேரிய வேம்பு இன்னும் வாது பிரிந்து போயிருந்தது மேலே. முன்பு மரம் பூவெடுத்த கோடை காலங்களில் சதாகாலமும் ஆண்கள் கட்டில் போட்டு நிழலில் உட்கார்ந்திருப்பார்கள். பேசிக் கொண்டிருக்கும் சப்தம் வீதிக்குக் கேட்கும். குயில் விட்டுவிட்டுக் கூவும் வாதுகளுக்குள். இரவு ஊர் ஞாயமெல்லாம் அங்குதான் நடக்கும். எல்லா வீட்டுத் திண்ணைகளிலும் தீர்ப்புக்கு பணியும் சனங்களின் முகமாய்த் தெரியும். குப்பக்காவும் அவள் வீட்டுக்காரனும் கூட இந்த வளவுக்கு வந்துதான் உறவு முறித்துக் கொண்டு வந்தார்கள். தோட்டத்தில் சாமியார் ஐயனைப் புதைத்ததிலிருந்து இந்த வளவு விளங்காமல் போய்விட்டதாகப் பேசிக் கொண்டார்கள். வேம்பில் குயிலுக்குப் பதிலாகக் காக்கை கூடு கட்டியிருந்தது. ஊரைவிட்டு வெளியே வந்தபோது பார்த்தான் பழனி. தலைவாசலை ஒட்டி விரிந்த தரிசில் இன்னும் பாவடிகல் வரிசை வரிசையாக நின்றுகொண்டிருந்தன. தேயாமலும், காலத்தால் விழாமலும் அப்படியே இருந்தன.

பொழுது இறங்கிக் கொண்டிருந்தது. பசி வாட்டி எடுத்தது பழனிக்கு. நடக்க திராணியற்றுப்போய் கால்கள் பின்னின. தாகமெடுத்தது. இன்னும் கோவில்பாளையம் பாக்கி இருந்தது.

இழவு வீட்டிற்கு வந்தபோது சிவபாலக் கவுண்டரை எடுப்பதற்கான ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. பந்தலுக்கடியில் நாற்காலி மேல் சவத்தை உட்கார்த்தி வைத்து குளிப்பாட்டிக் கொண்டிருந்தனர். சீர் நடந்து கொண்டிருந்தது.

திடீரென வீதியிலிருந்து ஒப்பாரிச் சப்தம் வந்தது. வேலைக் காட்டிலிருந்து திரும்பிய மாதாரிச்சிகள் பொன்னியப்பக் கவுண்டரின் கால்களை கட்டிக்கொண்டு அழுதனர். பந்தலுக்கு முன்பு ஒப்பாரி வைத்தனர். சின்ன எஜமானின் அருமை பெருமைகளை பாட்டில்



**திடீரென வீதியிலிருந்து ஒப்பாரிச் சப்தம் வந்தது. வேலைக்காட்டிலிருந்து திரும்பிய மாதாரிச்சிகள் பொன்னியப்பக் கவுண்டரின் கால்களை கட்டிக் கொண்டு அழுதனர்.**

கொண்டுவந்து அழுதனர். பழனி வீதிக்கு வந்தான். யாரோ யாரோடவோ பேசிக் கொண்டிருந்தனர்.

''தாராபுரத்துல பைனான்ஸ் எல்லாம் முடிஞ்சுபோச்சு... இவனும் மஞ்சகாயிதம் வாங்கறளவுக்கு நொடிச்சுப் போயிட்டா... அப்புறம் வள்ளுவருசலெ உட்டுட்டு இப்பிடிப் பண்ணுவான்னு ஆரு கண்டா... இனிக் குடும்பம் தெப்புத் தேற ரெண்டு தலெக்கெட்டாகுமுல்ல....''

மறுதினம் கைநீட்டிக் கொண்டிருந்த பொன்னியப்பக் கவுண்டரைப் பார்க்கப் பாவமாக இருந்தது பழனிக்குக்கூட. மீசை சிரைத்த- மொட்டையடித்த அவர் தோற்றம் வேறுவிதம் கொண்டிருந்தது. இரவு வெகுநேரமாகித்தான் மாதாரிகளுக்கு இழவுச் சோறு போட்டனர். சோறுகூட நிஜமாகவே சாங்கிதத்துக்குப் போடுவது போலவே இருந்தது. பழனி சோத்துப் போசியோடு வீட்டுக்குத் திரும்பும்போது அடிவானம் மின்னுவதைப் பார்த்தான்.

ராமாயி வீட்டுக்குள் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். குரல் ராகமிழைந்து வெளியே வந்தது. அவள் யாருக்காக அழுகிறாள் என்றே தெரியவில்லை. எல்லா இரவுகளிலும் தவறாமல் ஒப்பாரி வைத்தாள். ஒப்பாரி ஒன்றே துணை என்பது போல் ஒப்பாரி வைத்தாள். பழனியைக் கண்டதும் ஒப்பாரியை நிறுத்திவிட்டு எழுந்து வெளியே வந்தாள். சோத்துப் போசியை வாங்கிக் கொண்டு உள்ளேபோய் மறுபடியும் ஒப்பாரியைத் துவங்கினாள். இந்தமுறை குரல் பாதாளத்துக்குள்ளிருந்து வருவது போல் இருந்தது. பழனி திண்ணையில் படுத்துக்கொண்டு யோசித்தபடி இருந்தான். மீன் ஒன்று எரிந்து விழுந்தது.

சாமத்தில் வந்து ராமாயி பழனியை எழுப்பி உள்ளே கூட்டிப் போனாள். வட்டிலில் இழவுச் சோறு போட்டு வைத்திருந்தாள். பழனி எதுவும் பேசாமல் உட்கார்ந்து சாப்பிடத் துவங்கினான். 'அவுக் அவுக்' என அவன் மெல்லும் சப்தம் கேட்டது. ■



படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# முக்குளித்தான்

தஞ்சை ப்ரகாஷ்


தன்னைப் பற்றி எதுவுமே சொல்லிக் கொள்ள விரும்பாத எழுத்துக் கலைஞன் ந.பிச்சமூர்த்தி என்பதில் பலருக்கு கருத்து வேறுபாடு இருக்கலாம். உண்மையிலேயே அவர் வாழ்ந்த கலைஞர். கவிஞராக அவர் வாழ்ந்த நாட்கள் அதிகம். பலருக்கு அவர் ஒரு சிறந்த சிறுகதை ஆசிரியராகத் தான் அறிமுகம். பலர் அவரைக் கவிஞராக மட்டுமே அறிவார்கள். அவர் ஒரு நாவலாசிரியர் என்றால் பலருக்குத் தெரியாது. அவர் உருவங்களை மீறிப் பறந்த வானம்பாடி.

பிச்சமூர்த்திக்குப் பறவைகளென்றால் பைத்தியம். பறவைகளை வைத்து ஒரு காவியமே எழுதியிருக்கிறார். 'மகாகவிகள்' என்ற தலைப்பில் அது வெளிவந்தது. புதுக்கவிதைத் துறையில் பல காவியங்களை அவர் எழுதினார். என்றாலும் அவைகள் புழக்கத்துக்கு அறுபதுக்குப் பின்னால்தான் வந்தன. புதுக்கவிதைத் துறை பிச்சமூர்த்தியில் இருந்துதான் துவங்குகிறது என்று விமர்சகர்கள் சொல்வதில் அர்த்தமிருக்கிறது. அவர் தொகுதிதான் தமிழின் முதல் புதுக்கவிதைத் தொகுப்பாக வெளிவந்தது என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

1930கள் வாக்கிலேயே கு.ப.ராஜகோபாலனும் பிச்சமூர்த்தியும் புதுக்கவிதை என்கிற நம்பிக்கையை தமிழில் முதன்முதலில் செயல்படுத்தினர். அப்போது எழுந்த எதிர்ப்புகள் இன்றும் கூட தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. ஆனாலும் புதுக்கவிதை அதனுடைய அடுத்தகட்ட வளர்ச்சிக்கு ஏற்றதாக பக்குவப்படுத்தும் படைப்புகளை பிச்சமூர்த்தி தமது அறுபது வயதுக்கு மேல் தொடர்ச்சியாக மறையும் வரை இளைஞர்களோடு இளைஞர்களாய் படைத்துக் கொண்டிருந்தார். அதே நேரத்தில் அவர் புதிய முயற்சிகளையும் செய்வதில் பின்வாங்கவில்லை.

சிறுகதைகள் என்ற துறை தமிழில் செழித்தபோது மிக முக்கியப் பங்காற்றியவர் பிச்சமூர்த்தி. ஆனால் சிறுகதைகளையும் 'உடைத்து' வளர்ப்பதில் தமிழில் இன்றும் அவர் முதல்வராகவே இருக்கிறார் என்பது பலர் அறியாத உண்மை. மரபுகளை கவிதையில் மட்டுந்தான் 'உடைத்து' மீறுவது என்றில்லாமல் புதிய சோதனைகளை பிச்சமூர்த்தியைப் போல் சிறுகதைத் துறையிலும் செய்தவர் ஓரிருவரே ஆவர்.

புதுமைப்பித்தன், க.நா.சுப்ரமணியம், எம்.வி.வெங்கட்ராமன், கு.ப.ராஜகோபாலன் ஆகிய இந்நால்வரும் உருவம், உத்தி, உள்ளடக்கம் என்று புதிய சோதனைகளைத் தமிழ்ச் சிறுகதைகளில் செய்தார்கள். ஆனால் சிறுகதைக்கும் வெளியில் வந்து கட்டுரை இலக்கியம் என்ற





படிப்பகம்

www.padippakam.com

இலக்கியத் துறையையும் ஒடித்து வ்ளைத்து 'Skit' என்கிற கேலி கிண்டல்களையும் புறந்தள்ளி உருவம் சிதறாமல் புதிய உருவம் ஒன்றை தமிழ் இலக்கியத்திற்கு பிச்சமூர்த்தியால் மட்டுமே தர முடிந்தது என்பதை இதுவரை தமிழில் விமர்சகர்கள் யாரும் அண்டவில்லை என்பதை சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

இந்த இலக்கியப் புதுமை முயற்சி மணிக்கொடியில், கலா மோகினியில், கிராம ஊழியனில், சிவாஜியில் வெளிவந்தது. இம் முயற்சியை தமது எழுபதாவது வயதிலும் கூட பிச்சமூர்த்தி செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு அவர் 'மனநிழல்' என்று தலைப்பிட்டார். இந்தப் படைப்பு கள் கவிதையுமல்ல; கட்டுரையு மல்ல; சிறுகதையுமல்ல. இப்படி ஆய்ந்து பார்த்து பரிசிலிப்பதற்கு விமர்சகர்கள் முன்வரவில்லை.

தமிழில் இலக்கிய மறுமலர்ச்சி யின் பிதாவாகிய வ.ரா. என்னும் திருப்பழனம் ராமசாமி அய்யங்கார் தமிழில் முதலில் 'நடைச் சித்திரங்கள்' என்ற இலக்கிய வடிவத்தை தினமணியில் சாதித்து தமிழ் உரைநடையில் இன்றுவரை தனித்து நிற்கத் தக்க படைப்பு களாய் வெற்றி பெறச் செய்தார். பிச்சமூர்த்தியின் 'மனநிழல்' என்ற இலக்கிய உருவம் நடைச்சித்தி ரத்தையும் மீறியது என்றாலும் இது இன்னமும் போதிய பார்வை பெறாமலிருப்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

'வானத்தின் மேகம் போல' மனநிழல் உருவமில்லாத உருவம் பெற்ற படைப்புகள் என்று கூறியிருக்கிறார். மூன்று தொகுப்பு களுக்கு இடம் தரக்கூடிய மனநிழல் என்ற இலக்கிய வடிவம் ஒரேயொரு தொகுப்பில் சிறுத்துக் கிடப்பது எத்தனை பேருக்குத் தெரிகிறது.

ஒரு மனநிழல் தொகுப்பை வெளியிட்ட செல்லப்பாவும் அத்தொகுப்பை சிறுகதைத் தொகுப்பாகவே வெளியிட்டார். இவற்றை ஏன் சொல்லுகிறேன் என்றால் இன்று பிச்சமூர்த்தி என்கிற இலக்கிய உருவம் கவிஞராக மட்டும் தெரிய வந்திருப்பதுதான். பிச்சமூர்த்தி இறந்து 20, 30 ஆண்டுகளாகி இப்போது அரை நூற்றாண்டைத் தாண்டும்போது இதைப் பற்றி யெல்லாம் சிந்திக்க ஒரு இலக்கிய வாசகரை நினைவூட்டுவது தான் என் நோக்கம்.

புதுக்கவிஞராக பிச்சமூர்த்தி பேருருவாய் பாரதிக்குப் பின்னால் தமிழில் ஒரு மேஜர் பொயட் (Major Poet) என்று சொல்லத்தக்க சாதனையை நிகழ்த்தி இருந்த



**பிச்சமூர்த்திக்குப் பறவைகளென்றால் பைத்தியம் பறவைகளை வைத்து ஒரு காவியமே எழுதியிருக்கிறார். 'மகாகவிகள்' என்ற தலைப்பில் அது வெளிவந்தது.**

போதும் அவரது காவிய ரசனை சிறுகதைகள், நாவல், கட்டுரை ஆகியவைகளைத் தாண்டி மனநிழல் என்ற புதிய இலக்கிய வடிவத்தைத் தமிழுக்குத் தருவது வரை நீடிக்கிறது. தமிழில் ஒரே மாதிரியான படைப்புகளைத் தூக்கி எறிந்து பந்தாடிப் பார்த்தவர் பிச்சமூர்த்தி. 1950-களில் அவர் திருவல்லிக்கேணி கூவம் நதிக்கரைகளில் ஒரு ஒண்டுக் குடுத்தனத்தில் வாழ்ந்த போது- நீண்ட காலத்துக்குப் பிறகு அவரைப் பார்த்த எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அதற்கு முன்பு அவரை செட்டி சத்திரம் என்ற ஊரிலும் கும்பகோணத் திலும் பின்னர் சாலிய மங்கலத் திலும் சந்தித்த எனக்கு திருவல் லிக்கேணி சாக்கடையோரம் உட்கார்ந்து வெற்றுடம்புடன் வானத்தைப் பார்த்துக் கொண் டிருந்த பிச்சமூர்த்தியின் கவிதை உருவம் என்னை அச்சுறுத்தாமல் என்ன செய்யும்? அப்பொழு தெல்லாம் அவருக்கு இருந்த ஒரே துணை சி.சு.செல்லப்பா மட்டுந் தான்.

அப்பொழுது மணிக்கொடி, வீரர்கள் எல்லாம் முடமாக்கப் பட்டு சென்னை வீதிகளில் சோற்றுக்கு அந்தர வித்தைகள் செய்து கொண்டிருந்த காலம். ஓட்டப்பந்தயத்தில் நொண்டிக் கொண்டே ஓடிக் கொண்டிருந்த பல எழுத்தாளர்கள் இடையே பிச்சமூர்த்தி பந்தயத்தில் இறங்க வில்லை என்பதுதான் கவனிக்கப் பட வேண்டிய விஷயம். எதிரே கூவம் கூட சிறுத்துப்போய் கடலை நோக்கி நாறியபடியே இறுகிப் போயிருந்தாலும் அதன் கரையில் பிச்சமூர்த்தி தன் பஞ்சடைந்த கண்களோடும் வானத்தில் அங்கும் இங்குமாய் பறந்த கரிச்சான்களை யும் தட்டான்களையும் பார்த்து வியந்து கொண்டுதானிருந்தார்.

செல்லப்பா மட்டும் இல்லாமல் போயிருந்தால் அட்டுப் பிடிவாதத்



படிப்பகம்

www.padippakam.com



துடன் பிச்சமூர்த்தியின் கவிதைதான் கவிதை என்று ஓங்கியடித்துக் காட்டி 'எழுத்து' என்ற பிடிவாதத்தால் அச்சாக்கிக் காட்டியிருக்கவில்லை என்றால் இன்று புதுக்கவிதையில் ஒப்பற்ற காவியமாகிய வழித் துணையோ, காட்டுவாத்தோ, அவரது கனவுகளோ, வியப்பளிக்கும் அவரது மனநிழல்களோ இன்றும் இல்லாமலே போயிருக்கும். வறுமையோடு போராடிக் கொண்டு அது பற்றிய சலிப்பேயில்லாமல் உழைத்தவர் பிச்சமூர்த்தி.

பல்லாயிரம் வரிகள் அவர் எழுதிய கவிதை வரிகள் வீட்டுக்குள் முடங்கிப் போயின. அவரே கிழித்தெறிந்தவை பல. பிச்சமூர்த்தி தேர்ந்த விமர்சகர். அவர் விமர்சனம் எழுதியதில்லை. அதில் அவருக்கு நம்பிக்கையுமில்லை. அவர் தேர்ந்த ரசிகர். ஆனால் தன் கவிதைகளை ரசிக்கும் குரலெடுத்து அவர் பேசியதில்லை.

சொல்லப் போனால் மிகக் குறைவாகவே அவர் எழுத்தும் பேச்சும் இருக்கும். செவி கொடுத்துக் கேட்பதில் இணையற்ற மனிதர் அவர். அவரது கதைகளைப் போலவே பூடகமில்லாத எளிமை. இன்னதென்றே காண முடியாத இயற்கையின் ஆழமும் தத்துவத்தின் சரடும் ஒன்றையொன்று பின்னி அழகுணர்ச்சியை வஷப்படுத்தும். கவிதை அனுபவமும் ஒன்றையொன்று போட்டியிட்டு மிஞ்சும். இன்று பிச்சமூர்த்திக்காக அவரது கவிதைத் தொகுப்பு ஒன்றுதான் கிடைக்கின்ற நிலை. வேறு எதுவும் அவரது படைப்புகள் வாசகரைச் சென்றடையாத வண்ணம் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

பிச்சமூர்த்தியின் நாவல் அபூர்வமானது. அறுபது பக்கங்களுக்கு மேல் கிடையாது. குறுநாவல் என்று இதை கலைமகள் வெளியிட்டது. ஆனால் அந்த நாவலின் நவீனத்துவம் மிகவும் ஆச்சர்யமானது. மிக நுண்மையான படைப்பு. ஒரே யொரு நாடகமும் 'காளி' என்கிற பெயரில் பிச்சமூர்த்தி எழுதி இருக்கிறார்.

இவை எல்லாமே மிகவும் நுண்மையான ரசிகன் ஒருவனுக்காக.

சிறுகதைகளில் அவர் வியப்பை வாரி இறைத்திருக்கிறார். சமுதாயத்தின் மேல்தட்டு நிலைகளிலிருந்து அடித்தளம் வரை ஊடுருவிச் செல்பவை அவரது கதைகள். தோட்டிகளின் வாழ்க்கையை 1940களிலேயே இவரது அடகு என்கிற அற்புதமான கதை குரூர வசீகரத்தோடும் ஏழ்மையைக் கிள்ளி எறியும் வேகத்துடனும் மனிதாபிமானத்துடனும் சித்திரிக்கிறது. 'மோகினி' என்கிற கதையும் 'மாங்காய்த் தலை' என்கிற கதையும் 'பதினெட்டாம் பெருக்கு' என்கிற கதையும் ஒன்றுக்கொன்று கடலளவு உருவம் உள்ளடக்கம் வெளியீட்டு முறை ஆகிய எல்லா விஷயங்களிலும் வெவ்வேறு பட்ட திறமைகளையும் இயல்புகளையும் அபாரமாகச் சித்திரிக்கின்றன.

செட்டி சத்திரத்தில் குளக்கரையோரம் நின்று குயில்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதே வேகத்துடன் தஞ்சாவூர் சாலிய மங்கலத்தில் வெட்டாறு வாய்க்காலில் நின்றபடி குயில் அகவுவதைக் கேட்டு ரசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். கும்பகோணம் காவிரிக் கரையில் வக்கீல் குமாஸ்தாவாக அவர் பெற்ற அனுபவங்களைச் சித்திரிக்கும் 'குமாஸ்தா பாட்டு' மரபுக் கவிதையாக வெளிவந்துள்ளது. ஒரு எழுத்தாளர் இத்தனை முயற்சிகளையும் விதவிதமாக செய்து பார்த்ததை அதில் வெற்றியும் பெற்றதை வேறு யாருடனும் ஒப்பிட்டுச் சொல்ல



படிப்பகம்

www.padippakam.com

முடியாது. அவரது முயற்சிகள் தோல்வியடைந்ததே இல்லை. காரணம் அவைகள் பலவாக இருந்ததில்லை சிலவாகவே இருந்தன.

ஆசைக்கொரு மகனில்லாமல் நான்கு பெண்களைப் பெற்று அல்லாடியவர் பிச்சமூர்த்தி. ஆனாலும் கடிந்து கொண்டதோ, சலித்துக் கொண்டதோ இல்லவே இல்லை. வீட்டில் மனைவியிடம் மிகக் கரகரத்த குரலில் 'அட்லச் சூடு' மா பிரகாஷ் ஒச்சிந்தி அட்லச் சூடம்மா... என்று என் வருகையை வியந்து அறிவிப்பார். அவரும் அவர் பெண்களும் கொண்டிருந்த உறவே ஆச்சர்யத்துக்குரியது. குழந்தைகளுடன் தகப்பனார் என்கிற பேதமில்லாமல் சிநேகிதி களாகவே உரிமையோடு வாழ்ந்தார். அந்த நால்வருக்கும் திருமணம் முடிக்க அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும் யாரிடமும் அவர் வலிந்து சலித்து தூற்றியதே யில்லை. என்னிடம் மறைவாகத் தெலுங்கில் எப்போதாவது வருந்தியதுண்டு. அவரது மிக இனிமையான கரகரத்த குரல் பாட்லுக்கோ கவிதைக்கோ ஒப்பாது. ஆனால் அவரது தெலுங்கு மட்டும் எனக்கு சங்கீதம் போலிருக்கும்.

மனம் பிறழ்ந்த நிலையில் பல நேரங்களில் என்னுடன் அவர் பேசிக் கொண்டிருந்திருக்கிறார். அப்போது தமிழைவிட தெலுங்கு தான் அவருக்கு உதவியது. தனது படைப்புகள் வெளிவரவில் லையே, சம்பாதிக்கவில்லையே, புகழை வாரிக் குவிக்கவில்லையே என்ற வழக்கமான குற்றச்சாட்டுகள் எதுவும் அவரிடம் கேட்க முடியாது. அவர் கர்மயோகி. எழுத்துக்கும் வாழ்வுக்கும் அவரிடம் வித்தியாசம் இருந்ததில்லை. வறுமை அவரை மிரட்ட முடியவில்லை. அவர் வேகம் கண்டு, அவரது நெருப்புக் கண்கள் கண்டு வறுமைதான் பயந்தது. அவர் நினைத்திருந்தால் எழுதிக் குவித்திருக்கலாம். தேர்ந்த ஒரு விமர்சகராக அவரே தனக்குச் செயல்பட்டார். உழைத்து உழைத்து எழுதிய பல எழுத்தோவியங்களை தரமற்றவையென்று அழித்தொழிக் கும் வல்லமையும் அவருக் கிருந்தது.

தமிழில் புதுக்கவிதைகள் வெளியிட முடியாத காலம் ஒன்றிருந்தது. அப்பொழுது அவர் நூல்கள் ஒவ்வொன்றாக செல்லப் பாவின் பலவீனமான கரங்களால் உருவாக்கப்பட்டன. அவரது 'காட்டுவாத்து' வெளிவந்த போது அவர் குழந்தை போல் கை கொட்டிச் சிரித்துச் சந்தோஷப் பட்டார். "என் கவிதையைக் கூட புத்தகமாக்கிவிட்டான் செல்லப்பா. இனி எனக்கென்ன கவலை?" என்று கெக்கொலி கொட்டினார்.

பிச்சமூர்த்தியின் கனவுகள் கடைசிக் காலத்தில் அவரது கவிதைகள் தான். அவரது காவியங்கள் இன்றும் தமிழின் மிகச்சிறந்த படைப்புகளாகவே, துருவ நட்சத்திரங்களாகவே ஒளி வீசுகின்றன. குறிப்பாக மலையரசி, தாயும் குஞ்சும், வழித்துணை போன்ற புதுக்கவிதைக் காவியங் கள் எந்த மொழியிலும் ஈடு சொல்ல முடியாத சிறப்புக் கொண்டவை.

ஒரு நாள் அடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது. நானும் எம்.வி.வெங்கட்ராமன் அவர்களும் பிச்சமூர்த்தியைப் பார்க்க கும்ப கோணத்தில் இருந்து தஞ்சாவூர் வந்து தஞ்சாவூரில் இருந்து சாலிய மங்கலத்துக்கு மழையோடு போனோம். அவர் வீட்டிலில்லை. அவர் மனைவி என்னைப் பார்த்ததும் தெலுங்கில் "அவங் ஆற்றங்கரைக்குப் போனார்; இப்படித்தான் போனால் போன இடம்..." என்று சிரித்துக் கொண்டே சொன்னார். மழையையும் பொருட்படுத்தாமல் ஆற்றங்கரைக்குப் போகலாமே என்றார் எம்.வி.வெங்கட்ராமன். இருவருக்குமே இரத்தத் துடிப்பு நன்றாக இருந்த காலம். தூரத்தில் நீண்ட வெந்நிறத் தாடி காற்றில் நனைந்து முடியெல்லாம் நீர்த் துளிகள் கோர்த்து உதிர வெட்டாற் றங்கரையில் பிச்சமூர்த்தி தண்ணீர்ப் பரப்பையே உற்றுப் பார்த்தபடி மழையில் நனைந்து ரசித்துக் கொண்டு நிற்பதை நாங்களும் பைத்தியம் போல் நனைந்தபடியே பார்த்துக்கொண்டு அவரை நோக்கி நெருங்கினோம்.

'ரா வையா... பிரகாஷ் ரா. ச்சூஸ்திலா... ச்சூசினாரா... த்தேனி பேரு முக்குளித்தான்'.

'இது ஒரு அபூர்வமான பறவை. நீங்க பாத்திருக்கேளா வெங்கட் ராம். இது தண்ணிக்குள்ள மீன் மாதிரி நீந்தி வாழும். அதே நேரத்துல தண்ணிக்குள்ளேயிருந்து மழை பெய்யற நேரத்துல வெளிய பறந்து வந்து ஆகாய வானத்துல பறக்கும் பாருங்க அற்புதமான சிருஷ்டி. தண்ணீர் மழையால கலங்கினா இதுக்குப் பிடிக்காது. தண்ணீர் அடிமட்டத்திலேயிருந்து நீந்தி வந்து மரத்து மேலே போய் உட்காந்துக்கும். வானத்துலயும் பறக்கும். குக்கூ குக்கூன்னு அதுக்குன்னே ஒரு சத்தம் பாருங்க' என்று வியந்தார் பிச்சமூர்த்தி.

ஆம் தரையிலும் நீரிலுமாய் வாழ்ந்த அந்தப் பறவை, பிச்சமூர்த்தியை இன்றும் எனக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

எத்தனை கவிஞர்களுக்கு அந்தப் பறவை பற்றித் தெரியுமென்று எனக்குத் தெரியாது. முக்குளித்தான் என்று பெயரிட்ட கிராமவாசியைவிட மிகச்சிறந்த கவிஞன் வேறு யார் இந்த உலகில் இருக்க முடியும். இன்றும் தஞ்சையின் கிராமப்புறப் பகுதியில் முக்குளித்தான் என்ற அற்புதம் அதன் குரலொலி பிச்சமூர்த்தியின் கவி இதயத்தை நினைவூட்டிக் கொண்டேயிருக்கிறது. ●



படிப்பகம்

www.padippakam.com

கவிதை

# அறை விழித்திருக்கிறது...

புத்தகன்

இருளில்
மிதந்தொளிர்ந்து
தவித்திருக்கக்கூடும்
என்னறை இரவு.

இருப்பினும்
அறையில்- பறவையின்
அலகொலி
என்னிருப்பை பத்திரப்படுத்தும்.

சுவரோவியங்கள்
கொண்டாட்டம் நிகழ்த்தியிருக்கும்
சுதந்திரமாய்.


பேனாக்கள் புரண்டு
நெட்டி முறித்திருக்கும்-
வெண்ணட்டைகளும்
தூரிகை வண்ணங்களும்
இத்தனியனின் தவிப்பை
உணர்ந்திருக்கும்-

அந்தரங்க கடித உருவங்கள்
தற்போதைய இருப்பின்
சன்னலிலும்...
ஓடுகள் பிரித்தும்
கண் வைத்திருக்கின்றன-

எனைத் தொலைத்த
வாசலில்
தொலைக்காட்சி
கண் வைத்திருக்கும்-

எறும்புகள் அறையில்
தின்பண்டமின்றியலைகிற
மூன்றாம் சாமம்-

இப்புதிய தளத்தில்
இந்நினைவு உயிர்ப்பிக்க
உறக்கம் ஊடுறுவாமல்
உதிர்ந்தோட
விழித்திருப்பது நான் மட்டுமல்ல
சினேகப்படாத இவ்வறை இரவும்.



# முழக்கம்

## ஜெயபாஸ்கரன்

அமர்ந்த நிலையிலேயே
சரிந்து கிடக்கிறார்கள்
அங்கொன்றும்
இங்கொன்றுமாக
அரங்கில் சிலபேர்.

மேடைக்கு
பின்புறம் சென்று
பேசுபவரைக் குறித்து
தலையிலடித்துக் கொள்கிறார்கள்
பேசவிட்டவர்கள்.

முடித்துக் கொள்ளுங்கள்
என்று கெஞ்சி
மூன்று சீட்டுக்கள்
கொடுத்தாயிற்று.

வெறிச்சோடிப் போயிருந்த
அரங்கின் மூலையில்
வெறுத்துப் போய் நிற்கிறார்கள்
கொள்கை பரப்ப முனைந்த
கூட்ட அமைப்பாளர்கள்.

துணிந்து மேடையேறி
தடியூன்றி
ஒதுங்கி நிற்கிறான்
அரங்கின் காவல்காரன்.

ஆக மொத்தம்
பதினாறு பேர்
அலுத்துக் காத்திருக்கிறார்கள்,

காலத்தின் அருமை கருதி
ஒரு சில மணித்துளிகளில்...
என்று உறுதி கூறி
உரையாற்றத்
தொடங்கியவருக்காக!



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# விச்சு அண்ணா

## உஷாதீபன்

விச்சு அண்ணாவைக் காண வில்லை. காலை நாலு மணி சுமாருக்கு வழக்கம்போல் அப்பா கண்விழித்தபோது, அருகே படுக்கை காலியாய்க் கிடந்தது. ''இங்கேதான் எங்கேயாவது போயிருப்பான்... வருவான்'' என்று பொதுவாகக் கூறியபடி கிளம்பிவிட்டார் அப்பா. அப்படியே ஆற்றங்கரை சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஐந்து மணிக்குள் ஹோட்டலுக்குள் நுழைந்தாக வேண்டும் அவருக்கு. அதில் சிறிதும் தாமதம் கூடாது. ''இது இனிமேல் என்றும் உள்ள பாடுதான்... என்ன பரபரப்பு வேண்டிக் கிடக்கிறது?'' என்பதான நிலைக்கு அப்பா தள்ளப்பட் டிருந்தார். அவர் மட்டுமென்ன? வீட்டிலுள்ள எல்லோருமே அம்மாதிரியான மனநிலையில் தான் இருந்தோம். வாசுகி அண்ணிக்குக்கூட கண்ணீர் வற்றித் தான் போயிருந்தது. எத்தனை நாளைக்கு நினைத்து நினைத்து அழுது கொண்டிருப்பது? எந்தவொரு சோகமுமே ஒரு கட்டத்தில் வற்றித்தான் போகிறது. பிறகு மனிதர்கள் புதிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள். தயாராகி விடுகிறார்கள். காலத்தின் கட்டாயமாகிப் போகின்றன நிகழ்வுகள்.

விச்சு அண்ணா இம்மாதிரிக் காணாமல் போவது ஒன்றும் புதிதல்ல. முதல் முறையல்ல. இடையிடையே இது நடந்து கொண்டுதான் இருந்தது. ஆனாலும் எங்கு தொலைந்தாலும், சுற்றி னாலும், கரெக்டாக சாப்பாட்டு நேரத்துக்கு ஆஜராகிவிடுவார். அதையும் தாண்டும் போதுதான் அம்மா பதறுவாள். போய்த் தேடச் சொல்லி விரட்டுவாள். ஊர் எல்லையைத் தாண்டி எங்கும் சென்றிருக்க மாட்டார் என்ற உறுதி எனக்கும் அண்ணனுக்கும் உண்டு. அதனால் நான் ஒரு திசையிலும் அவன் ஒரு திசையிலும் என்று கிளம்புவோம். இந்தப்பக்கம் கெங்குவார்பட்டி வரையிலும், அந்தப் பக்கம் பழைய வத்தலக் குண்டு வரையிலும் ஒரு அலசு அலசி விடுவோம்.

பெரும்பாலும் விச்சு அண்ணா அவ்வளவு தூரம் சென்றிருக்க மாட்டார். அதனால் தேடக் கிளம்பு கையில் முதல் பார்வையாக சந்திரா டாக்கீஸ் காம்பவுண்டுக்குள் சென்று ஒரு பார்வை பார்த்து விட்டுத்தான் அடுத்தபடி என்று கிளம்பி, அலசிவிட்டு அங்கும் இல்லையென்றால் கோவிந்தசாமி டாக்கீஸ் சுமைதாங்கிக் கல்லில் உட்கார்ந்திருக்கிறாரா என்று தொடருவோம்.

''மனுஷனுக்கு புத்தி சரியில் லாத நிலையிலும் இந்த சினிமாப் பைத்தியம் விடல பாரு...''

அண்ணா இப்படிச் சொல்லித் திட்டுவார். விச்சு அண்ணாவின் சினிமாப் பைத்தியம் அம்மாதிரி யானது. எது தெரிகிறதோ இல்லையோ, வெள்ளிக்கிழமை என்ன படம் மாற்றுகிறான் என்பது மட்டும் தெரியும் விச்சு அண்ணாவுக்கு. வாரா வாரம் வியாழக்கிழமை இரவு பத்து மணிக்கு மேல் தியேட்டரில் புதுப்படப் போஸ்டர் ஒட்டிய பின்னர்தான் வீடு திரும்புவார். அவர் பெட்டியைத் திறந்தால் உட்புறம் நடிகர் படத்தை ஒட்டி வைத்திருப்பார். நீளமாக ஒரு நோட்டுத் தயாரித்து, தினசரியில் வரும் சினிமா விளம்பரங்களைக் கட் பண்ணி அபிமான நடிகரின் படம் ரிலீஸ் நாள், ஐம்பதாவது நாள், நூறாவது நாள், வெள்ளி விழா





படிப்பகம்

www.padippakam.com

என்று வரிசைப்படுத்தி, அதற்குக் கலர் கொடுத்து டிசைனெல்லாம் செய்திருப்பார். இதனாலேயே அவருக்குப் படிப்பு வராமல் போனது எனலாம்.

சின்ன வயதிலேயே சினிமாவில் நடிக்கிறேன் என்று சென்னை ஓடிப்போய்த் திரும்பியவர் அவர். ஒவ்வொரு முறையும் ஸ்கூல் ஹெட்மாஸ்டரிடம் அப்பாபோய்க் கெஞ்சி திரும்பவும் பள்ளியில் சேர்த்து விடுவார். அதனாலேயே வருடாவருடம் உயர் வகுப்பு ஏற முடியாமல் தேங்கிப் போனார் விச்சு அண்ணா. ஒரு கட்டத்தில் இனி இவன் தேறமாட்டான் என்ற முடிவுக்கு வந்தார் அப்பா. பிறகுதான் கடை முதலாளி மூலம் சொல்லி பெரியகுளம் ஆனந்த பவன் ஹோட்டலில் சேர்த்து விட்டார். வீட்டை விட்டுத் தனியாக இருந்ததனால் சுதந்திரமாக உணர்ந்தாரோ என்னவோ, அந்த வேலையில் நிரந்தரமாக இருந்தார் விச்சு அண்ணா. சுதந்திரமாகச் சினிமாப் பார்த்தார்.

வத்தலக்குண்டு சந்திரா டாக்கீஸில் என்ன படம் என்று தினசரிகள் மூலம் தெரிந்து கொண்டு புறப்பட்டு வருவார். பெரும்பாலும் சனிக்கிழமையாகத்தான் இருக்கும் அந்த நாள். ஒவ்வொரு வாரமும் அந்த நாளில் எங்களுக்குக் கொண்டாட்டம்தான். எங்கள் எல்லோரையும் சினிமாவுக்கு அழைத்துப் போவார். அந்த அக்ரஹாரத்திலேயே அதிகம் சினிமாப் பார்த்த வீடு என்றால் அது எங்களுடையதுதான். என்னே பெருமை!

சந்திரா டாக்கீஸில் தரை டிக்கெட் நாலணா. முண்டியடித்து ஆள் மேல் ஆள் ஏறி பொந்துக்குள் நுழைந்து, டிக்கெட்டோடு வெளிப்போந்து நின்றால், உலக சாதனை நிகழ்த்தியது போல் நினைக்கத் தோன்றும். விச்சு அண்ணாவின் வருமானத்துக்கு தரை டிக்கெட்டுக்குத்தான் காசு தர முடியும். பெஞ்சு டிக்கெட், மாடி என்பதெல்லாம் வெறும் கனவுதான். இடைவேளையின் போது ஓடி ஓடிப்போய் எட்டிப் பார்ப்பதோடு சரி. தான் பார்த்து ரசித்த படத்தை எங்களைவிட குறிப்பாக அம்மாவைப் பார்க்கச் செய்ய வேண்டும் அவருக்கு.

விச்சு அண்ணாவுக்குக் குரல் வளம் உண்டு. கூடத்தில் ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக்கொண்டே ''மங்கியதோர் நிலவினிலே....'' என்று அவர் பாடும் காட்சி எங்கள் எல்லோர் மனதிலும் பதிந்து போன அழிக்க முடியாத காட்சியாகும். சித்தி, சித்தி என்று மூச்சுக்கு முன்னூறு முறை கூறிக்கொண்டு எங்கள் அம்மாவையே சுற்றிச்சுற்றி வருவார் விச்சு அண்ணா.

என்ன பார்க்கிறீர்கள்? ஆம். எங்கள் அம்மா விச்சு அண்ணாவுக்கு சித்திதான். இளம் பிராயத்திலேயே அவரது அம்மா காலமாகிவிட, பதினாறு வயதில் எங்கள் அப்பாவுக்கு வாழ்க்கைப் பட்டவள் எங்கள் அம்மா. அம்மாவுக்கு விச்சு அண்ணா பேரில் பாசமும், வாஞ்சையும் மிக அதிகம். அவர் படிக்காமல் போனதில் அம்மாவுக்குத் தாள முடியாத வருத்தம். மூத்தாள் பிள்ளை என்றுதானே படிக்காமல் ஹோட்டலுக்கு அனுப்பிவிட்டாள் என்று ஊர் சொல்லுமோ என்று பயந்தாள் அம்மா. அப்பா போய் கெஞ்சிக் கெஞ்சி சேர்த்துவிட்டதெல்லாம் அம்மாவின் வற்புறுத்தலால் நடந்ததுதான்.

தான் படிக்காத உறுத்தல் இருந்ததோ என்னவோ, விச்சு அண்ணா எங்கள் படிப்பில் அதிக அக்கறை காட்டினார். நோட்டு, புத்தகம் என்று எது கேட்டாலும் உடனே ஓடிப்போய் வாங்கிவந்து நீட்டுவார். இங்கிலீஷ் க்ராமர் புக் வேணும் என்று அண்ணா ஒரு முறை சொல்ல, உடனே மதுரை சென்று தலை சிறந்த இலக்கண நூலான ''ரன் அன்ட் மார்ட்டின்'' புத்தகத்தோடு வந்து நின்றார் விச்சு அண்ணா. இத்தனை பாசமும் பற்றும் உள்ள ஒரு மனிதர் படிக்காமல் இப்படி கரண்டி பிடிக்கும் உத்தியோகத்தில் மாட்டிக்கொண்டாரே என்று எங்கள் எல்லாருக்கும் நிரம்ப வருத்தமுண்டு.

''எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாத பிள்ளை... நல்ல குணசாலி... கொடுத்தால் விச்சுவுக்குத்தான் என் பெண்'' என்று கூறிக்கொண்டு ஒருநாள் வந்து நின்றார் வாசுகி அண்ணியின் அப்பா. பால்ய கால சிநேகிதம். நெருங்கிய உறவுமுறைப் பற்று. மறுக்க முடியாமல் போனது அப்பாவால். ஆனால் இப்படியா ஆகவேண்டும்? எந்தக் கிரகம் அவரை இப்படிக்கொண்டு நுழைத்தது?

தனிக்குடித்தனம் போயே ஆகவேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றார் விச்சு அண்ணா. அழகான பெண்டாட்டி அமைந்ததில் தலைகால் புரியவில்லை அவருக்கு. அசாத்தியக் கற்பனையில் மிதந்தார். அப்பா எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். கேட்கவில்லை. உதறிவிட்டார் அப்பா. போன வேகத்தில் திரும்பி வந்தார் விச்சு அண்ணா. ஆனால் இப்படியா வந்து நிற்க வேண்டும்? யார் செய்த செய்வினை இது? எந்த ஜென்மத்துப் பாவம் இது? அம்மா மிக அரற்றினாள். அழுது புரண்டாள். பலன்? எந்த வைத்தியமும் விச்சு அண்ணாவை சரி செய்யவில்லை. இனிமேலான வாழ்க்கை அவருக்கு இப்படித்தான் கழியும் என்ற நிலை வந்தது. எல்லோருடைய மனமும் சமனப்பட்டது ஒரு பொழுதில்.

விச்சு அண்ணா வீட்டோடு இருக்க ஆரம்பித்தார். வாசல் கதவைப் பூட்டி வைத்துப் பாது காத்தாள் அம்மா. காவல் காத்தாள். அமாவாசை போன்ற தினங்களில் ஆர்ப்பாட்டம் அதிகரிக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

அண்டைவீடு அயல்வீடு என்று துணைக்கு வருவார்கள். அவரை இழுத்துப் பிடித்துக் குளிக்கச் செய்வார்கள். புது வேட்டி கொடுத்து உடுத்தச் செய்வார்கள். கூடவே அமர்ந்து பேசிக் கொண்டு காலம் கடத்துவார்கள். காவல் காப்பார்கள். எல்லோராலும் எல்லாச் சமயமும் கண்காணித்துக் கொண்டேவா இருக்க முடியும்? விச்சு அண்ணா சமயங்களில் காணாமல் போனார். எப்படி, எப்போது, வெளியேறினார் என்று தெரியாது. அப்படியான ஒரு பொழுதுதான் இப்பொழுதும் வந்துள்ளது.

''போய்த் தேடுங்கோடா... எங்கேயிருந்தாலும் தேடிக் கண்டுபிடிச்சு என் கண் முன்னாடி அவனைக் கொண்டு வந்து நிறுத்தணும்... இது என் கட்டளை'' -ருத்ரம் வந்தவளாய்க் கத்தினாள் அம்மா. நானும் அண்ணாவும் தேடக் கிளம்பினோம். படித்துறை, ஆற்றங்கரை, தென்னந்தோப்பு, தண்டபாணிக் கிணறு, வயல் வெளி, ஒணாங்கரடு, சென்தாயப் பெருமாள் கோயில் என்று ஒன்றுவிடாமல் அலைந்தோம். எதுவும் பாக்கி வைக்கவில்லை. எங்கும் விச்சு அண்ணா இல்லை. இரவோடு இரவாகக் கிளம்பிப் போன மனிதர் யார் கண்ணில் பட்டிருக்கக்கூடும்? ஒரு வேலை அவர் முன்பு வேலை செய்த பெரியகுளம் ஆனந்தபவன் ஹோட்டலுக்குப் போயிருப்பாரோ என்று சந்தேகம் எழுந்தது எங்களுக்கு. கிளம்பினோம். அங்கும் வரவில்லை என்று சொன்னார் கடை முதலாளி.

''எப்படியிருந்த பிள்ளை, இப்படி ஆயிட்டான்?'' என்று மனம் வருந்தினார். வயிறாற சாப்பிட்டுப் போகுமாறு உபசரித்தார். விச்சு அண்ணா சம்பாதித்து வைத்திருந்த நற்பெயர் அங்கே எங்களுக்குப் போதிய மரியாதையை வழங்கியது.

**"ஐயோ! நிறுத்துங்க... நிறுத் துங்க... இதென்ன அநியாயம்? இதென்ன அக்கிரமம்?.. அவர் எங்க அண்ணன்... கூடப் பிறந்தவர்..."**

முப்பது வயதுவரை நன்றாக இருந்த ஒரு மனிதன், பிறகு திருமணம் செய்துகொண்டு, ஒரு பெண்ணின் வாழ்க்கைவேறு வீணாகி இப்படிக் கண்முன்னே பைத்தியமாய் அலைய வேண்டுமா? வருந்தாதவர்கள் பாக்கியில்லை. எழவு வீட்டுக்கு வந்து போவது போலவே எல்லோரும் வந்து துக்கம் கேட்டுவிட்டுப் போனார்கள்.

''தனிக்குடித்தனம் வேண்டாம்டா... அவ இங்கேயே இருக்கட்டும்... கொஞ்ச நாள் கழிச்சுப் பார்த்துக்கலாம்னு அடிச்சிண்டேனே... கேட்கலியே பாவி... என்ன வீடு பார்த்தானோ? எந்தப் பேய் அடிச்சிதோ? தெரியலியே... என் பையன் பரப்பிரம்மமாவந்து நிற்கிறானே... நான் ஏன்ன பண்ணுவேன்... இதை எப்படி சமாளிக்கப் போறேன்... என் ஆயுசே போயிடும் போலிருக்கே?'' -அம்மா அன்று புலம்ப ஆரம்பித்தாள்.

ஆனால் அந்த நிலையிலும் வாசுகி அண்ணியை நாக்குமேல் பல்லுப்போட்டு ஒரு சுடுசொல் சொன்னதில்லை அம்மா. அங்கே தெய்வமாய் நின்றாள் அவள்.

அப்பாவின் முகம் இருண்டு போய்க் கிடந்தது. தீவிரச் சிந்தனையில் இருந்தார் அவர். போலீஸில் கடை முதலாளியைக் கொண்டு புகார் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

''சீக்கிரம் கண்டு பிடிச்சிடுவோம்..'' என்றனர் அவர்கள். ஒரு வாரம் கழிந்த பொழுதில் தேவதானப்பட்டி மாரியம்மன் கோயில் திருவிழாவில் பார்த்ததாகச் சிலர் வந்து சொன்னார்கள்.

''பெருங்கூட்டத்தில் இவரை எப்படிக் கண்டுபிடிப்பது?'' -இந்தக் குழப்பத்துடனேயே நாங்கள் கிளம்பினோம்.

பொழுது சாய்ந்த வேளை.. மெல்லிய இருட்டுப் பரவிய நேரம்... நாங்கள் அங்கே கண்ட காட்சி எங்கள் ரத்தத்தை அப்படியே உறைய வைத்தது.

'அவர்தானா? அது அவரே தானா? விச்சு அண்ணாதானா அது? யார் அவரை இப்படிக் கோரப் படுத்தியது? ஏன் இப்படி மொட்டையடித்துக் கொண்டிருக் கிறார்? யார் செய்த கோலம் இது? என்ன தவறு இழைத்தார் என்று இந்தக் கேவலம்? கழுதை மேல் ஏற்றி விரட்டுகிறார்களே அவரை? எதற்காக அவர்மேல் இப்படி அழுகிய பழங்களையும், முட்டைகளையும் வீசுகிறார்கள்? எதற்காக இந்தத் தண்டனை? தண்டனையா? அல்லது கேலி விளையாட்டா? அதோ சிறுவர்கள் வேறு கற்களையெல்லாம் எடுத்து வீசுகிறார்கள்? கெக்கலித்து ஓடுகிறார்களே? அட ஆண்டவனே! இதைக் கேட்பார் கிடையாதா? என்ன இது பெருங் கொடுமை?'

''ஐயோ! நிறுத்துங்க... நிறுத் துங்க... இதென்ன அநியாயம்? இதென்ன அக்கிரமம்?.. அவர் எங்க அண்ணன்... கூடப் பிறந்தவர்... புத்தி சரியில்லாதவர்... அவரை விட்டிடுங்க... பாவம் அவரை விட்டிடுங்க... அடிக்காதீங்க... விட்டிடுங்க... அடிக்காதீங்க..''

-கதறிக் கொண்டே தலை தெறிக்கத் தொடர்ந்து ஓடினோம் நாங்கள்.



படிப்பகம்

www.padippakam.com


# Champa fabrics

YARN, FABRICS, GARMENTS EXPORTERS &
FABRIC SUPPLIERS TO THE EXPORTERS IN INDIA

**EXPORT OFFICE :**
9, 1st Lane, Vijayaraghava Road,
T. Nagar
Madras - 600 017. (INDIA)
Phones : 044 - 8283298 / 8263635
Telex : 41 - 8856 JAIN IN
Fax : 044 - 825 0875

**PRODUCTION OFFICE :**
100 - 101, Ganapathipuram,
Karungalpalayam,
ERODE - 638 003. (INDIA)
Phones : 424 - 212788 /
210339 / 212297
Telex : 858 - 261 JAIN IN
Fax : 424 - 211071

**PROCESSING UNIT :**
JAIN BRUSHING PEACH INDIA
Madras - 81. Ph : 5953556

**SPINNING UNIT :**
LAKSHMI SARASWATHI
COTTON MILLS
Kutchipalayam - 637 209.
Ph : 04288 52470


**MARKETING OFFICE :**

**MADRAS :**
Mr. Regraj
7, Balu Mudali Street,
Tondiarpet,
Madras 600 021 (INDIA)
Phone : 044 5953556 / 5953001
Fax 044 5950384
Telex : 41 - 7014 JAIN IN

**DELHI :**
Mr. Ramesh Dhingra
Phone : 011 - 237026 / 2916433
Fax : 2931636

**BOMBAY :**
Mr. Lakhi Sachdev
Phone : 022 - 4954697
Fax : 495 4698

**BANGALORE :**
Manohar Chawla
Phone : 080 - 368590 / 363334



**ASSOCIATE GROUP CONCERNS :**
Champa Fabrics Pvt. Ltd.
Champa Exports
Nadasware International
Dhanasware Overseas
Champa Granites
Cosmotex Exports
Rohit Enterprises

**MANUFACTURERS & EXPORTERS**
All kinds of Cotton,
Rayon, Flex, Yarn Dyed,
Flannel, Solid Dyed,
Printed, Grey Fabrics




Embracing Humanity For Excellence


படிப்பகம்

www.padippakam.com

KANAIYAZHI Monthly Regd. No. TN/MS(C)/1417/99 WPP NO: 163
Regd with RNI under Lic No. 10685/65

# A pioneer Bank in Financing Agriculture now offers Consultancy for commercialising the Agricultural Sector



## SCOPE OF SERVICES

● FEASIBILITY STUDIES ● DETAILED PROJECT REPORTS ● PROJECT APPRAISALS ● MARKET STUDY ● MONITORING AND EVALUATION STUDIES.

For further details, contact :
**The Senior Consultant**
**Agri Business Consultancy Services,**
**INDIAN OVERSEAS BANK,** Central Office
763 Anna Salai, Chennai 600 002
Ph : 8523582. Fax : 8523395, 8523372.

For Credit facilities, contact :
**The Senior Manager**
**Hi-Tech Agro Branch**
**INDIAN OVERSEAS BANK**
46/A 1st Main Road, West C.I.T. Nagar
Chennai 600 035. Ph : 4331192, 4330105

**Indian Overseas Bank**
**Good people to grow with**
Central Office : 763, Anna Salai, Chennai 600 002, India.
Over 1400 offices in India and abroad.
Visit us at http://www.iob.com

MADHU ADS/IOB/9/9

படிப்பகம்